₹10
fmpb

# அறைகூவல்

Volume 53 | Issue 4 | April 2023

*பின்பு அவர் எல்லாரையும் நோக்கி: ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன். – லூக்கா 9:23*

நான் உன்னைத் தெரிந்து கொண்டேன்
ஆகாய் 2:23
2023-ம் ஆண்டின் நோக்கம்

# சிலுவை சுமக்க

## தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்!



# ஆரம்ப வரிகள்...

## சிலுவையைச் சுமக்க சம்மதமா?



ஒரு மனிதன் பாரமான சிலுவையைச் சுமந்துகொண்டு பயணம் செய்துகொண்டிருந்தான். அந்தப் பயணத்தில் அவன் தான் தனியாக இருப்பதாக உணர்ந்தான். பின்னர் அங்கே சிலுவையைச் சுமந்துகொண்டுச் செல்லும் பிறரும் இருப்பதை உணர்ந்தான். ஆனால், அவர்கள் அனைவரும் தம்தம் சிலுவைகளை எளிதாக சுமந்துச்செல்வதுபோல் அவனுக்குத் தோன்றியது. அதனால் அவன் முறுமுறுக்கவும், முறையிடவும் ஆரம்பித்தான். எனவே, பாரத்தைக் குறைக்க தன் சிலுவையின் ஒரு சிறிய பகுதியை வெட்டிவிட்டு, அவன் தனது பயணத்தைத் தொடர்ந்தான். ஆனால், மீண்டும் அவன் தன் சிலுவை தனக்கு மிகவும் பாரமாக இருப்பதாக உணர்ந்தான். எனவே, மீண்டும் அவன் தனது சிலுவையின் மற்றொரு சிறிய பகுதியையும் வெட்டினான். இப்போது அதைத் தூக்கிச்செல்வது அவனுக்கு மிக எளிதாக இருந்ததால், மகிழ்ச்சியுடன் அவன்தன் பயணத்தைத் தொடர்ந்தான். தம்தம் சிலுவைகளைச் சுமந்துச்சென்ற அனைவரும் அவைகளை ஒரு ஆழமான பள்ளத்தாக்கின் குறுக்கே வைத்து, அவ்விடத்திலிருந்து மறுபுறத்திற்குக் கடந்துசென்றார்கள். ஆனால், சிறுசிறு பகுதியாக இருமுறை தன் சிலுவையை வெட்டின இம்மனிதனோ, அப்பள்ளத்தாக்கைக் கடக்க முடியாத அளவுக்கு தனது சிலுவை மிகவும் சிறியதாக இருப்பதை உணர்ந்து திகைத்தான். உதவியற்ற இச்சூழலில் அவன் ஆண்டவரை நோக்கிக் கூப்பிட்டான். ஆண்டவர் அவனுக்கு மனமிரங்கி, அப்பள்ளத்தாக்கைக் கடக்க உதவிசெய்தார்.

லூக்கா 9:23-ன்படி கிறிஸ்தவர்களாகிய நாம் நமக்கான சிலுவையை அனுதினமும் சுமக்க தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறோம். ஆண்டவரை நாம் ஏற்றுக்கொண்ட அந்த நாளே நமது இரட்சிப்பின் நாளாகும். நாம் இரட்சிப்பில் ஒவ்வொரு நாளும் வளர்ந்து, அடுத்த நிலைக்கு முன்னேறிச்செல்ல வேண்டும். அதாவது நம்மைநாமே வெறுத்து, நம் சிலுவையை எடுத்துக்கொண்டு, நாம் அவரை அனுதினமும் பின்பற்ற வேண்டும். லூக்கா 14:27-ல் இயேசு, “தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்” என்று கூறுகிறார். சிலுவையை நோக்கியே ஒரு கிறிஸ்தவன் தனது எஜமானராகிய கிறிஸ்துவைப் பின்பற்ற சவால் விடப்படுகிறார் - ஏனெனில், அங்குதான் கிறிஸ்து பாவத்தையும் மரணத்தையும் ஜெயித்தார். கிறிஸ்துவைப் பின்பற்றுவது என்பது அவரினிமித்தம் நமக்கு வரும் துன்பத்தையும் வேதனையையும் நாம் சகித்துக்கொள்வதாகும் (யோ.15:19). அவரை நம் வாழ்வில் பின்பற்றுவதற்கு விலைகிரயமாக நாம் நமது சுயத்தை முற்றிலுமாக வெறுத்து, நமக்கு அருமையாக தோன்றுபவைகளைத் தியாகம் செய்ய வேண்டும் (மத்.8:18-22; லூக்.14:26-33). ஆனால், அப்படிப்பட்ட வாழ்விற்குக் கிடைக்கும் வெகுமதியோ அதிக மகிமையானது (மத்.19:27-29; மாற்.10:29-30; 1பேது.1:3-9). மார்ட்டின் லூத்தர் கிங்கின் கூற்றின்படி, ‘நாம் சுமக்கும் சிலுவை நாம் இறுதியில் அணியப்போகும் கிரீடத்திற்கு முந்தினது’ என்பதை கிறிஸ்தவம் எப்பொழுதும் வலியுறுத்துகிறது. ஏனெனில், சிலுவையில்லாமல் கிரீடமில்லை (2தீமோ.2:7-12). இயேசுவைப் பின்பற்றும் இத்தகைய பாடுகள் நிறைந்த பயணத்தில் ஒருவேளை சற்று நாம் தடுமாறலாம்; சிலவேளைகளில் வீழ்ச்சியுமடையலாம். ஆனாலும் அந்நிலையில் ஒத்தாசைக்கு நாம் நமது இரட்சகரை நோக்கிக் கூப்பிடும்போது, அவர் நமக்கு உதவிசெய்ய எப்போதும் ஆயத்தமாக இருப்பதோடு, நமது எல்லா காயங்களையும் குணப்படுத்த தமது கிருபையையும், அன்பையும் அருளக் காத்திருக்கிறார். நாம் நமது சிலுவையைச் சுமந்துகொண்டு ஆண்டவரோடு பயணிக்கும்போது, அப்பாதையில் நம் கண்முன் பாவத்தில் தடுமாறி வீழ்ந்துகிடப்போரையும், பாதை தவறிச்செல்வோரையும் இரட்சிப்பின் சிலுவையை நோக்கிப் பயணிக்க கரம்கொடுப்போம். (ரோ.15:1). நாம் நமது பாவம், துக்கம், வியாதி, வலி மற்றும் தோல்விகளைச் சிலுவையடிவாரத்தில் வைத்துவிட்டு, மாறாக அங்கிருந்து இரட்சிப்பு, மகிழ்ச்சி, சுகம் மற்றும் வெற்றிகளை எடுத்துக்கொண்டு முன்னேறிச்செல்வோம்.

**- மெர்சி செல்வின்** *(தகவல் தொடர்புத்துறை)*

**தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்.**
**- லூக்கா 14:27**

**தம்மைப் பிரியப்படுத்தும்படி சிலுவையைச் சுமக்கும் அனைவர்மீதும் தேவன் கிருபை மிகுந்தவராய் இருக்கிறதினால், சிலுவையைத் தழுவி அதைப் பொறுமையுடன் தாங்குபவன் அச்சிலுவையின் சுமையை இலகுவாக உணருகிறான். அதுவே, அவனுக்கு ஆறுதலாகவும் அமைகிறது.**
**- புனித அல்ஃபோன்ஸ்**

**தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல.**
**- மத்தேயு 10:38**

**சிலுவையை நோக்கியே கிறிஸ்தவர் தனது எஜமானரைப் பின்பற்ற சவால் விடப்படுகிறார்: ஏனெனில், மீட்பின் எந்தப் பாதையும் அதைச் சுற்றி ஒரு மாற்றுப்பாதையை உருவாக்க முடியாது.**
**- ஹன்ஸ் உர்ஸ் வான் பல்தசார்**


# அறைகூவல்

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
**மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ**

ஆசிரியர்: S. ஜாண் பெர்லின்

| | |
|---|---|
| தனிப்பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |



*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*
**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*


**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**

**நமது தரிசனம்:**
சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

**நமது ஊழியம்:**
தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்து கொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

**feedbackfmpb@fmpb.org**
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.

# பொதுச்செயலாளரிடமிருந்து...



இயேசுகிறிஸ்துவை ஒருமுறைக்கூட அறியாத இந்தியரனைவரும் அவரை அறிந்திடச்செய்யும் உன்னதப்பணியில் எங்கள் உடன் பங்காளிகளுக்கு, உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நித்திய நாமத்தில் எனது அன்பின் நல்வாழ்த்துக்கள்!

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கிறிஸ்தவத்தின் அடித்தளமாக விளங்கிய நிகழ்வுகளை நாம் இங்கே நினைவு கூருகிறோம். இம்மாதத்தில் கிறிஸ்துவின் சிலுவை மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகிய இரண்டு முக்கியமான நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன. 1 கொரிந்தியர் 15:14-ல், “கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா,” என்று பவுல் கூறுகிறார். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் இல்லாமல் நாம் விசுவாசிப்பதற்கும், பின்பற்றுவதற்கும் எந்த முகாந்தரமும் இல்லை. மாற்கு 16-ம் அதிகாரத்தில், இயேசுவின் கல்லறையிடத்தில் வந்திருந்த மூன்று பெண்களும் மிகுந்த கவலையினாலும், துக்கத்தினாலும் நிறைந்திருந்தனர் என்றும், அவர்களுக்கு இயேசுவுடைய மரணத்தின் வலியோடுகூட அக்கல்லறையின் வாசலிலிருக்கும் கல்லை யார் அவர்களுக்காகப் புரட்டித்தள்ளுவான்? என்பதும் ஒரு பெரிய ஆதங்கமாக இருந்தது என்றும் பார்க்கிறோம். ஆனால் அதே அதிகாரம் 4-ம் வசனத்தில், “அவர்கள் ஏறிட்டுப் பார்த்தபோது, மிகவும் பெரிதாயிருந்த அந்தக் கல் தள்ளப்பட்டிருப்பதைக் கண்டார்கள்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதுபோல உயிர்த்தெழுந்த இயேசுவை நாமும் நோக்கிப்பார்க்கும்போது, நமது வாழ்விலும் நம்மை அழுத்திக்கொண்டிருக்கின்ற அசைக்க முடியாத பெரும் பாரமான கல் போன்ற சுமைகள் அனைத்தும் நம்மை விட்டு உருண்டோடி போம்.

*உங்களனைவருக்கும் மகிழ்ச்சியான ஈஸ்டர் நல் வாழ்த்துக்கள்!*

**ஜார்க்கண்டில் முதல் ஒராவன் ஆலயப் பிரதிஷ்டை:** ஜார்க்கண்டில் நமது இயக்கத்தின் சார்பாகக் கட்டப்பட்டுள்ள முதல் ஒராவன் ஆலயம் கடந்த பிப்ரவரி 24-ம் தேதியன்று கே.கே.நகர், சென்னை ஜெபக்குழுவினரால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

**சந்தால் மேளா:** நமது சந்தால் சாஹிப்கஞ்ச் பிராந்திய சந்தால் விசுவாசிகளுக்கான மேளா கடந்த பிப்ரவரி 25 முதல் 27-ம் தேதிகள் வரை ஜார்க்கண்டிலுள்ள பர்ஹர்வா என்ற இடத்திற்கு அருகே வைத்து நடைபெற்றது. அதில் சுமார் 7000 விசுவாசிகள் உற்சாகமாகக் கர்த்தரை ஆராதித்து, அவருடைய வார்த்தையைக் கேட்க ஆவலுடன் கூடி வந்தனர்.

**திருநெல்வேலி தென்னிந்திய திருச்சபைப் பேராயரின் மிஷனரிப்பணித்தள விஜயம்:** பிப்ரவரி மாதத்தில் 3 நாட்கள் திருநெல்வேலி மறைமாவட்ட தென்னிந்திய திருச்சபைப் பேராயர் மாமறைதிரு. A.R.G.S.T. பர்னபாஸ் அவர்கள், தனது மனைவியுடன் ஜார்க்கண்டிலுள்ள சந்தால் மற்றும் மால்தோ மக்களிடையே நடக்கும் ஊழியப்பணிகளைப் பார்வையிட்டார். பின்பு பேராயர் அவர்கள் புதிதாகக் கட்டப்பட்டுள்ள 2 ஆலயங்களை தேவநாம மகிமைக்கென பிரதிஷ்டை செய்ததோடு, நமது விடுதிகள், பள்ளிக்கூடம்,

கல்லூரிகள் மற்றும் மருத்துவமனை யாவையும் பார்வையிட்டுச் சென்றார். இந்த சந்திப்பு நமது மிஷனரிகளுக்கும், விசுவாசிகளுக்கும் பெரிதும் ஊக்கமளிப் பதாக அமைந்திருந்தது. இங்கு வருகை தந்த பேராயர் மற்றும் அவருடைய மனைவிக்கு நமது இயக்கத்தின் சார்பாக நன்றி கூறுகிறோம். மேலும் நமது இயக் கத்தின் தலைவரும், உபதலைவரும் அதே நாட்களில் தங்களது மனைவிகளுடன் ஊழியங்களைப் பார்வையிட்டு, ஒரு சில நாட்கள் அங்கே தங்கியிருந்தனர்.

**தூத்துக்குடி பேராயத்தின் உபவாச ஜெபம்:** மார்ச் 4-ம் தேதி தூத்துக்குடி பேராயத்தில் வைத்து நடைபெற்ற உபவாச ஜெபக்கூட்டத்தில் தேவ வார்த்தையைப் பகரும் வாய்ப்பு எனக்கு வழங்கப்பட்டது. இப்பேராயத்தைச் சார்ந்த போதகர்கள் மற்றும் விசுவாசிகள் அதிக எண்ணிக்கையில் அங்கே கூடிவந்து தேசத்திற்காகவும் திருச்சபைகளுக்காகவும் ஜெபித்தனர். தேசத்தைச் சந்திக்க இத்தகைய ஜெபங்கள் எல்லாத் திருச்சபைகளிலும் அதிகம் பெருக வேண்டும்.

**தூத்துக்குடி - சண்முகபுரம் மாநாடு:** தூத்துக்குடி, சண்முகபுரம் சி.எஸ்.ஐ. தேவாலயத்தில் மார்ச் 4 & 5-ம் தேதிகளில் தவசுக்கால மாநாட்டில் தேவ வார்த்தையைக் கொடுக்க கர்த்தர் எனக்கு உதவி செய்தார். இரண்டு காலை ஆராதனைகளிலும், அதோடு நடைபெற்ற இளைஞர் கூட்டத்திலும் தேவ வார்த்தையைப் பகர்ந்துகொண்டேன். கூட்டத்திற்கான ஏற்பாடுகளை அத்திருச் சபையின் போதகர் மற்றும் ஆலயக்குழு உறுப்பினர்கள் சிறப்பாகச் செய்திருந்தனர்.

**உயர் கல்வி கமிட்டிக்கூடுகை:** நமது மிஷனரிகளிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பப் படிவங்களிலிருந்து நிர்ணயிக் கப்பட்ட விதிமுறைகளின் அடிப்படையில் உயர் கல்விக்கான மிஷனரிகள் மற்றும் படிப்புகளை முடிவு செய்ய FMPB-ன் உயர் கல்வி கமிட்டி மார்ச் 10-ம் தேதி கூடியது.

**அருட்பொழிவு கமிட்டிக்கூடுகை:** அருட்பொழிவு கமிட்டிக்கூடுகை மார்ச் 10-ம் தேதி நமது மிஷனரிகள் மற்றும் சுதேச ஊழியர்களின் பெயர்ப்பட்டியலைச் சேகரித்து, அவர்களை இரு மறைமாவட்டங்களின் மூலமாக அருட்பொழிவு செய்வதற்குப் பரிந்துரை செய்தது. இவ்வாறு மிஷனரி களுக்கு அருட்பொழிவு வழங்குவதற்கு முன்வந்த பேராயர்களுக்கு FMPB தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

**பணித்தள மண்டலச்செயலர்கள் கூடுகை:** பணித்தள மண்டலச்செயலர்களின் ஜெபம் மற்றும் திட்டமிடல் கூடுகை நாக்பூர் பணித்தள அலுவலகத்தில் வைத்து மார்ச் 13 முதல் 17 வரை நடைபெற்றது. செயலர்கள் அனைவரும் தங்கள் மனைவிகளுடன் சேர்ந்து அதில் பங்கேற்றனர். 3 நாட்கள் அவர்களுடனிருக்க எனக்குக் கிடைத்த வாய்ப்பில் நாங்கள் ஒன்றாகக்கூடி ஜெபிக் கவும், நமது பணியின் முன்னேற்றத்திற் கான முக்கிய ஊழியப்பகுதிகளைப் பற்றி திட்டமிடவும் இக்கூடுகை பெரிதும் உதவியது.

**ஹாகாய் பயிற்சி:** இந்திய ஹாகாய் பயிற்சி அமைப்பு மூலம் நமது மிஷனரிகள் அனைவருக்கும் ஆவிக்குரிய எழுச்சிக்கான பயிற்சிக்கூடுகை நடத்துவது சம்பந்தமான அறிவிப்பை நான் ஏற்கனவே உங்களுக்கு எழுத்து மூலம் தெரிவித்திருந்தேன். இது 5 நாட்களுக்கான பயிற்சி. இதன் 2-ம் கட்ட பயிற்சி ஜான்சியில் வைத்து மார்ச் 13 முதல் 17 வரை நடத்தப்பட்டது. இதன் கடைசி நாளில் பயிற்சிப் பெற்றவர்களுடன் நானும் கலந்துகொண்டு அவர்களுக்கு அப்பயிற்சிச் சான்றிதழ்களை வழங்கினேன்.

**கலாச்சாரம் கடந்த ஊழியத்தொடர்பு பயிற்சி:** ‘கலாச்சாரம் கடந்த சூழலில் சுவிசேஷத்தை எவ்வாறு அறிவிப்பது’ என்பது மிஷனரிகளுக்கு அவசியமாகத் தெரிந்திருக்க வேண்டிய ஒரு பாடமாகும். இப்பாடம் பல ஆண்டுகளாக நமது மிஷனரி களுக்கும், புதிய மிஷனரிகளுக்கும் கற்பிக்கப் பட்டு வருகிறது. தற்போதுள்ள புதிய மிஷனரிகளுக்கு ஜான்சியிலுள்ள NIM-ல்

வைத்து இந்தப் பாடத்தை நான் கற்றுக் கொடுக்கிறேன். வெவ்வேறு கலாச்சாரங்களில் ஞானமாய் சுவிசேஷத்தை அறிவிக்க தேவன் நமது மிஷனரிகளைப் பயிற்றுவிப்பாராக!

### ஏப்ரல் மாத முக்கிய கூட்டங்களும், நிகழ்ச்சிகளும் -

**காக்கிநாடா கூட்டங்கள்:** ஏப்ரல் 1 முதல் 3 வரை காக்கிநாடாவிலுள்ள பாஸ்டர் பென்னியின் திருச்சபை ஊழிய இடங்களில் வைத்து இக்கூட்டங்கள் நடைபெற இருக்கின்றன.

**டிவிஷனல் செயலர்களின் ஜெபக்கூடுகை:** ஏப்ரல் 10 முதல் 13 வரை பெங்களூரில் வைத்து டிவிஷனல் செயலர்களோடு நானும் சேர்ந்து திட்டஜெபக்கூடுகையொன்று நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**அர்ப்பணிப்பு முகாம்:** ஏப்ரல் 14 முதல் 16 வரை வடக்கு தமிழ்நாடு மண்டலப் பகுதியைச் சார்ந்த ஊழிய அர்ப்பணமுள்ள வாலிபப் பிள்ளைகளுக்கான வாலிபர் கூட்டம் சென்னையில் வைத்து நடைபெற உள்ளது.

**களியக்காவிளை குடும்பக்கூடுகை:** ஏப்ரல் 22-ல் களியக்காவிளை விரிவுப்பணி பிரிவு - FMPB குடும்பக்கூடுகை நடக்க இருக்கிறது.

**நந்தூர்பார் விடுதிப்பிரதிஷ்டை:** மகாராஷ்டிரா, நந்தூர்பாரிலுள்ள சிறுமியர் விடுதியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் தேவநாம மகிமைக்காகவும், அங்குள்ள பிள்ளைகளின் நலனுக்காகவும் ஏப்ரல் 15-ல் பிரதிஷ்டை செய்யப்பட உள்ளது.

**மேட்டுப்பாளையம் விரிவுப்பணி செயலர்களின் குடும்பக்கூடுகை:** தமிழ்நாடு - பாண்டிச்சேரி விரிவுப்பணி முழுநேர மற்றும் கௌரவ செயலர்களின் குடும்பக்கூடுகை மேட்டுப்பாளையத்தில் வைத்து ஏப்ரல் 29, 30-ம் தேதிகளில் நடைபெற இருக்கிறது.

**தமிழ்நாடு மாநில முகாம் - 2023:** தேவ கிருபையால் தமிழ்நாடு மாநில முகாம் 2023, மே 18-ம் தேதி காலை 10 மணி முதல் 21-ம் தேதி காலை 8 மணி வரை சேலம், பெத்தேலில் வைத்து நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. நமது நாட்டு வரலாற்றின் முக்கியமான இக்காலக்கட்டத்தில் தாங்கள் தயைக்கூர்ந்து ஜெபத்துடன் திட்டமிட்டு இந்த முகாமிற்கு தாங்களும், தங்களுடன் பிறரையும் அழைத்துக்கொண்டு வருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

FMPB ஊழியத்திற்காக தாங்கள் ஏறெடுக்கும் கருத்தான ஜெபத்திற்காகவும், கொடுத்துவரும் நல் ஆதரவுகளுக்காகவும் உங்கள் யாவருக்கும் நன்றி கூறுகிறோம். தினந்தோறும் ஒருமுறையாவது அனைத்து FMPB மிஷனரிகளையும் உங்களது ஜெபத்தில் நினைவுகூரும்படி பட்சமுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தேவ ஊழியத்தில் தங்கள் சக ஊழியன்,



**அருட்திரு. S. ஜாண் பெர்லின்**

## FMPB - சிறுவர்களுக்கான வேதாகம தேர்வு - 2023




மாநில முகாமில் கலந்துகொள்ளும் அனைத்து சிறுவர்களையும் அங்கு நடைபெறும் மனப்பாட வசனப்போட்டியில் பங்கேற்க உற்சாகமாக அழைக்கிறோம்!

| | |
|---|---|
| LKG to II Std | மத்தேயு 5:1-10 |
| III Std to V Std | மத்தேயு 5:1-15 |
| VI Std to VIII Std | மத்தேயு 5:1-20 |



# தெரிந்தெடுக்கப்பட்டதின் நோக்கமும், தாக்கமும்

## I. தேவன் நம்மைத் தெரிந்துகொண்டதின் நோக்கங்கள்:

செருபாபேலுக்கு தேவ வாக்குத்தத்தமானது, 'நான் உன்னை முத்திரை மோதிரமாக வைப்பதற்காகத் தெரிந்துகொண்டேன்' என்பதாகும் (ஆகாய் 2:23). 'செருபாபேல்' என்ற பெயர் மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் வருகின்ற இயேசுகிறிஸ்துவின் வம்சவரலாறு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது (மத்.1:12). இந்த செருபாபேல், சாலோமோன் ராஜாவின் வழித்தோன்றலில் வந்த எகொனியா ராஜாவின் பேரன். இவர் யூதாவின் ராஜாவாக ஆட்சி செய்யவில்லை என்றாலும், தேவன் இவருக்கு சிங்காசனம் அல்லது கிரீடம் அல்லது செங்கோல் ஆகியவற்றுடன் ஒப்பிடக்கூடிய ஒரு முத்திரை மோதிரத்தின் அதிகாரத்தைக் கொடுத்திருந்தார். தேவன் தமது அழைப்பிற்குச் செவிகொடுப்பர் என்று தாமறிந்த தம்முடைய மக்களை உலகத்தோற்றத்துக்கு முன்பே அவர் தெரிந்தெடுத்துள்ளார் என்பதை எபேசியர் 1:4-ன் மூலம் நாம் அறியலாம்.

**நாம் தேவனை முதலாவது தெரிந்து கொள்ளவில்லை:** தெரிந்துகொள்ளுதலின் துவக்க முயற்சி முதலாவது தேவனிடமிருந்தே வந்தது என்பதை யோவான் 15:16-ல் பார்க்கலாம். மாறாக, நாம் அவரை முதலாவது தெரிந்தெடுத்திருந்தால் என்னவாகும்? தங்களது தலைவர்களை அல்லது பிரபலமானவர்களை சிலைகளாகவோ, விளையாட்டு வீரர், வீராங்கனைகளை முன்மாதிரிகளாவோ அல்லது அறிவு ஜீவிகளை வழிகாட்டிகளாகவோ தெரிந்தெடுக்கும் மக்கள் நம்மில் அநேகர் இருக்கிறார்கள். ஆனால், அப்படிப்பட்டவர்களாக நாமும் இருப்பதில் எந்தப் பிரயோஜனமும் இல்லை. எனவேதான், தேவன் நம்மை நேசிக்க அவரே முன்முயற்சி எடுத்து நம்மைத் தெரிந்தெடுத்தார். அவர் ஏன் நம்மை முதலாவது தெரிந்துகொண்டார் என்பதின் நோக்கங்களைப் பற்றி பின்வருமாறு காணலாம்.

**1. அறிய வாய்ப்பில்லை:** ஒரு பிரபலமானவரால் ஒரு தனி மனிதனைக் குறித்து அறிய வாய்ப்பில்லை. ஆனால் தேவன் நம்மை நன்கு நேசித்தறிந்து தெரிந்தெடுத்திருக்கிறார். அவர் நம்முடன் ஒரு பிரத்யேகமான அல்லது விசேஷமான அன்பின் உறவை வைத்துக்கொள்ள தனித்தனியாக நம்மைப் பெயர் சொல்லி அழைத்து அறிந்திருக்கிறார் (ஏசா.43:1; 1பேது.2:9). அவரை விசுவாசிக்கிற நமது தலையிலுள்ள மயிரெல்லாம் அவரால் எண்ணப்பட்டிருக்கிறது; நம்முடைய கண்ணீரெல்லாம் அவருடைய கணக்கில் இருக்கிறது. ஏனெனில், அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நாம் விசேஷித்தவர்கள், விலையேறப்பெற்றவர்கள் (லூக்.12:7;

சங்.56:8; மத்.10:31). **2. இணைய வாய்ப்பில்லை:** உலகின் தலைசிறந்த தலைவர்களோடு நம்மால் தொடர்ந்து தொடர்பு கொள்ள அல்லது கூடவே இணைந்திருக்க வாய்ப்பில்லை. இது ஒருவகையான தொலைதூர உறவு. அவர்களுடைய தனிப்பட்ட தொலைபேசி எண்களோ அல்லது பிற தொடர்பு விபரங்களோ அவ்வளவு எளிதாக நமக்குக் கிடைக்காது. நாம் ஒரு ரசிகராகவோ அல்லது பின்தொடர்பவராகவோ பொதுத்தொடர்பில் அவர்களோடு இணைக்கப்படலாம், அவ்வளவுதான். ஆனால், தேவனைப் பின்பற்றுகிற நாம் சலுகைகள், உரிமைகள் மற்றும் பொறுப்புகளுடன்கூடிய ஜீவனுள்ள தேவனின் சொந்த பிள்ளைகளாக எப்போது வேண்டுமானாலும் தேவனோடுக்கூட உரிமையாகத் தொடர்பு கொண்டு இணைந்திருக்க முடியும் (யோ.1:12). **3. உடன்படிக்கைக்கு வாய்ப்பில்லை:** அதுபோல் பிரபலமானவர்களுக்கும், அவர்களின் ரசிகப்பெருமக்களுக்கும் இடையில் எந்தவொரு ஒப்பந்தமும் இருக்க வாய்ப்பில்லை. ஆனால் தேவனைப் பின்பற்றுபவர்களோ, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் முத்திரையிடப்பட்ட அவருடைய புதிய உடன்படிக்கையைச் சார்ந்தவர்கள் (லூக்.22:20). அதிலும் நாம் அல்ல, அவரே நம்மோடு உடன்படிக்கை செய்து அந்த உடன்படிக்கையை என்றென்றைக்கும் காக்கிறவராகவும் இருக்கிறார். **4. உரையாட வாய்ப்பில்லை:** பிரபலங்கள் பொது ஊடகங்கள் மூலம் மக்களைத் தொடர்பு கொள்வார்கள். ஆனால் அவை ஒருவழி தொடர்பே. அதன் மூலம் நாம் அவர்களுக்குப் பதிலளிக்க நினைப்பது அவர்களைச் சென்றடையாது. ஆனால், நமது பரம பிதாவோ தமது ஒவ்வொரு விசுவாசியுடனும் உரையாடுகிறார். நல்ல மேய்ப்பனின் ஆடுகளாக நாமும் அவருடைய குரலைக் கேட்க முடிகிறது (யோ.10:27). அவரும் நமது ஜெபங்களைக் கேட்கிறதினால், மாம்சமான யாவரும் அவரிடத்தில் வருகிறார்கள் (சங்.65:2). அவர் நம்மோடு உரையாட அவருடைய ஜீவவார்த்தைகளை நமக்குக் கொடுத்திருக்கிறார். **5. கரிசனை காட்ட வாய்ப்பில்லை:** ஒரு கதாநாயகனின் புதிய படமொன்று வெளியானபோது, உற்சாகமடைந்த அந்த கதாநாயகனின் ரசிகன் தனது மகிழ்ச்சியை ஓடும் டிரக் மீது ஏறி நின்று நடனமாடி வெளிப்படுத்தும் நேரத்தில், டிரக்கிலிருந்து கீழேவிழுந்து இறந்துவிட்டாரென்றால், இறந்த நபர் மீதோ அல்லது அவரை இழந்திருக்கும் குடும்பத்தினர் மீதோ யாரும் கரிசனை காட்ட வாய்ப்பில்லை. ஆனால் தேவன் நம்மை அப்படியல்ல, அவர் நம்மை கரிசனையுடன் விசாரிக்கிறவர் என்று 1பேதுரு 5:7-ல் பேதுரு குறிப்பிடுகிறார். விபத்து நேரத்தில் மட்டுமல்ல, நம்முடைய அன்றாடக வாழ்வின் கரிசனைகளையும் அவரிடம் கொண்டுபோகும்போது, தேவன் அவைகளையும் கருத்தாய் விசாரிக்கிறார்; பதிலளிக்கிறார். **6. ஆறுதலளிக்க வாய்ப்பில்லை:** தேவன் தமது ஜனங்களுக்கு எப்பொழுதுமே ஆறுதலளிப்பவர் (2கொரி.1:3). அவர் நொறுங்குண்டதும் நருங்கொண்டதுமான இருதயத்தாருக்கு சமீபமாயிருக்கிறார். அவருடைய அன்பு, ஞானம், பாதுகாப்பே அவர் அவரது பிள்ளைகள்மீது காட்டும் மாறாத ஆறுதல் ஆகும். ஆனால், இப்படிப்பட்ட ஆறுதலை ஒருவேளை பிரபலங்கள் தொலை தொடர்பு சாதனங்கள் மூலமே அளிக்கக்கூடும். **7. நம்ப வாய்ப்பில்லை:** இந்த மானிட பிரபலங்கள் யாவரும் களிமண்ணின் கால்களைக் கொண்டுள்ளதால், எளிதில் தோல்வியடைவதோடு, தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ளவும் இயலாதவர்கள். அவர்களை நம்ப வாய்ப்பில்லை. ஆனால், நித்திய கன்மலையாகிய கர்த்தரோ, நமக்கு அடைக்கலமும் ஆதாரமுமானவர் (உபா.33:27). அவர் மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவர்கள் வெட்கப்பட்டுப் போவதுமில்லை; கைவிடப்படுவதுமில்லை.

**தேவப்பணியின் சிறப்பு:** உலகப் பணியில் இந்திய நிர்வாக சேவை அதிகாரிகள் (IAS) தங்களது நியமனம், தேசத்திற்குச் சேவை செய்ய தங்களுக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பு இவைகளைக் குறித்து பெருமிதம் கொள்வர். ஆயினும், அனைத்து IAS அதிகாரிகளும் மாநில அரசின் தலைமைச் செயலராகவோ அல்லது பிரதமரின் முதன்மை செயலராகவோ ஆகமுடியாது. ஒவ்வொரு அதிகாரியும் அரசாங்கத்தின் சொத்தாகக் கருதப்பட்டாலும், அனைத்து அதிகாரிகளும் அவரவர் நிபுணத்துவம், அனுபவம் மற்றும் தேவை ஆகியவைகளின் அடிப்படையில்தான் தங்களுக்குத் தகுந்த அளவிலான சேவையைப் பெற முடியும். ஆனால் நமது அனைத்து விசுவாசிகளில் மட்டும்தான், ஆண்களும் பெண்களுமாக தங்கள் வயது, அனுபவம், கல்வி மற்றும் சூழல் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் அனைவரும் தேவப்பணியில் ஒன்றாக இணைந்து சேவை புரிகின்றனர். எனவே, தேவப்பணியில் விசுவாசிகளாகிய நாம் கருத்துடன் செய்ய வேண்டியவைகளைப் பற்றிக் கீழே காணலாம்.

**1. ஜெபிப்போம்:** “அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்” என லூக்.10:2-ல் கூறப்பட்டுள்ளபடி, அறுவடைப்பணிக்கு தேவன் ஆட்களை அனுப்பித்தரவும், புதிதாய் அப்பணியில் சேர்ந்திருப்போருக்காகவும், பணித்தளங்களில் கடினமாய் உழைத்து ஆத்தும ஆதாயம் செய்து கொண்டிருப்போருக்காகவும் விசுவாசிகளாகிய நாம் அனுதினமும் ஜெபிக்க வேண்டும். **2. சாட்சியாயிருப்போம்:** மனந்திரும்பி, கிறிஸ்துவுக்குள் மறுபடியும் பிறந்த விசுவாசிகளாகிய நாமனைவரும், உலகில் தேவனின் சாட்சிகளே (அப்.1:8). நமது வார்த்தைகள், செயல்கள், நடத்தை, அணுகுமுறை, உறவுகள் மற்றும் வாழ்க்கை முறை ஆகியவை தேவனின் அன்பு, ஞானம், கருணை, இரக்கம் மற்றும் நற்குணங்களைப் பிரதிபலிக்க வேண்டும். இவைகளை உள்ளடக்கி வேறு வார்த்தைகளில் கூறவேண்டுமானால், மத்தேயு 5:13-16-ம் வசனங்களின்படி நாம் பூமிக்கு உப்பாகவும், உலகிற்கு ஒளியாகவும் இருக்க வேண்டும். **3. சீஷர்களை உருவாக்குவோம்:** விசுவாசிகளாகிய நாம் பிறரை சீஷர்களாக உருவாக்கும் சீஷர்களாக இருக்க அழைக்கப்படுகிறோம் (மத்.28: 18-20). 2 பேதுரு 3:9-ன்படி, கர்த்தரின் விருப்பம் நாம் ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பி, அவரை அறிகிற அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதே. மேலும் அனைத்து பழங்குடியினர், மக்களினங்கள், மொழிகள், நாடுகளைச் சேர்ந்த விசுவாசிகள் யாவரும் சீஷர்களாக ஒன்றுக்கூடி பரலோகத்தில் தேவனை ஒருமித்து ஆராதிக்க வேண்டும் (வெளி.7:9). எனவே அதற்காக சீஷர்களை உருவாக்குவதே நமது விருப்பம், வாஞ்சை, முன்னுரிமை மற்றும் வாழ்வின் நோக்கமாக இருக்க வேண்டும்.

## II. தேவன் நம்மைத் தெரிந்துகொண்டதினால் ஏற்படும் தாக்கங்கள்:

தேவனுடைய தெரிந்தெடுப்பு என்பது ஏதேச்சையான ஒன்றாகவோ அல்லது பலவற்றில் ஒன்று என்றோ இல்லாமல், மிகவும் குறிப்பான தெரிந்தெடுப்பாகும். தேவன் தமது ஒவ்வொரு பிள்ளைகளையும் தனித்துவமாக, குறிப்பாக மற்றும் அவரது ராஜ்ய நோக்கத்திற்காகத் தெரிந்தெடுக்கிறார்.

**தேவ சித்தம் செய்ய தெரிந்தெடுக்கிறார்:** அனனியா சவுலை நோக்கி: நமது முன்னோர்களின் தேவன் உன்னை முன்னமே தெரிந்துகொண்டார் (அப். 22:14) என்றான். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் சீஷர்களைத் துன்புறுத்தி, மிரட்டி, சிறையில் அடைத்து,

காயப்படுத்திக் கொன்ற சவுலை சமாதானப் படுத்துவதற்கோ அல்லது அமைதிப்படுத்து வதற்கோ அல்ல, தேவ ராஜ்ய நோக்கத்தின் படி தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கு தேவன் சவுலாகிய பவுலைத் தெரிந் தெடுத்தார்.

**தேவன் தமக்கென பிரித்தெடுக்கிறார்:** பரிசுத்தம் என்றால், அர்ப்பணிக்கப்படுதல் அல்லது பிரித்தெடுக்கப்படுதல் என்பதாகும் (1 பேது.1:15,16). தெரிந்தெடுக்கப்பட்டவர்கள், அதாவது பிரித்தெடுக்கப்பட்டவர்கள் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டுக்காணப்பட தேவனால் முன்குறிக்கப்படுகின்றனர். 2தீமோ.2:4-ல் கூறப்பட்டிருப்பதின் பிரகாரம், சிவில் விவகாரங்களில் சிப்பாய்கள் தலையிட முடியாது. ஏனெனில், மக்கள் தொகையுடன் ஒப்பிடும்போது சிப்பாய்கள் ஒரு சிலரே. அதுபோல் சட்டப்பூர்வமான, அனுமதிக்கப்பட்ட, சரியான, நல்ல பல விஷயங்கள் அனைத்து மக்களுக்கும் பொது வானதாக இருந்தாலும், பிரித்தெடுக்கப் பட்டவர்களுக்கு அவை எல்லாவற்றையும் அநுபவிக்க அதிகாரமிருந்தாலும், எல்லாம் தகுதியாயிராது (1கொரி.6:12; 10:23).

**இக்காலத்திற்கு உதவியாயிருக்க தெரிந்தெடுக்கிறார்:** மொர்தெகாய் எஸ்தரிடம், ‘இப்படிப்பட்ட காலத்துக்கு நீ உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜ மேன்மை கிடைத்திருக்கலாம்’ (எஸ்தர் 4:14) என்று சொன்னான். எஸ்தர் உட்பட அவளோடு இருந்தவர்கள், ‘சகலத்தையும் தேவ சித்தப்படி செய்வதற்கான நோக்கத்திற் காக’ தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் (எபே.1:12). தன்னைச் சுற்றி நடந்த தற்செயலான நிகழ்வுகளால் எஸ்தர் ராணியாக மாற வில்லை. அவள் அந்த சூழ்நிலையில் ராணியாக தேவனால் ஏற்படுத்தப்பட தெரிந்தெடுக்கப்பட்டாள். எனவே, நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி தேவன் நம்மையும் தெரிந்தெடுத்தி ருக்கிறார் என்பதை நாம் உணர்ந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ளப்படி செயல்பட்டு, தேவன் நம்மைத் தெரிந்துகொண்டதின் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

**1. அவசரமறிந்து செயல்படுவோம்:** விளைப்பொருள் விளைந்தவுடன் அறுவடை செய்ய வேண்டும். தாமதிப்பது தானியங் களை அழுகச்செய்திடும். உள்ளூர் சபைகளில் மிஷனரிப்பணியின் அவசியம் தாமதிக்கப்படும்போது, ஜனங்கள் வெறுமனே வளர்ந்து, தரிசனம் பெற தவறிவிடுகிறார்கள். சபையிலுள்ள குழந்தைகள் மிஷனரிகளின் வாழ்க்கை வரலாறுகளைக் கற்காமலும், வாலிபர்கள் ஊழியங்களைக் குறித்து ஒரு சரியான வெளிப்பாடு இல்லாமலும், பெரும்பாலானவர்கள் ஊழியத்தின் முக்கியத்துவம் மற்றும் முன்னுரிமை பற்றி தெரியாமலும் வளருகிறார்கள். அவர்களுக்கு மிஷனரிப்பணியின் அவசரம் நம்மால் எடுத்துரைக்கப்பட வேண்டும். அல்லது திரளான ஆத்துமாக்கள் வீணான பாவ வாழ்க்கையில் அழிந்து போவார்கள். **2. வாய்ப்பு காரணிகளை நம் வசமாக்கு வோம்:** எங்கெல்லாம் சுவிசேஷத்திற்கு திறந்தவாசல் காணப்படுகிறதோ, அவ் விடங்கள் உடனடியாகப் பயன்படுத்தப்பட வேண்டும். வாலிப வயதில் கலாச்சாரம் கடந்து பணித்தளங்கள் செல்லக்கூடியவர்களுக்கும், இடம்பெயர்ந்து செல்வோருக்கும் இது சாலப் பொருந்தும். திருமணமாகி, தொழில்களில் நிலைநிறுத்தப்பட்டுவிட்டால், அவ்வாறு செல்வது சற்று கடினமாகிவிடும். எனவே, வாய்ப்புகள் நம்மை நோக்கிவரும்போது, அவைகளை நம் வசப்படுத்தி, தேவசித்தம் செய்வோம். **3. தேசிய சூழலைச் சாதக மாக்குவோம்:** தேசம் மாறிக்கொண்டே இருக்க பல காரணங்கள் உள்ளன. சிலர் தேவராஜ்ய வளர்ச்சிக்கான வாய்ப்பைத் தருகிறார்கள். சிலர் அதற்குத் தடையாக இருக்கிறார்கள். உதாரணமாக, மதமாற்ற தடைச்சட்டம் - சுவிசேஷம் அறிவித்தல் மற்றும் பிற சுவிசேஷப்பணிகளின் முயற்சி களுக்குத் தடையாக அமைகிறது. மக்கள்

பல தொழில் வாய்ப்புகளைத் தேடி இடம்பெயர்கின்றனர். உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களிலிருந்து தொழிலாளர்கள் வேலைதேடி தமிழ்நாட்டிற்கு இடம்பெயர்கின்றனர். அவ்வாறு இடம் பெயர்வோர் நற்செய்திக்கு திறந்தமனதோடு காத்திருக்கின்றனர். எனவே சூழலுக்குச் சாதகமாக நாம் அவர்களைச் சந்திக்கவும், அவர்களுக்காகச் செயல்படவும் தீர்மானிக்க வேண்டும். **4. உலகளாவிய சூழலையும் சொந்தமாக்குவோம்:** திருச்சபையும், அதன் மிஷனரிப்பணிகளும் உலகளாவியது. இயேசுகிறிஸ்துவும், அவருடைய நற்செய்தியும் முழு மனித குலத்திற்குமானது. எனவே, கல்வி அல்லது வேலை அல்லது வியாபார நோக்கிற்காக தொலைதூர நாடுகளுக்கு நாம் பயணிக்கும் வேளையிலும் தேவன் வாய்ப்பளிக்கும்போது சுவிசேஷத்தை நாம் எங்கும் எவருக்கும் எடுத்துரைப்போம்.

தெரிந்தெடுக்கப்பட்டதின் நோக்கத்தையும் தாக்கத்தையும் அறிந்த நாம், அனுதினமும் அவர் சித்தம் செய்யும் சீஷர்களாய் அவரவர் தம்தம் சிலுவையை எடுத்துக்கொண்டு, அவர்பின் சென்றிட தேவன் நம்மை அழைக்கிறார். இவ்வுலகில் அவரைப் பின்பற்றுவோருக்கு இரு விதமான வாய்ப்புகள் உண்டு. ஒன்று அவருக்கு ரசிகர்களாகவே வாழ்ந்து முடிக்கலாம்; மற்றொன்று சிலுவை சுமக்கும் சீஷர்களாக வாழலாம். அவருடைய சீஷர்களாக வாழ தேவன் நம்மைத் தெரிந்துகொண்டதின் நோக்கமும், அவ்வாறு தெரிந்துகொள்ளப்பட்ட நமது வாழ்விலிருந்து ஏற்படும் தாக்கமும் நம் தேசத்தில் பேரதிர்வை கொண்டு வர நாம் ஜெபத்தோடு கருத்தாய் செயல்பட செயல்வீரர்களாக ஏகோபித்து எழும்பிடுவோம். தேவ நாமம் மகிமைப்படட்டும்!

**– அருட்திரு. அறிவர். J.N. மனோகரன்,**
தெற்காசிய பிராந்திய இயக்குனர்,
சர்வதேச சமூக வேதாகம கல்வி நிறுவனம்.




சென்னை – கே.கே.நகர் பகுதியிலிருந்து 6 பேர் ஜார்க்கண்ட் மாநில தீன்பஹாட் பணித்தள மதன்சாகி கிராம ஒராவன் இன விசுவாசிகளுக்குக் கட்டப்பட்ட முதல் ஆலயத்தைக் கடந்த 24.02.2023 அன்று பிரதிஷ்டை செய்யச் சென்றோம். அப் பிரதிஷ்டை ஆராதனையில் ஆலயம் நிரம்ப விசுவாசிகள் கலந்துகொண்டனர். இந்த ஆலயத்தைக் கட்ட உதவிய திருமதி. ஜெமி விக்டர் அவர்கள் குடும்பத்திற்காக ஆண்டவருக்கு நன்றி கூறுகிறோம். மறுநாள் சாஹிப்கஞ்ச் பிராந்திய சந்தால் மேளாவில் கலந்துகொண்டு, அந்த திரளான சந்தால் விசுவாசிகளின் விசுவாச வாழ்க்கையைக் கண்டு ஆண்டவருக்கு நன்றி கூறினோம். தொடர்ந்து சந்த்ர கோடா மருத்துவமனையையும், கங்கு பாடா சிறுமியர் விடுதியையும், சப்பாண்டே சிறுவர் விடுதியையும், அங்குள்ள ஊழியர்களையும் சந்தித்து ஜெபித்துவர ஆண்டவர் கிருபை செய்தார். பர்ஹர்வாவிலிருந்து புறப்பட்ட சிறிது நேரத்தில் காரின் டயர் வெடித்தபோதிலும் கர்த்தர் எங்களை அற்புதமாகப் பாதுகாத்தார். பின்பு 26.02.2023 ஞாயிறன்று கல்கத்தாவில் ஒரு ஆலய ஆராதனையில் கலந்துகொண்டு, எங்களது சாட்சிகளையும் தேவசெய்தியையும் பகர்ந்தளிக்க ஆண்டவர் உதவி செய்தார். கலந்துகொண்ட அனைவரும் அதிக ஜெப பாரத்துடன் சென்னை திரும்பினோம். தேவனுக்கே மகிமை!

# வெள்ளி விழா கொண்டாட்டம்!












குஜராத்-ஜாவ்டாவிலுள்ள புனித தாமஸ் ஆங்கிலப்பள்ளியின் வெள்ளி விழா பிப்ரவரி 18, 2023 அன்று அப்பள்ளி வளாகத்தில் வைத்து கொண்டாடப்பட்டது. அப்பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், உடன் பணியாளர்கள் மற்றும் பல்வேறு கிராமங்களைச் சார்ந்த மக்கள் வெகுதொலைவிலிருந்து பயணம் செய்துவந்து இவ்விழாவில் திரண்டதோடு, சுமார் 2000 முதல் 2500 பேர் இதில் கலந்துகொண்டனர். நமது இப்பள்ளியின் கணிதப்பாட ஆசிரியையான திருமதி. ஜாய் பெர்லின் முன்னிலையில் பிள்ளைகள் சில பாடல்களைப் பாட, அதைத் தொடர்ந்து ஆராதனை நமது முன்னாள் மாணவர்களின் ஆசீர்வாத இசைக்குழுவினரால் சிறப்பாக நடத்தப்பட்டது. இவ்விழா நிகழ்வு பேராயர் மாமறைதிரு. சில்வான்ஸ் S. கிறிஸ்டியன் மற்றும் நமது பொதுச்செயலாளர் அருட்திரு. ஜாண் பெர்லின் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்றது. நமது மூத்த ஓய்வுபெற்ற மிஷனரி திரு. கிறிஸ்டோபர் தாமஸ் மற்றும் வெள்ளி விழா குழு கமிட்டி அங்கத்தினர்கள் யாவரும் கூடி அவர்களுக்கு மாலை அணிவித்து வரவேற்றனர். பிற ஏனைய முக்கியஸ்தர்களும் மலர் மாலைகள், பூங்கொத்துகள் மற்றும் சால்வைகள் அணிவித்து வரவேற்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். கலாச்சார நடனமாகிய டாங்கி, பிள்ளைகளின் இனிய இசையுடன் கூடிய பாடல்கள் மற்றும் அங்குள்ள ஆசிரியைகள், புனித தாமஸ் ஆங்கிலப்பள்ளியின் குடும்பத்தினர் மற்றும் முன்னாள் மாணவர் சங்க உறுப்பினர்களின் இதர நிகழ்ச்சிகள் யாவும் இவ்விழாவிற்கு மேலும் அழகு சேர்த்தன. இவ்விழா கொண்டாட்டமானது பேராயர் மாமறைதிரு. சில்வான்ஸ் S. கிறிஸ்டியன், பொதுச்செயலாளர் அருட்திரு. ஜாண் பெர்லின் மற்றும் நமது மூத்த ஓய்வுபெற்ற மிஷனரி செல்வி. மேரி ஸ்டெல்லா அக்கா ஆகியோரால் ஒளியேற்றப்பட்டு துவங்கப்பட்டது. தற்காலம் அப்பள்ளியில் பயிலும் மாணவர்களும், முன்னாள் மாணவர்களும் நடனங்கள், பாடல்கள் மற்றும் பிற நிகழ்ச்சிகளை அரங்கேற்றியது, மிகவும் பாராட்டத்தக்கதாக அமைந்தன.

மேற்கு மண்டலச் செயலரான அருட்திரு. ஜோசப் துரைராஜ் அவ்விழாவிற்கு வருகை தந்திருந்தோரை முறையே வரவேற்றார். ஜாவ்டா சபை பாஸ்ட்ரேட் அங்கத்தினர்களும் நமது சிறப்பு விருந்தினரை நன்கு வரவேற்று உபசரித்தனர். தலைமையுரையை நமது இயக்கப் பொதுச்செயலாளர் கொடுக்க, அப்பள்ளியை வாழ்த்தி தாபி மாவட்ட சட்டமன்ற உறுப்பினரான திரு. மோகன்பாய் கோக்னி, தென் குஜராத் ஒருங்கிணைப்பாளர் அருட்திரு. கிரண்கமித் மற்றும் மவுண்ட் ஆலிவ் பள்ளியின் இயக்குனரான அருட்திரு. அனில்பாய் கோக்னி ஆகியோரும் தங்களது வாழ்த்துரைகளை வழங்கினர். குஜராத் மாநில பிராந்திய முன்னேற்றப்பணி செயலரான திரு. ஆஜுபாய் வசாவா அவர்களும் இவ்விழாவில் கலந்துகொண்டார். இவ்வெள்ளி விழாவிற்கான தேவ செய்தியை மாமறைதிரு. சில்வான்ஸ் S. கிறிஸ்டியன் அவர்கள் வழங்கியதுடன், குஜராத்தில் FMPB ஆற்றியுள்ள இச்சிறப்பான கல்விப்பணிக்களுக்காக நன்றி தெரிவித்து, இத்துடன் FMPB தன் பணியை நிறுத்தி விடாமல், தங்களுடன் கைகோர்த்து கல்லூரிகளையும் திறப்பதின் மூலம் உயர்கல்வியின் நோக்கங்களை மற்றும் பல நற்செயல்களை முன்னெடுத்துச்செல்ல அது ஏதுகரமாக இருக்கும் எனவும் கூறினார். முன்னாள் மாணவர்களும் தங்களது கடந்த கால பள்ளி மற்றும் விடுதி அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டதுடன், அப்பள்ளி தங்களது வாழ்வின் வெற்றிக்கு ஆற்றிய முக்கிய பங்கிற்காக தங்களுடைய நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தனர். அப்பள்ளியின் வரலாற்று சரித்திரத்தை அங்கு முன்னாள் தலைமை ஆசிரியைகளாகப் பணியாற்றிய நமது மிஷனரி சகோதரிகளான திருமதி. கனகநேசம் மற்றும் திருமதி. ஜோதி புஷ்பராஜ் பகிர்ந்து கொண்டனர். 2022-ம் வருடத்தில் 10-ம் &12-ம் வகுப்புகளில் முதலிடம் பெற்ற மாணவர்களுக்கு நமது பணித்தளச் செயலர் அருட்திரு. சாலமோன் ஞானசேகர் பரிசுப்பொருட்களை வழங்கி, உற்சாகமூட்டினார். இவ்விழாவிற்கான நன்றியுரையை அப்பள்ளியின் தற்போதைய தலைமையாசிரியர் திரு. ஹரிபாபு குந்த்ரா வழங்கினார். மாணவர்களுக்கான கணினி ஆய்வகம் மற்றும் ஸ்மார்ட் போர்டு வசதிகளை நமது சிறப்பு விருந்தினர் துவங்கி வைத்தார். இவ்வாறு இவ்விழாக் கொண்டாட்டம் மதிய அருஞ்சுவை உணவுப் பரிமாற்றத்துடன் இனிதே நிறைவுற்றது. “இது கர்த்தராலே ஆயிற்று, இது நமது கண்களுக்கு ஆச்சரியமாய் இருக்கிறது.” புனித தாமஸ் ஆங்கிலப்பள்ளி குடும்பத்தினராகிய எங்களுக்காக தாங்கள் ஏறெடுக்கும் ஜெபங்களுக்கு மிக்க நன்றி கூறுகிறோம்.

**- புனித தாமஸ் ஆங்கிலப்பள்ளி,** ஜாவ்டா.

## மகிமைக்குள் பிரவேசித்தார்



திரு. தங்க பாண்டியன் (வயது - 84) அவர்கள், 26.02.2023 அன்று தேவராஜ்யத்திற்குள் பிரவேசித்தார்கள். அதே நாளில் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையோடு நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். இவர் சென்னை- கே.கே.நகர் பகுதியில் மூத்த ஜெபக்குழுத்தலைவராகச் சிறப்புடன் பணியாற்றியவர். வீடுகளைச் சந்தித்து ஜெபிப்பதிலும், காணிக்கை சேகரிப்பதிலும் தன்னை அர்ப்பணித்தவர். நல்லதொரு ஜெபவீரர். மற்றவர்களைக் கனப்படுத்துகிறவர். இவரது நல்வாழ்விற்காய் கர்த்தருக்கு நன்றி கூறுகிறோம். அண்ணன் அவர்கள் விட்டுச்சென்றுள்ள அவரது பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் ஆறுதலுக்காய் ஜெபிப்போம்.







# சந்தால் மேளா 2023

*"இதினிமித்தம் கர்த்தாவே, ஜாதிகளுக்குள்ளே உம்மைத் துதித்து, உம்முடைய நாமத்திற்குச் சங்கீதம் பாடுவேன்."*

தேவன் செய்த அவருடைய மகத்தான செயல்களுக்காகவும், பொழிந்தருளிய ஆசீர்வாதங்களுக்காகவும் நன்றி செலுத்துகிறோம். கோவிட்-19-னின் காரணமாக, கடந்த இரண்டு ஆண்டுகளாக எங்கள் சந்தால் சாஹிப்கஞ்ச் பிராந்திய வருடாந்திர மாநாட்டை (மேளாவை) நடத்த முடியவில்லை. மூன்று வருட இடைவெளிக்குப்பிறகு, எங்கள் சாஹிப்கஞ்ச் பிராந்தியத்தின் வருடாந்திர மாநாடு - 2023 பிப்ரவரி 24 முதல் 26-ம் தேதிகள் வரை பத்னா பணித்தள தெல்பிட்டா கிராமத்தில் வைத்து நடத்தப்பட்டது. இது நமது இயக்கத்தின் சந்தால் திருச்சபைகளின் வரலாற்று நிகழ்வுகளில் ஒரு மைல்கல் போன்றதாகும். இதில் 1400 வாலிபர்களும், 1500 சிறு பிள்ளைகளும் உட்பட 6700-க்கும் அதிகமான விசுவாசிகள் கலந்துகொண்டனர். இம்மாநாட்டிற்கு திருநெல்வேலி பேராயர் மாமறைதிரு. பர்னபாஸ் அவர்களும், நமது இயக்கத்தலைவர் திரு. ரெஜினால்டு, துணைத்தலைவர் திரு. ஜேம்ஸ் தர்மபாலன், பொதுச் செயலாளர் அருட்திரு. ஜாண் பெர்லின், பணித்தளச் செயலர் அருட்திரு. சாலமோன் ஞானசேகர், A.G. சபை போதகர் அருட்திரு. பானேஸ்வர் டுடு மற்றும் வடகிழக்கு மண்டலச் செயலர் அருட்திரு. பால்ராஜ் ஆகியோரும் தலைமை தாங்கினர். மேலும் ஜெபக்குழுக்கள், PPA துறை, வாலிபர் பிரிவு துறை மற்றும் தகவல் தொடர்பு துறையைச் சார்ந்த சிலரும் இம்மேளாவில் பங்கேற்று, அதை கண்டுகளித்தனர்.

இக்கூடுகையை அருட்திரு. ஜாண் பெர்லின் மற்றும் திரு. ஜேம்ஸ் தர்மபாலன் அவர்கள் மெழுகுவர்த்தி ஏற்றி ஆரம்பித்து வைத்ததுடன், அருட்திரு. ஜாண் பெர்லின் அவர்கள் கூட்டத்தின் துவக்க உரையை அளித்தார்கள். முழு நிகழ்ச்சியும் சிறந்த பாடகர் குழுவினரின் இனிமையான பாடல்கள் மற்றும் கலாச்சார நடனங்களுடன் சிறப்பிக்கப்பட்டது. மேலும் திரு. ரெஜினால்டு அவர்கள், "நான் உன்னைத் தெரிந்துகொண்டேன்" என்ற கருப்பொருளில் தேவ செய்தியைப் பகர்ந்து கொண்டார்கள். 2-ம் நாள் கூடுகைக்கான தேவ வார்த்தை மாமறைதிரு. பர்னபாஸ் அவர்களால் சிறப்பாகப் பகர்ந்தளிக்கப்பட்டதோடு, சந்தால் பாடல் புத்தகத்தின் 4-வது பதிப்பு நமது பொதுச்செயலாளர் அருட்திரு. ஜாண் பெர்லின் அவர்களால் தேவ நாம மகிமைக்கென்று அர்ப்பணிக்கப்பட்டது. 3-வது நாளான ஞாயிற்றுக்கிழமையன்று பரிசுத்த திடப்படுத்தல் ஆராதனை நடத்தப்பட்டு, அன்றையதினம் அதில் சுமார் 324 வாலிபர்கள் கலந்துகொண்டு திடப்படுத்தல் பெற்றனர். 98 வாலிபர்கள் தங்களது வாழ்வை தேவப்பணிக்கென்று அர்ப்பணித்தனர். ஒரு பெண் சிலுவை வடிவிலான தங்க டாலர் ஒன்றையும், 3 குடும்பங்கள் தங்களது ஆடுகளையும் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொடுத்தனர். இம்மேளாவிற்கான அனைத்துச் செலவுகளையும் அங்குள்ள நமது விசுவாசிகளே பொறுப்பெடுத்துக் கொண்டதுடன், இக்கூடுகை எவ்வித பணத்தட்டுபாடுமின்றி கூடுதல் நிதித்தொகையுடன் சிறப்பாக நிறைவடைந்தது. தேவனுக்கே மகிமையுண்டாவதாக!

**- அருட்திரு. ஜீவன் ரஞ்சன் மொஹபத்ரா,** சந்தால் சாஹிப்கஞ்ச் பிராந்தியச் செயலர்.



## மறக்க முடியாத மாமனிதர்கள்



### அருட்திரு. பெத்துவேல் பர்தன்
(1961-2017)

### இளமைப்பருவம்

அருட்திரு. பெத்துவேல் பர்தன் - ஒடிசா மாநிலம், கஜபதி மாவட்ட செல்லிக் காடாவிலுள்ள ஒரு கிறிஸ்தவக்குடும்பத்தில் 02.02.1961-ல் பிறந்தார். அவருடைய தகப்பனார் திரு. பாருன் பர்தன் & தாயார் திருமதி. எலிசாபா பர்தன் ஆவர். அவருடன் உடன் பிறந்தவர்கள் நான்கு பேராகும். பேயல், பாகுமிலா, சுனில்குமார் மற்றும் சுகாசினியாகும். சிறுவயதிலிருந்தே கிறிஸ்தவக்குடும்பத்தில் வளர்க்கப்பட்டாலும், ஆலயத்திற்கு ஒழுங்காகச் சென்றாலும் கிறிஸ்துவை அறிய வேண்டிய பிரகாரம் சகோ. பெத்துவேல் பர்தன் அறியாமல் தேவனுக்குப் பிரியமில்லாத வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தார்.

### இரட்சிப்பின் அனுபவம்

சகோ. பெத்துவேல் பர்தனுடைய சகோதரர் அவர் எப்படியாவது தேவனுடைய பிள்ளையாக மாறவேண்டுமென அநேக பிரயாசங்களை எடுத்துவந்தார். அனைத்து முயற்சிகளுக்கும் தப்பி அவர் பழைய வாழ்க்கையைத் தொடர்ந்தார். ஒருநாள் அவருடைய சகோதரரின் கடுமையான முயற்சியால் ஒரு ஜெபக்கூடுகைக்கு செல்ல வேண்டியதாயிற்று. வேண்டாத வெறுப்பாக அந்த ஜெபக்கூட்டத்திற்கு சென்றார், சகோ. பெத்துவேல் பர்தன். அங்கு அனைவரும் தேவனைப் பிரியமாக ஆராதிப்பதையும், ஜெபிப்பதையும் கண்டு சற்று தயக்கமுற்றார். எனினும் சகோ. பெத்துவேல் பர்தனுடைய இரட்சிப்பிற்காக ஒருவர் ஜெபித்தது, அவரை அதிகம் பாதித்தது. மறுமுறையும் இந்த ஜெபக்கூடுகைக்கு செல்லும்போது ஒரு தேவனுடைய மனிதர் மத்தேயு 3:9-10 வசனங்களை மையமாக வைத்து தேவனுடைய செய்தியைப் பகர்ந்து கொண்டார். 'இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது; ஆகையால், நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்,' என்ற வார்த்தைகள் சகோ. பெத்துவேல் பர்தனுடைய இருதயத்தைத் தொட்டபடியால், அவர் தன்னுடைய பாவங்களை அறிக்கையிட்டு, கிறிஸ்துவை சொந்த இரட்சகராக அன்றே ஏற்றுக்கொண்டார். அங்கு ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர தேவனுடைய வார்த்தையை வாசிக்க, தியானிக்க அவருக்குக் கற்றுகொடுத்தனர். மட்டுமல்லாது அவருடைய வாலிப நண்பர்களான சகோ. சுடிரோ, சகோ. பிலேமோன் மற்றும் சகோ. ஜீவரத்தின பீரோ போன்ற நண்பர்களுடன் சேர்ந்து ஜெபித்து வந்தார். அவர்கள் மூலம் ஆவிக்குரிய சத்தியங்களையும் அறிந்து கிறிஸ்துவுக்குள் வளர்ந்து வந்தார்.

### திருமண வாழ்க்கை

சகோ. பெத்துவேல் பர்தன் சிறுவயதிலேயே தன் தகப்பனாரை இழந்ததினால், தன்னுடைய பள்ளி இறுதிக்கல்வியை முடித்தவுடனேயே கட்டாயமாக வேலை

பார்க்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் ஒடிசா – காதிகுழு மத்தியில் பயிற்சியாளராகச் சேர்ந்தார். பின்னர் ஆலய ஊழியங்களில் செயலாளர், பொருளாளர் எனப் பல பொறுப்புகளில் தேவப்பணியைச் செய்தார். குடும்பத்தின் பொறுப்பையும் ஏற்று நடத்தி வந்த சகோ. பெத்துவேல் பர்தனுக்கு அவருடைய தாயார் திருமணம் செய்ய முடிவெடுத்து, நல்லதொரு துணையைத் தெரிந்தெடுத்தார்கள். 1981-ம் ஆண்டு ஜுன் மாதம் 19-ம் தேதி சகோதரி. சுகந்தியை தன் வாழ்க்கைத்துணையாக ஏற்றுக்கொண்டார். அவர்களுடைய திருமணம் கீகாசிங் பாப்திஸ்து திருச்சபையில் வைத்து நடைபெற்றது. அவர்களுடைய திருமண வாழ்க்கையை தேவன் ஆசீர்வதித்து, மூன்று பிள்ளைகளைக் கொடுத்தார். சுஜாதா, சுனிதா என்ற பெண் பிள்ளைகளும் மற்றும் சன்கிராம் என்ற மகனுமாகும்.

## ஊழியத்திற்கு அழைப்பு

நண்பர்கள் மூலம் மிஷனரிப்பணியைப் பற்றிக் கேள்விப்பட்ட சகோ. பெத்துவேல் பர்தன் அதற்காக ஜெபித்து வந்தார். அவருடைய ஊரிலிருந்து மிஷனரிகளாகச் சென்றிருந்த சகோதரர்கள் சகோ. பங்கஜ்லால் பர்தன் மற்றும் சகோ. ஜீவ ரத்தினபீரோ போன்ற மிஷனரிகளின் பணித்தளப் பகிர்வுகள் அவரை அதிகமாகப் பாதித்தது, தானும் அவ்வாறு ஊழியம் செய்ய வேண்டும் என்ற வாஞ்சையை அவருக்குள் ஏற்படுத்தியது. ஆனால், குடும்பத்தின் சூழ்நிலையாலும் தன் குடும்பத்தினரின் எதிர்ப்பாலும் உடனே செல்ல முடியவில்லை. ஆனால் தேவன் வேத வசனத்தின் வாயிலாகவும், நண்பர்கள் மூலமாகவும் மிஷனரிப்பணிக்கான அழைப்பை உறுதிப்படுத்தவே, இறுதியாக குடும்பப்பொறுப்புகள் மத்தியில் மிஷனரியாகச் செல்லத் தீர்மானித்தார். எனவே, 1991-ம் ஆண்டு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஹைதராபாத்தில் நடத்திய நேர்முகத்தேர்வில் குடும்பமாகப் பங்குப்பெற்று தெரிவு செய்யப்பட்டார். குடும்பமாக அவர்களை ஒருவருட மிஷனரிப்பயிற்சிக்காக டேனிஷ் பேட்டையிலுள்ள பெத்தேல் வேதாகம நிலையத்திற்கு அனுப்பினார்கள். ஒருவருடப் பயிற்சியை முடித்தபின் மொழிப்பயிற்சிக்காக கோண்டாவிற்கு அனுப்பப்பட்டார்கள்.

## திருச்சபை நாட்டும் ஊழியம்

1993-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் அவர்கள் குடும்பமாக குஜராத்திலுள்ள கார்கடி பணித்தளத்திற்கு ஜெபித்து, அனுப்பப்பட்டனர். சகோ. பெத்துவேல் பர்தனின் குடும்பம் அங்கு மக்கள்பேசும் மொழியைக் கற்று தங்களுடைய ஊழியத்தை ஆரம்பித்தனர். இந்நாட்களில் பிள்ளைகளை அவர்களின் படிப்பினிமித்தம் டோனாவூரிலுள்ள சந்தோஷ வித்யாலயாவில் சேர்க்கச் சென்றனர். பணித்தளத்திலிருந்து நாக்பூரிலுள்ள பணித்தள அலுவலகம் வரும்வழியில் தொடர் வண்டியிலிருந்து இறங்கும்போது அவர்கள் கொண்டு வந்த சூட்கேஸ் திருடப்பட்டிருந்ததைக் கண்டு மிக்க அதிர்ச்சிக்குள்ளாயினர். அவர்கள் அணிந்திருந்த உடையைத் தவிர வேறெதுவும் இல்லாத நிலையில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் பணித்தள அலுவலகம் வந்தடைந்தனர். அப்பொழுது நன்றாக மழை பெய்து கொண்டிருந்தபடியால், மாற்று உடை இல்லாதபோது சக ஊழியர்கள் உடனே முன்வந்து தேவையான உடையைக் கொடுத்தனர். அதுபோல பள்ளியில் சேர்க்கும் நேரத்தில் அவர்களை அறியாத ஒரு சிலர் வந்து தேவையான உடைகளைப் பிள்ளைகளுக்குக் கொடுத்தனர். ஊழியத்தின் தொடக்கத்திலே ஒரு அதிர்ச்சியும், அதே நேரத்தில் தேவன் அவர்களோடிருப்பதையும் அறிந்து கொண்டனர்.

1993 முதல் 96 வரை கார்கடி – காட்மாலில் அவர்கள் ஊழியத்தைத் தொடங்கியபோது, அது அற்பமான ஆரம்பமாயிருந்தது. அவர்கள் தங்கிட ஒரே ஒரு அறைதான் கிடைத்தது. மின்சாரம், கழிவறை, குடிநீர், சாலைவசதி போன்ற அடிப்படை வசதிகள் எதுவும் இல்லை. ஆனால், ஜெபத்தைக் கேட்கும் ஆண்டவர் அவர்களோடிருந்தார். அங்குள்ள மக்களின் தேவைகளுக்காக அவர்கள் ஜெபித்தவுடன், அற்புதங்கள் வாயிலாக தேவன் தமது வசனத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்தினார். முதல் விசுவாசி ஆண்டவரை ஏற்றுக் கொண்டதே ஒரு அற்புதத்தின் வழியாகவே. திடீரென பால் தராத ஒரு மாட்டிற்காக ஜெபிக்க சகோ. பெத்துவேல் பர்தனை வேண்டிக்கொண்டனர், ஒரு குடும்பம். அந்த குடும்பமே அந்த மாட்டுப்பாலின் வருவாயில்தான் வாழ்ந்து கொண்டிருந்தனர். அது இல்லாமல் போகவே, சாப்பாட்டிற்குக்கூட வழியில்லாமல் தவித்தனர். இந்த தருணத்தில் சகோ. பெத்துவேல் அந்த மாட்டிற்காக ஜெபித்ததும், உடனே அது பால் கொடுக்கலாயிற்று. இதைக்கண்ட அந்த குடும்பம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டது. அதைத்தொடர்ந்து நடைபெற்ற அநேக அற்புதங்களால் கிட்டதட்ட ஆயிரத்திற்கும் மேலான மக்கள் கிறிஸ்துவை அறிந்து சபையில் சேர்ந்து தேவனைத் தொழுது வந்தனர். பின்பு இந்த இடங்களில் பெரிய ஆலயங்களும் கட்டப்பட்டன. அதே நேரத்தில் கிறிஸ்தவ எதிர்ப்பாளர்கள் பல பொய் வழக்குகளை அவர்கள்மீது சுமத்தித் துன்பப்படுத்தினர். 1996 முதல் 98 வரை பிம்பள்நர் என்ற பணித்தளத்தை மையமாக வைத்து ஊழியம் செய்ய ஆரம்பித்தனர், சகோ. பெத்துவேல் குடும்பம். அங்கும் தேவன் பல அற்புதங்களைச் செய்தார். ஒரு மந்திரவாதிக்கு தன்னுடைய காலில் ஏற்பட்ட சுகவீனத்திற்கு எந்த மந்திரத்தினாலும், மருத்துவராலும் சுகம் கிடைக்கவில்லை. பின்பு நமது ஊழியருடைய ஜெபத்தினால் அவர் நல்ல சுகம் பெற்று கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார். இரண்டு வருடத்தில் 4 பெரிய திருச்சபைகளையும், அதில் தேவனை ஆராதிக்கும் 3000-க்கும் அதிகமான விசுவாசிகளையும் தேவன் கொடுத்தார். 1996-ம் வருடம் சகோ. பெத்துவேல் அவர்களுக்கு போலாங்கீர் பேராயத்தின் சார்பாக குருத்துவ பட்டம் வழங்கி கௌரவித்தனர்.

1998 முதல் வகைப் பிராந்திய செயலராக நியமிக்கப்பட்டார், சகோ. பெத்துவேல் பர்தன். அந்த பகுதியில் ஓராண்டு ஊழியங்களை நடத்தி, அங்குள்ள விசுவாசிகளுக்கு தலைமைத்துவ பயிற்சி கொடுக்கப்பட்டது. பிப்பள்வாடாவை மையமாக வைத்து திருச்சபை தலைவர்களை உருவாக்கும் பொறுப்பையும், அவர்களுக்குத் தேவையான பயிற்சி கொடுக்கும் ஊழியத்தையும் நிறைவேற்றி வந்தார். அதன்பின்பு ஆறு ஆண்டு காலம் ஜெபம் மற்றும் எழுப்புதல் ஊழியத்தை பிம்பள்நர் பகுதியில் நிறைவேற்றினார்கள். பின் 2006 முதல் சந்திரபூர் மற்றும் பாலார்ஷாவிலிருந்து பிராந்திய செயலராகச் செயல்பட்டார். தேவையினிமித்தம் ஒடிசா மாநிலம் – புவனேஷ்வர் பகுதியில் முன்னேற்றப்பணி செயலர் பொறுப்பு அவருக்குக் கொடுக்கப்பட்டது. புதிய ஜெபக்குழுக்களை உருவாக்குவது, திருச்சபையின் எழுப்புதலுக்காக உழைப்பது, மிஷனரிப்பணியின் சேவைகளைப் பகிர்ந்து மக்களை ஜெபத்தாலும், பொருளாலும் தாங்கச்செய்வது போன்ற பணிகளை நிறைவேற்றி வந்தார்.

## இறுதிநாட்கள்

சகோ. பெத்துவேல் பர்தன் 2012-ம் ஆண்டு முதல் நீரிழிவு மற்றும் இரத்த கொதிப்பு வியாதியினால் அவதியுற்று வந்தார். கடந்த 2017 மே மாதம் 3-ம் தேதி பணியினிமித்தம் ரூர்கேலா சென்றார்.

அங்கு அவர் வயிற்று வலியால் அதிக அவதியுற்று மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார். அவருடைய சிறுநீர் மஞ்சள் மற்றும் கருப்பு நிறமாக இருந்தது. ஜூன் 10-ம் தேதி பித்தப்பை கல் அறுவை சிகிச்சைக்கென்று புவனேஷ்வர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு, அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்று முடிந்தது. ஆனால், அறுவை சிகிச்சைக்குப்பின் சுவாசப் பிரச்சினை மற்றும் உயர் இரத்த அழுத்தத்தினால் கஷ்டப்பட்டார். நாளுக்குநாள் அவரது உடல்நிலை மோசமானது. மஞ்சள்காமாலை நோய் இருப்பதாகவும், சிறுநீரகம் மற்றும் கல்லீரல் செயலிழந்து விட்டதாகவும் மருத்துவர்கள் மருத்துவ அறிக்கையில் தெரிவித்தனர். 12-ம் தேதி அவசர சிகிச்சைப்பிரிவிற்கு மாற்றப்பட்டு, அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. ஆனாலும் தேவையான சுகம் கிடைக்கவில்லை. எனவே, மறுபடியும் தேவையான அனைத்து சிகிச்சைகளும் செய்யப்பட்டன. அநேகர் அவருக்காக அதிக பாரத்தோடு ஜெபித்தார்கள். அவருடைய நாடித்துடிப்பு மிகவும் குறைவாக இருந்தது. அவருடைய சிறுநீரகங்கள் சரியாக வேலை செய்யாதபடியால், சரீரம் அதிக பருமனாகிவிட்டது. மருத்துவர்கள் எடுத்த அனைத்து முயற்சிகளும் பயனற்றுப் போனதினால், அவர் 2017 ஜூலை மாதம் 1-ம் தேதி காலை 8.30 மணியளவில் தேவனுடைய ராஜ்யம் சென்றடைந்தார். அருட்திரு. பெத்துவேல் பர்தன் பழகுவதற்கு மிகவும் இனிமையானவர். எப்பொழுதும் சிரித்த முகத்துடன் காணப்படுவார். பணித் தளங்களில் பணிசெய்த காலங்களில் புதிய இடங்களுக்குச் சென்று பணிசெய்ய வேண்டுமென்று மிகவும் வாஞ்சிப்பார். ஒடிசாவில் விரிவுப்பணி ஊழியராக இருக்கும் அவரது மனைவி மற்றும் பிள்ளைகளின் குடும்பங்களுக்காகவும் ஜெபிப்போம்.

*– அருட்திரு. அறிவர். இ. ராஜன்*



# காலச் சுவடுகள்




(1925-2016)

*“தேவன், தன்னை நெருக்குவதற்கு ஒப்புக்கொடுக்காத எவரையும் வல்லமையாய் எடுத்துப் பயன்படுத்தமாட்டார்; நாம் அவருக்குத் திரும்பக்கொடுக்கும் எந்த ஒரு விலைகிரயமும் அவர் நமக்கு அளித்துள்ள ஈவுக்கு ஈடாகாது.” – ஹெலன் ரோஸிவியர்*

ஹெலன் ரோஸிவியர் 1925-ம் ஆண்டு இங்கிலாந்திலுள்ள Haileybury கல்லூரியில் பிறந்தார். அங்கு அவரது தந்தை கணித ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். ஓர் உயர் ஆங்கிலிக்கன் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்த ஹெலன் பக்தியுடன் வளர்க்கப்பட்டார். ஒருமுறை ஹெலனின் ஞாயிறுப்பள்ளி ஆசிரியர் இந்தியா பற்றிக் கூறியபோது, ஹெலன் தன் வாழ்க்கையை மிஷனெரியாகச் செல்ல அர்ப்பணித்தார். என்ன தான் கிறிஸ்தவ பாரம்பரியத்தில் வளர்க்கப்பட்டு, தவறாமல் ஞாயிறு ஆராதனைகளுக்குச் சென்று வந்தாலும், ஹெலன் தன் வாழ்வில் ஒரு வெற்றிடத்தையும், தேவனைவிட்டு தான் தூரத்தில் இருப்பதையும் உணர்ந்தார்.

அவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் நியூன்ஹாம் கல்லூரியில் (Newnham) மருத்துவப் பட்டப்படிப்பிற்காய் சேர்க்கப் பட்டார். ஒருசமயம் Cambridge Inter Collegiate Christian Union (CICCU)-ல் உள்ள டாரத்தி என்ற தோழியின் மூலம் ஒரு ஜெபக்கூடுகையில் கலந்து கொள்ள ஹெலன் அழைப்புப் பெற்றார். அங்கு நடத்தப்பட்ட வேதாகம வகுப்பில்தான் அவர் முதன்முதலாக வேதாகமத்தின் புதிய ஏற்பாடு பகுதியைப் படித்தார். இதன் மூலம் கிறிஸ்தவம் என்பது அறிவு சம்பந்தப்பட்டதல்ல, ஆத்துமா சம்பந்தப் பட்டது என்பதை உணர்ந்தார். 1945-ம் ஆண்டு தன் வாழ்வை முழுவதுமாக கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்தார். அந்நாள் அவரது போதகர் கிரகாம், “நான் அவரை அறிய” என்ற பிலி.3:10-ம் வசனத்தை ஹெலனின் புதிய வேதாகமத்தில் எழுதி, ‘இன்றிரவு இவ்வசனத்தின் முதற்பகுதியில் நீ புகுந்துள்ளாய்’ என்றார்.

ஹெலன் தனது படிப்பு முடிந்தவுடன், WEC-க்கு தான் ஒரு மருத்துவ மிஷனரியாகச் செல்ல விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்தார். 1953-ம் ஆண்டு காங்கோவிற்கு அனுப்பப்பட்டார். அங்கு அவர் ஒரு பல்நோக்கு மருத்துவமனையையும், பயிற்சி மையத்தையும் 1950-களில் லபாம்பியில் (Lbambi) தொடங்கினார். அங்கிருந்து 1955-ல் தன்னை நெபோபாங்கோவிலுள்ள தொழுநோய் மருத்துவமனைக்கு மாற்ற வேண்டினார். அங்கு இருந்த சிறிய பழைய மருத்துவமனையை 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகவும், பெண்கள், தொழுநோயாளிகள், குழந்தைகள் பராமரிப்பு மையத்துடன் கூடிய பாரா மெடிக்கல் பயிற்சி பள்ளியையும், 48 இடங்களில் கிராமப்புற மருத்துவமனைகளையும் துவங்கினார். சுற்றியுள்ள 150 மைல்களுக்கு எந்த மருத்துவ வசதியும் இல்லாத நிலையில், ஹெலனின் இந்த முயற்சி அம்மக்களுக்குப் பெரிதும் உதவியாக இருந்தது.

1958-ல் விடுப்பு எடுத்து இங்கிலாந்து வந்த ஹெலன், மேலும் மருத்துவப்பயிற்சி பெற்றார். காங்கோ, பெல்ஜியத்திடம் இருந்து 1960-ல் விடுதலை பெற்றது. 1964-ல் உள்நாட்டு போர் துவங்கியது. ஹெலனால் நிறுவப்பட்ட அனைத்து மருத்துவ மனைகளும் அழிக்கப்பட்டன. அவருடன் இருந்த 10 கத்தோலிக்க மிஷனரிகள் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டனர். பல வார வீட்டுக்காவலுக்குப் பின் கிளர்ச்சியாளர்களால் அவர் சிறையில் அடைக்கப்பட்டார். அங்கிருந்து தப்பிக்க முயற்சி செய்தபோது, அவரை இழுத்து வந்து, தலையிலும் தோள்களிலும் அடித்து, தரையில் தள்ளி பலமுறை உதைத்தார்கள். வாயை உடைத்ததினால் வாய் முழுவதும் இரத்தம் உறைந்துபோய் இருந்தது. பலமுறை பல இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டார். பயமும் திகிலும் சூழ்ந்த நிலையில் 1964 அக்டோபர் 29-ம் தேதி ஹெலன் மிகக் கொடுமையாகப் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார்.

அந்த கொடூரமான சூழ்நிலையில் இருண்ட அறையில் தேவனின் மெல்லிய சத்தத்தை ஹெலன் கேட்டார்– “இந்த பாடுகள் எல்லாம் உன்னுடையது அல்ல, என்னுடையது; நான் உன்னிடம் கடனாய் கேட்பது, உன்னை மட்டுமே!” என்றார். இதயம் வெடிப்பது போன்ற அந்த கொடுமையான சூழ் நிலையிலும் ஹெலன் தேவனின் அன்பையும், அரவணைப்பையும் உணர்ந்தார். தேவன் அவருக்கு அளித்துள்ள சிலுவையை எண்ணி மகிழ்வதாக தனது குறிப்புகளில் தெரிவித்துள்ளார். பல மாத சிறைவாசம், தொடர்ந்து பணி சுமை இவற்றைத் திரும்பிப்பார்க்கும்போது, களைப்பும் சோர்வும்தான் மீதி இருந்தன. ஆனாலும், ‘தேவனுக்காக நான் கொடுத்த இத்தனை விலைகிரயமும், தேவன் கிறிஸ்து இயேசுவுக்கு கொடுத்த மகிமையான வெகுமதிக்குமுன் ஒன்றுமேயில்லை’ என்று தேவனுடனான தனது உடன்படிக்கையைக் குறித்து மிக அழகாகக் கூறியுள்ளார்.

1966-ல் ஆப்பிரிக்கா திரும்பியவுடன் நிபோபாங்கோவில்(Nebobongo) இருந்து வெளியேறி, நியான்குண்டில் (Nyankunde) மருத்துவமனையை நிறுவினார். 250 படுக்கை வசதிகள், பிரசவப்பிரிவு, பயிற்சிக் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, தொழுநோய் மருத்துவமனை மற்றும் பல மேம்பாட்டுப்பணிகளை நிறுவினார். ஆனால், அங்கும் பல துன்பங்களுக்கும் உபத்திரவங்களுக்கும் ஆளானார். ஆயினும் தேவனுடனான தன் உடன்படிக்கையில் இருந்து அவர் சிறிதும் விலகவில்லை. ஹெலன் 1973-ம் ஆண்டு தனது சுக வீனத்தின் காரணமாக வடக்கு அயர்லாந்தில் போய் குடியேறினார். பல நாடுகளுக்குப் பயணித்து, பல புத்தகங்களை எழுதினார். அவர் மிஷனரி வழக்கறிஞராகவும் பணி யாற்றினார். தனது பாடுகளைத் தனக்குக் கிடைத்த பாக்கியமாக கருதிய ஹெலன் ரோஸிவியர், 2016 டிசம்பர் 7-ம் தேதி தனது 91-வது வயதில் தேவ ராஜ்யம் சேர்ந்தார்.

தேவன் தம்முடைய திட்டத்தில் சிலுவைப் பாடுகளுக்குள் ஆழமாகச் செல்லாதவர் எவரையும் பயன்படுத்தியதில்லை. கிறிஸ்து நம்மைச் சிறப்பாகப் பயன்படுத்துவதற்கு நம்மனைவருக்கும் சிலுவை அவசியம். ‘பாடுகள் என்றும் பரவசமே, அது ஓடியே முடிக்கும் பந்தயமே!’ என்ற செயல்வீரர் பாடல்வரிகளுக்கு இணங்க தேவன் நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தை ஹெலனைப்போல் ஓடி முடிக்க வேண்டும். இந்த 21-ம் நூற்றாண்டிற்கு பெண்மையின் வலிமையை எடுத்துக்காட்டிய வீர மங்கையாய் தனது ஓட்டத்தை முடித்துக் கொண்ட ஹெலன், இந்த தொடரோட்டத் திற்கு நம்மையும் அழைக்கிறார் ... நாம் ஆயத்தமா?




திரு. ராபர்ட் ராஜலிங்கம், திரு. தௌஜபாவ் குயிட்டே
திரு. சுங்லென்லால் சிங்சிட்
திருமதி. மன்னா ராஜ வித்யா அகஸ்டியன்
திருமதி. மெலொடி டிம்சன்டிங் வய்ஃபெய்
திரு. ஸியான்லுன்தாங்க் ஸெள T.

# ஜம்மு

## சாம்பா: டேவிட் அய்யனார் & மன்பிரீத் கௌர்

**துதிக்க:** சுவிசேஷம் 4 கிராமங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்டதினால், 850 பேர் புதிதாக இயேசுவைக்குறித்து கேள்விப்பட்டுள்ளனர். கூட்டா கிராமத்திலிருந்து 3 பேர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். 20 புதிய ஏற்பாடுகளும், 3 வேதாகமங்களும் பகிரப்பட்டுள்ளன. சாக்மங்கா கிராமத்திலுள்ள சில புதிய குடும்பங்கள் சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்கின்றனர். தியாணி மற்றும் கூட்டா கிராமங்களில் பெண்களிடையே 2 ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தங்களது கிராம மக்களுக்குச் சுவிசேஷம் எடுத்துரைக்க அங்குள்ள விசுவாசிகளும், சபை மூப்பர்களும் உதவி செய்கின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசிகளைத் தொந்தரவு செய்யும் கூட்டா கிராம மக்களில் சிலர் கிறிஸ்துவின் அன்பால் தொடப்பட; சம்ப், கூட்டா மற்றும் அதனருகிலுள்ள கிராமங்களில் சுவிசேஷத்திற்குத் திறந்தவாசல் கிடைக்க; சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ள புதிய கிராமங்களான ராஜ்புரா, சாக்மங்கா, சர்கால், தலோட், தர்மாசாக் ஆகிய இடங்களில் புதிய தொடர்பாளர்களும், சுவிசேஷத்திற்கு நல்வரவேற்பும் கிடைக்க; நீலமின் கணவர் குடிப்பழக்கத்திலிருந்தும், ராகுல் போதைப்பழக்கத்திலிருந்தும் விடுபட; சம்ப் மற்றும் கூட்டா கிராமங்களில் ஆலயம் கட்டப்பட நல்லதொரு நிலம் கிடைக்க ஜெபிப்போம்.

# ஹிமாச்சலப் பிரதேசம்

## ராம்பூர்: தௌஜபாவ் குயிட்டே & ஃப்ளாரன்ஸ்

**துதிக்க:** தேவ வார்த்தை 5 கிராமங்களைச் சார்ந்த 651 பேருக்கு முதல்முறையாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதில் 8 பேர் தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கையிட்டுள்ளனர். 10 புதிய ஏற்பாடுகளும், 2 வேதாகமங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. 10 பேர் சுவிசேஷத்தின்மீது ஆர்வம் காட்டுகின்றனர். 46 வேதாகம வகுப்புக்குழுவினர் கிரமமாகக்கூடி, வேதவசனத்தை முறைப்படி கற்றுவருகின்றனர். கோல்ட் கிராமத்தில் புதியதொரு ஆராதனைக்குழு துவங்கப்பட்டுள்ளது. தனது கணவராலும், 4 வளர்ந்த பிள்ளைகளாலும் கைவிடப்பட்டு கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த தோல்மாவிற்கு ஆறுதலாக அவர் சற்றும் எதிர்பாராத விதத்தில் அவரது இளைய மகன் ஆசிரமத்திலிருந்து திரும்பிவந்து அவரோடுகூடயிருந்து உதவி செய்வதாக கூறியிருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிறமதச் சடங்காச்சாரங்களைச் செய்யச்சொல்லி வற்புறுத்தும் ஜீவா ராமின் பெற்றோர் மனந்திரும்ப; பிரேம்தேவி கிறிஸ்துவில் வளரவும், தனது தொழிலில் வெற்றிகரமாக முன்னேறவும்; தேஜ்பகதூர் குடிப்பழக்கத்திலிருந்து மீள; சப்னா தோல் ஒவ்வாமை பிரச்சினையிலிருந்தும், ஷீலா தேவி ஆரம்ப நிலையிலிருக்கும் இரத்தப்புற்றுநோயிலிருந்தும் அற்புத சுகமடைய ஜெபிப்போம்.




திரு. ஜெபராஜ் S., திரு. செந்தில் முருகன் V.
திருமதி. ஆலிவ் ஜெனிஃபர் நத்தானியேல் எட்வர்ட்
திரு. ரபீந்திர முர்மு

## ஆனி:

### ஹின் சாவ்ம் & சிங் கோயி கிம்

**துதிக்க:** புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, அதன் மூலம் 350 பேர் கிறிஸ்துவைக்குறித்து அறிந்துள்ளனர். 80 புதிய ஏற்பாடுகளும், 2 வேதாகமங்களும் மக்களிடையே பகிரப்பட்டுள்ளன. கேகார் சபையில் வாலிபர் பயிற்சி நிகழ்ச்சியொன்று நடத்தப்பட்டு, அதில் 11 பேர் கலந்துகொண்டு ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர். நீத்தர் மற்றும் பந்தல் சபைகளில் விசுவாசிகளுக்கென நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி மூலம் அங்குள்ள விசுவாசிகள் சுவிசேஷப்பணிக்கு ஊக்குவிக்கப்பட்டுள்ளனர். அதிக நாட்களாக ஜெபித்த ஜெபத்திற்குப் பதில் கிடைத்த வண்ணமாக ரேஷ்மி தனது கணவருடன் ஒப்புரவாகி, சந்தோஷமாக வாழ்ந்து வருகின்றார். லக்ஷ்மி கர்ப்பப்பை பிரச்சினையிலிருந்து நல்ல சுகமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுதிதேவி சரீர வேதனையிலிருந்தும், அவரது கணவர் கண் அறுவைசிகிச்சை பெலவீனத்திலிருந்தும் நன்கு சுகமடைய; சுக்மிதேவி கர்ப்பப்பை புற்றுநோயிலிருந்து அற்புத சுகம்பெற; நமது புதிய தொடர் பாளர்களான சுரேஷ், பிபாஷா, விக்ரந்த், மன்பகதூரின் குடும்பம், பிம்லாவின் குடும்பம் மற்றும் தன்பகதூரின் குடும்பம் யாவரும் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் வர; தேவ வார்த்தையின் சத்தியத்தில் அனைத்து விசுவாசிகளும் நிலைத்து நிற்க; இப்பணித்தளத்தில் தேவன் நல்ஆவிக்குரிய எழுப்புதலைக் கட்டளையிட ஜெபிப்போம்.

## ரோஹ்ரு:

### ஜாண்சன் சங்கர் & ஜெபராணி

**துதிக்க:** சுவிசேஷம் 450 பேருக்கு புதிதாகப் பறைசாற்றப்பட்டுள்ளது. நமது மிஷனரி சகோதரி திருமதி. ஜெபராணி பித்தப்பை அறுவை சிகிச்சைக்குப்பின் நன்கு சுகமாகி, தனது ஊழியப்பணியை தேவ தயவால் தொடங்கியுள்ளார். மோரி பகுதியில் நிலவிவரும் எதிர்ப்புகளின் மத்தியிலும் விசுவாசிகளிடையே ஊழியப்பின்தொடர்பணி சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளது. தியுனி பகுதியில் தேவன் நமது ஊழியத்திற்குப் புதிய வரவாக 3 குடும்பங்களைத் தந்துள்ளார். நமது சுதேச ஊழியரின் தாயார் தனக்கிருந்த நீதிமன்ற வழக்கில் வெற்றிபெற்றதோடு, விடுபட்டிருந்த தனது ஓய்வூதிய தொகையைக் கிரமமாக வரப் பெற்றுள்ளார். கடந்த 7 மாதங்களாக காது கேளாமை குறைபாட்டினால் அவதிப்பட்டுவந்த ராம் தற்போது தேவ தயவால் நன்கு சுகமடைந்துள்ளார். நமது தன்னார்வ ஊழியரின் மகனான ரஜ்னேஷிற்கு அரசு நிறுவனங்கள் மூலம் தொழில் நுட்பத்திறனை கற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** போதகருக்கு எதிரான தவறான தூண்டுதலால் மோரி பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் ஆலய ஆராதனை மீண்டும் தொடங்கப்பட; நமது லிமா பகுதி விசுவாசிகள் தங்களது பழைய மத பாரம்பரிய கலாச்சாரங்களிலிருந்து முற்றிலுமாக விடுபட; நமது லெந்துகால ஜெபங்களில் பங்கெடுக்கும் 60 பேர் வரும்நாட்களில் தங்களைச் சுற்றியுள்ளவர்கள் மத்தியில் கிறிஸ்துவுக்காக நற்சாட்சிகளாக விளங்க; ரனோல் திருச்சபையில் பின்மாற்றமடைந்துள்ளோர் மீண்டும் கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பிக்க; நமது ஊழியத்திற்கு சில நேரங்களில் இடைஞ்சலாக இருக்கும் சுயேட்சை போதகர்கள் மனந்திரும்பி, தேவவசனத்தைச் சரியாய் கைக்கொண்டு நடக்க ஜெபிப்போம்.




திருமதி. மரியம்மாள் பால் சாலமோன்
திரு. ஐசக் R., திருமதி. பியூலா முரளிதரன்
திருமதி. ஜெய சௌந்தரி ஜெபராஜ் சாமுவேல்
திரு. டாவுட் டுடு

## நேர்வா:

### S. இம்மானுவேல் & சங்கீதா ஜெசிந்தா

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதின் மூலம் 150 பேர் இயேசுவைக்குறித்து கேள்விப்பட்டுள்ளனர். அத்தல் கிராமத்தில் வீட்டு உரிமையாளரின் அனுமதியோடு தேவனை ஆராதிக்க நல்ல அறையொன்று கிடைத்துள்ளது. மஞ்சுவிற்கு அறுவை சிகிச்சையின் மூலம் கருப்பை கட்டி அகற்றப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இப்பணித்தள விசுவாசிகள் ஞாயிறு ஆராதனையின் முக்கியத்துவத்தைக் கண்டுணர; பாரனு ஆலய விசுவாசிகள் ஆராதனைக்குத் தவறாமல் வந்து பங்கேற்க; பெண்கள் மற்றும் சபை மூப்பர்களுக்கான மாதாந்திரப் பயிற்சி நிகழ்ச்சிகள் ஒழுங்கும் கிரமமுமாக நடைபெற; நமது துணை மையங்களான அத்தல், பாரனு மற்றும் பங்கலில் நடைபெறும் ஊழியச்செயல்பாடுகளுக்கு ஏற்ற பலன் கிடைக்க; ஞாயிறுப்பள்ளி சிறுவர்கள் மத்தியில் ஆவிக்குரிய எழுச்சி உண்டாகி, அவர்கள் கர்த்தரை அறிகிற அறிவிற்குள் வளர்ந்துப்பெருக; தேவ தயவால் தாங்கள் விட்டுவந்த பழைய பாவ வாழ்வுக்கு நமது விசுவாசிகள் மீண்டும் செல்லாமலிருக்க ஜெபிப்போம்.

## ரிகாங்பியோ:

### பப்லு பரசேத் & கல்பனா மாலிக்; சங்கர் A. & ரூத் மேரி

**துதிக்க:** முதல்முறையாக சுவிசேஷம் 5 கிராமங்களில் எடுத்துரைக்கப்பட்டு, அதன்வாயிலாக 640 பேர் கிறிஸ்துவைக் குறித்து அறிந்துள்ளனர். 16 புதிய ஏற்பாடுகளும், 5 வேதாகமங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. 4 பேர் விசுவாசிகளாகி, கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். நமது புதிய தொடர்பாளரான யமுனா தொடர் மாதவிடாய் பிரச்சினையிலிருந்தும், சத்துரு போராட்டத்திலிருந்தும் ஜெபத்தின்மூலம் முழு சுகவிடுதலை பெற்று, தற்போது நமது ஆலய ஆராதனையில் தொடர்ச்சியாக வந்து பங்கேற்கிறார். ரீனா கர்ப்பப்பையில் ஏற்பட்டிருந்த நோய்த்தொற்று பிரச்சினையிலிருந்து அற்புத சுகமடைந்துள்ளார். ஷோங் மற்றும் ரிப்போ திருச்சபைகளில் விசுவாசத்தில் பின்மாற்றமடைந்திருந்தோர் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வந்து ஆலய ஆராதனைகளில் கலந்து கொள்கின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது புதிய தொடர்பாளர்களான வசந்த், சுரேஷ், பன்சாரா, சுந்தர்ராஜ், பாலகிருஷ்ணா, சிவக்குமாரி ஆகியோரின் குடும்ப அங்கத்தினர்கள் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; வித்யாசந்த், சுதர்சனா, சூரஜ், பகத்சந்த் ஆகியோர் மீண்டும் கிறிஸ்துவை விசுவாசிக்கும் சிலாக்கியம் பெற; வரும் நாட்களில் நடக்கவிருக்கும் வாலிபர், பெண்கள் மற்றும் சிறுவர்களின் முகாம்கள் யாவும் ஆசீர்வாதமாய் நடைபெற; நமது புதிய தொடர்பாளரான மன்பகதூர் சிறுநீரக அறுவைசிகிச்சை பெலவீனத்திலிருந்து மீண்டுவந்து, கிறிஸ்துவை விசுவாசிக்கத் துவங்க ஜெபிப்போம்.




திருமதி. கிரேஸி ஸ்டான்லி ஜார்ஜ்
திருமதி. கௌரம்மா @ சுவேதா அமரேந்திரன்
திருமதி. அன்னா ரோஸ்லின் ஐசக் ஆபேல்

### ஜியோரி:

**ஜம்கோன்காம் ஹயோகிப் & ஜரின் லெட்தென்மாங்**

**துதிக்க:** புதிதாக 13 கிராமங்களில் இயேசுவின் நற்செய்தி அறிவிக்கப்பட்டு, 170 பேர் அதன்மூலம் பயனடைந் துள்ளனர். தேவ கிருபையால் நமது ஊழியர்கள் ஜீப்குழு ஊழியம் மூலம் 10 நாட்களில் 13 கிராமங்களைச் சுவிசேஷத்தினால் சந்தித்துள்ளனர். அத்துல் தனது விசுவாசத்தை கிறிஸ்து வில் அறிக்கை செய்துள்ளார். நமது விசுவாசியான மனிஷா நல்லதொரு ஆண்குழந்தையைப் பெற்றெடுத்துள்ளார். பாக்வசந்தி தீய ஆவியின் பிடியிலிருந்து விடுதலை பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது புதிய தொடர்பாளர்களான ஹரிஷ், சிவ்குமார், கிரிஷான், விதார் மற்றும் பிரேம் தங்களது பழைய தீய நண்பர்களையும், அவர்களின் பழக்கவழக்கங்களையும் விட்டு வெளியே வர; பலவித வழக்குகளுக்கு நீதிமன்ற தீர்ப்பை எதிர்பார்த்து காத்திருக்கும் நமது விசுவாசிகளான சுரேந்திரா, மீரா, இவான் ஹீராலால் மற்றும் சேத்திரியின் மகனுக்கு நல்ல சாதகமான தீர்ப்புகள் அமைய; பல்வேறு பெலவீனங்களினால் பாதிக்கப்பட்டிருக்கும் அஜய் போர்சித்தா, சுனில், அஞ்சனா, ரீனா, பேபி ஷியாம் மற்றும் சந்திரகலாவிற்கு பூரண சுகம் கிடைக்க; தீய ஆவியின் பிடியிலிருந்து லக்ஷ்மியின் குடும்பத்தாருக்கு அற்புத விடுதலை கிடைக்க ஜெபிப்போம்.

## பஞ்சாப்

### மான்சா:

**தெப்ரத்தோ பிஸ்வாஸ் & மன்னா சிங்**

**துதிக்க:** சுவிசேஷ வசனம் புதிதாக 610 பேருக்கு பறைசாற்றப்பட்டுள்ளது. 2 பேர் கிறிஸ்துவின் மந்தையில் வந்து சேர்ந்துள்ளனர். 5 புதிய ஏற்பாடுகளும், 6 வேதாகமங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. கீனி கௌருக்கு தன் குடும்பத்தின் வாழ்வாதார தேவைகளைச் சந்திக்கும் பொருட்டு, பஞ்சாப் கல்வித்துறையில் அவருக்கு அரசாங்க வேலை கிடைத் துள்ளது. ராமநந்தி, நகோக்கி, பாதபஸ்தி, மல்கோன், தெபி மற்றும் மந்தர்னா கிராமங்களில் சுவிசேஷத் திற்கு திறந்தவாசல் கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தபசு நாட்களை முன்னிட்டு உபவாச ஜெபங்கள் 50 கிராமங்களில் நடத்தத் தீர்மானித்திருக்கும் திட்டம் வாய்க்கப்பெற; நமது சுவிசேஷப்பணியை எதிர்க்கும் கல்ஷா சமூகத்தலைவரான அம்ரித் பால் மற்றும் சிக்கி இனத்தவர் மனம் மாற; மாடியிலிருந்து தவறிக்கீழே விழுந்ததினால் பற்பல எலும்பு முறிவு களுக்கு ஆளாகியிருக்கும் அம்ரஜித் கௌர் அற்புத சுகமடைய ஜெபிப்போம்.




திரு. ராம கிருஷ்ணா அகிபாடா
திரு. பாலாஜி நெட்டாலம், திரு. அமரேந்திரன்
திருமதி. ஜெபா கிரேஸ் டேவிட்
திரு. லுங்மின்தாங் பய்ட்டே

### சங்ரூர்: கிம்பால் திலீப்பாய், ஜோதி ரஞ்சன் பர்தன்

**துதிக்க:** முதல்முறையாக 4 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டிருப்பதின் பொருட்டு, 250 பேர் கிறிஸ்துவைக்குறித்து அறிந்துள்ளனர். ஒருவர் கிறிஸ்துவின் மந்தையில் வந்து இணைந்துள்ளார். 3 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. சீக்கிய மத நம்பிக்கையில் வேரூன்றி விவாகரத்திற்கு ஆயத்தமாயிருந்த ரீட்டாவின் கணவர், ரீட்டாவுடைய ஜெபத்தின் மூலம் தற்போது அவருடன் சந்தோஷமாக இணைந்து வாழ்கின்றார். தவறான குற்றசாட்டினிமித்தம் காவல் நிலையத்திற்கு கொண்டுச் செல்லப் பட்ட ராணிநாத் தேவ கிருபையால் விடுவிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய கிராமங்களில் நடத்த விருக்கும் இயேசுத்திரைப்பட நிகழ்ச்சிகள் மற்றும் சத்சங் கூடுகை நிகழ்ச்சிகள் யாவும் நல்ல பலன் தர; வாய்ப்பேச முடியாமல் இருக்கும் ராதா கௌரின் மகள்களுக்கு அற்புதமாகப் பேசும்திறன் கிடைக்க; புற்றுநோயிலிருந்து ராஜ்குமார், கர்னிலோ, குர்மித், பூஜா ஆகியோர் பூரண சுகம் பெற; அதிக நாட்களாகப் படுக்கையிலிருக்கும் பரோ, கல்லீரல் நோய்த்தொற்றினால் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் கிருஷ்ணா ஆகிய இருவரும் அற்புத சுகமடைய ஜெபிப்போம்.

### அஹ்மத்கட் மண்டி: சௌதரி ராஜேஷ் தவ்லேபாய் & சரிதா பால்; தீப்திலால் மாலி & ரேணுமா சாடங்கி

**துதிக்க:** முதல்முறையாக 3 கிராமங்களில் சுவிசேஷத்தை 630 பேர் வாஞ்சையுடன் கேட்டுள்ளனர். அதில் 3 பேர் விசுவாசிகளாகி, கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். 10 புதிய ஏற்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. வெளிப்புற சந்திப்பு ஊழியத்தில் இடம்பெற்ற 2 சத்சங் கூடுகை நிகழ்ச்சிகளின் மூலம் 130 புதியவர்கள் சுவிசேஷத்தைக் கேட்டுள்ளனர். போகிர் மற்றும் அக்பர்பூர் கிராமங்களில் திரையிடப்பட்ட இயேசுத்திரைப்படத்திற்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. விசுவாசிகள் சுவிசேஷப்பணியை உற்சாகமாய் செய்ய தேவையான பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப் பட்டுள்ளன. லக்ஷ்மண் மற்றும் பரம்ஜீத் கௌர் தங்கள் சுகவீனங்களிலிருந்து ஜெபத்தின் மூலம் நன்கு சுகமடைந்துள்ளனர். தலையில் பாதுகாப்பான முறையில் அறுவைசிகிச்சை செய்யப்பட்டு, சி.எம்.சி. மருத்துவமனை யிலிருந்து பிரேம் சுகபத்திரமாக வீடு திரும்பியுள்ளார். புற்றுநோயிலிருந்து அற்புத சுகமடைந்திருப்பதாக நலமான மருத்துவ அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ள நமது மிஷனரி திரு. தீப்திலாலுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வாலிபர்கள், பெண்கள் மற்றும் மூப்பர்களுக்கென்று நடத்தவிருக்கும் பயிற்சி நிகழ்ச்சிகள் யாவும் பங்குப்பெறுவோர் அனைவருக்கும் ஆசீர்வாதமாய் அமைய; நமது ஆராதனைக்கு வரத்தொடங்கியுள்ள பிசாசு பிடியில் சிக்குண்டு இருக்கும் சுமன், அவரது மகன் விஜய் மற்றும் ரிங்குவிற்கு அப்பிடியிலிருந்து அற்புத விடுதலை கிடைக்க; விசுவாசிகள் மத்தியில் நடத்தப்பட்டுவரும் 40 நாள் உபவாச ஜெபங்கள் அவர்கள் வாழ்வில் நல்ல ஆவிக்குரிய வளர்ச்சியைக் கொண்டுவர; விஜய்சிங் பக்கவாதத்திலிருந்தும், அலோக் குமார் வலிப்பு நோயிலிருந்தும் பூரண குணமடைய; நமது சுவிசேஷப்பணி குழுவின் அங்கத்தினரான பிரிட்டோ கௌர் தனது சரீரத்தில் காணப்படும் பலவித சிக்கலான சரீர உபாதைகளிலிருந்து முழுசுகம் பெற ஜெபிப்போம்.




திரு. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்
திரு. ஃபிராங்ளின் M.Y. பாதம் A.S.
திருமதி. சூர்ஜ்யகாந்தி உதிப்தகுமார் பாக்
திரு. கொடிசெலா பிரவீன்

## புத்லாடா: ஹமோம் நாபா சிங் & துலந்தி ரியாங்

**துதிக்க:** இப்பணித்தளத்தில் 2 வெளிப்புற சந்திப்பு சத்சங் கூடுகைகள் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளன. அதுபோல ராலி கிராமத்திலும் வெளிப்புற சந்திப்பு ஊழியம் ஆசீர்வாதமாக நடந்து முடிந்துள்ளது. ராஜு மனச்சோர்பிலிருந்தும், மன்ஜீத் கௌர் இரத்த சம்பந்தமான யூரிக் அமில பிரச்சினையிலிருந்தும், பேபி தீப்பு கடும் நெஞ்சு சளித்தொற்றிலிருந்தும் சுகமடைந்துள்ளனர். பிரசவ நேரத்தில் உண்டான பல்வேறு சிக்கல்களின் மத்தியிலும் சந்தோஷின் மனைவி ஆபத்தேதுமின்றி சுகப்பிரசவத்தின் மூலம் அழகிய பெண்குழந்தையைப் பெற்றெடுத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சத்துரு பயத்தினாலும், சரீர பெலவீனத்தினாலும் பாதிக்கப்பட்டிருக்கும் சஞ்சு இரட்சிக்கப்பட்டு, சுகமடைய: குல்தீப் மூலப்பிரச்சினையிலிருந்தும், ஆராதனா மண்ணீரல் பிரச்சினையிலிருந்தும், ஜஸ்வீத் கௌர் கர்ப்பப்பைக்கட்டி பிரச்சினையிலிருந்தும், குர்தேஜ் கௌர் இரத்தப்போக்கு பிரச்சினையிலிருந்தும், காந்தா வலிப்பு வியாதியிலிருந்தும் முற்றிலுமாகக் குணமடைய; நீதிமன்ற வழக்குகளில் சிக்கிக்கொண்டிருக்கும் காகி, ரிங்கி, மன்ஜிந்தர் ஆகியோருக்கு சுமூகமான தீர்வு கிடைக்க; ஷிவானி, நிஷு, மோனிகா மற்றும் மனிஷாவிற்கு ஆசீர்வாதமான மழலைபாக்கியம் கிடைக்க; இங்குள்ள நமது வாலிபர்களுக்கு தகுந்த வேலைகளும், நல்ல கிறிஸ்தவ வாழ்க்கைத்துணைகளும் அமைய; நமது துணை மையங்களான பரேட்டா, தல்வாரி மற்றும் மூணாக் பணித்தளங்களில் ஊழியச்செயல்பாடுகள் மேலும் வளர்ச்சியடைய; 5 வயது குழந்தை பிகு நன்கு பேசும்திறனைப் பெற ஜெபிப்போம்.

## *மரணவாசல்களிலிருந்து தூக்கிவிடுகிற கர்த்தர்!*

*தமிழ்நாடு, வேப்பனப்பள்ளி பணித்தளம். ஜெய்நகர் கிராமத்திலுள்ள நமது விசுவாசி திரு. முனிராஜ் அவர்களின் மகள் சத்யா மற்றும் முனிராஜின் மகன் ஆகிய இருவரும் இரு சக்கர வாகனத்தில் செல்லும் போது பெரிய விபத்து ஏற்பட்டது. அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டனர். என்ன ஆச்சரியம்! அனைவரின் ஜெபத்தினால் உயிர்ச்சேதம் ஏதுமின்றி அற்புதமாய் தேவன் இருவரையும் பாதுகாத்துள்ளதற்காக கர்த்தரைத் துதிப்போம்.*

## *கல் குவாரி விபத்து!*

*குவாரியில் ஏற்பட்ட கல் வெடிப்பில் இருந்து ஜார்க்கண்டிலுள்ள கங்குபாடா விடுதிக்குழந்தைகளை தேவன் பாது காத்துள்ளார். வெடித்து சிதறிய பெரிய கற்கள் இரண்டு இடங்களில் வேகமாக வந்து விழுந்தன. ஒன்று குழந்தைகள் விளையாடும் இடத்திலும், மற்றொன்று கட்டிடத்தின்மீதும் விழுந்தது. அங்குள்ள ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் சேதமடைந்தது. குழந்தைகள் அனைவரும் உணவுக்கூடத்தில் கூடியிருந்ததால், காயமேதுமின்றி பாதுகாக்கப்பட்டனர். அல்லேலூயா!*




திரு. ஜாண் டேவிட் ராஜ், திரு. பவன் குமார்

## ஜைத்தோ: சித்தரஞ்சன் தான்டி & தேஜேஸ்விதா

**துதிக்க:** இயேசுவின் நாமத்தில் 5 பேர் புதிதாக இரட்சிக்கப்பட்டுள்ளனர். 5 இடங்களில் நடந்த சத்சங் மற்றும் இயேசுத் திரைப்பட நிகழ்ச்சிகள் மூலம் 516 பேர் சுவிசேஷத்தைக் கேட்டறிந்துள்ளனர். மன்ஜீத் கௌர், நௌஜீயோத் கௌர், குல்விந்தர் கௌர், அமர்ஜீத் கௌர், ஹர்மேந்தர் கௌர் மற்றும் பூஜா கௌர் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். கிரிஷான் குமார், நானக்சிங், ஜக்ஜீத் சிங் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றுள்ளனர். அநேக புதிய மக்கள் சுவிசேஷத்தைக் கேட்க வருகை தரும் பஸகானாவில் சுகமளிக்கும் கூட்டமொன்று தொடங்கப்பட்டுள்ளது. ஆராதனைக்கு வரத் தொடங்கியப்பின் நமது புதிய தொடர்பாளரான சிம்ரன்ஜீத் கௌருக்கு மூச்சுத்திணறல் பிரச்சினையிலிருந்து நல்ல சுகம் கிடைத்துள்ளது. தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கை செய்ய 8 பேர் ஆயத்தமாயிருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பஸகானா ஆலயத்தில் வைத்து நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்ட நமது புதிய விசுவாசிகளான பர்தீப் சிங், டுங்கர் சிங் மற்றும் ஹர்ஜீந்தர் சிங் ஆகியோரின் குடும்பத்தினர்கள் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்க; பங்குப்பெறும் மாணவர்களின் பெலவீனங்களினிமித்தம் செயல்பட முடியாமலிருக்கும் இப்பணித்தள மைய வாலிபர் வேதாகம வகுப்புக்குழு சீராக தொடர்ந்து நடைபெற; குடிப்பழக்கத்திலிருந்து குல்ஜிந்தர், பல்வந்த், பர்தீப் மற்றும் ஜஸ்விந்தர் விடுபட; மட்டா கிராமத்தில் தேவனை ஆராதிக்க நல்லதொரு இடம் கிடைக்க; பஸகானாவில் ஊழியம் செய்ய சிறந்த அர்ப்பணமுள்ள ஊழியர் கிடைக்க ஜெபிப்போம்.

## லேஹ்ரககா: ஐசக் ஆபேல் & அன்னா ரோஸ்லின்

**துதிக்க:** புதிதாக 450 பேருக்கு தேவ வார்த்தை அறிவிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள சபைக்கு 9 புதிய குடும்பங்கள் வரத் தொடங்கியுள்ளனர். சனத்திவாலா கிராமத்தில் முதல்முறையாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. வெளிப்புற சந்திப்பு ஊழியக்கூடுகைகளும், இரவுநேர ஆவிக்குரிய கூடுகைகளும் வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளன. விசுவாசியொருவரின் ஜெபத்தின் மூலம் ராஜி தீய ஆவியின் பிடியிலிருந்து விடுதலை பெற்றுள்ளார். ராஜ்விந்தர் சிங்கின் மகள் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டதால், அவருடைய முழு குடும்பமும் சுவிசேஷத்தைக் கேட்டு, இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சபைக்குப் புதிதாக வரத் தொடங்கியுள்ள 9 குடும்பத்தினரும் சொந்தமாக தேவ அன்பை ருசிக்கவும், விசுவாசத்தில் வளரவும்; இயேசுத்திரைப்பட ஊழியம் நடக்கவிருக்கும் பர்த், ரோக்லா, பிராஸ், திர்பா ஆகிய கிராமங்களிலும், வெளிப்புற சந்திப்பு ஊழியம் நடக்கவிருக்கும் பிகர்வால், கரத் ஆகிய கிராமங்களிலும் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதல் காணப்பட; இந்த லெந்து கால நாட்களில் விசுவாசிகள் மத்தியில் நல்ல ஆவிக்குரிய எழுப்புதல் உருவாக; இப்பணித்தளத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள வாலிபர் ஜெபக்குழு தொடர்ந்து வெற்றிகரமாக நடைபெற ஜெபிப்போம்.




திரு. இம்மானுவேல் ரஞ்சித்சிங் S.
திரு. சாலமோன் ஜெபராஜ் J.
திருமதி. பின்னி ஞானம் ஜாண் தினேஷ்
திருமதி. அனியா ஜோஸ்ஃபின் வெங்கடேசன்
திருமதி. ரேணு அருண் காந்தா
திருமதி. சாரா மால்தோ மர்கூஸ்

## பட்டாலா:

### வால்வி நேதாஜி டாடு & கல்பனா

**துதிக்க:** சுவிசேஷம் 700 பேருக்கு முதல்முறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2 குடும்பங்கள் தங்களது விசுவாசத்தை துணிவுடன் கிறிஸ்துவில் அறிக்கை செய்துள்ளனர். 15 புதிய ஏற்பாடுகளும், 3 வேதாகமங்களும் பகிரப்பட்டுள்ளன. 3 கிராமங்களில் புதிதாகச் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. மரணத்தினின்று சுனிதா காப்பாற்றப்பட்டுள்ளார். சுமன் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுதலை பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய விசுவாசிகளான விஷால், அஸ்வினா, தத்தா, கோமல், அஞ்சு, பால்வி, சஞ்ஜய் ஆகியோர் கிறிஸ்துவில் நன்கு பக்குவமடைய; சுனிதாவிற்கு மழலை பாக்கியம் கிடைக்க; பின்மாற்றம் அடைய முனையும் சந்தீப் விசுவாசத்தில் நன்கு வளர; கள்ளப் போதனைகளுக்குள் சிக்கியிருக்கும் சோனியாவின் மனக் கண்கள் திறக்கப்பட; ஆண், பெண் உறவுப் பிரச்சினைகளிலும், உலகப் பிரகாரமான காரியங்களிலும் மாட்டிக் கொண்டிருப்போர் இயேசுவைப் பற்றிக்கொண்டு அப்பிரச்சினைகளி லிருந்து மீண்டுவர ஜெபிப்போம்.

## ஹரியானா

### தோஷம்: ஜாண் டேவிட்சன் செல் வராஜ் & எஸ்தர்

**துதிக்க:** புதிதாக சுவிசேஷ நற்செய்தி 10 பேருக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. 2 புதிய ஏற்பாடுகளும், 3 வேதாகமங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. 2 பெண்கள் ஜெபக்குழுக்களும், 18 சத்சங் கூடுகை களும் நடத்தப்பட்டுள்ளன. கைலாசாகு வின் தலையில் ஒரு பெரிய மரக்கட்டை விழுந்தபோதிலும் அவர் சேதமேதுமின்றி உயிர்தப்பிப் பிழைத்துள்ளார். குழந்தை திருமணத்தினின்று தனு பாதுகாக்கப் பட்டுள்ளார். பிரித்தோ நுரையீரல் தொற்றிலிருந்து சுகம் பெற்றுள்ளார். லலிதாவின் மகனுடைய சூதாட்டப் பழக்கத் தினால் அபராதமாக ரூ.50,00,000/- பணம் கட்டவேண்டிய இடத்தில் அது ரூ.3,00,000/-மாக குறைந்திருப் பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பல்வான், மின்து, சந்தோஷ், அஜய், ராம்பால், பாபுலால், பர்மா மற்றும் தேஜ்விருடைய குடும்பங்கள் தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் துணிவுடன் அறிக்கை செய்ய; ஊழியத்திற்கு விரோதமாக இருந்த இப்பணித்தளத்தில் சிற்சில எதிர்ப்புகளுடன் சுவிசேஷத் திற்குத் திறந்தவாசல் கிடைத்திருக்கும் இச்சமயத்தில் அங்குள்ள சுயேட்சை போதகர்கள் நமது ஊழியத்திற்கு இடையூறு வருவிக்காமலிருக்க; இருதய கோளாறினால் கஷ்டப்படும் அஜய் மற்றும் காதுகேளாமை, வாய்ப்பேச இயலாமை கோளாறுகளினால் அவதிப்படும் விஜயிற்கு அற்புத சுகம் கிடைக்க ஜெபிப்போம்.



திரு. கோல்டன் J. இன்பராஜ்

## ஹரியானா பிராந்தியம்:
**பிபாபா பானி & பித்திகா**

**துதிக்க:** ஹரியானா, உத்தராகண்ட் மற்றும் டெல்லி பிராந்தியங்களில் ஊழியம் செய்யும் நமது ஊழியர்களுக்கு தேவ வழிநடத்துதல் நிறைவாக கிடைத்து வருகின்றது. 2767 புதியவர்களிடம் தேவ வார்த்தை பகரப்பட்டுள்ளது. அதில் 15 பேர் விசுவாசிகளாகி, கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். 389 புதிய ஏற்பாடுகளும், 33 வேதாகமங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. தேவ தயவால் அசோக்நகர் பகுதி ஆலயப்பிரதிஷ்டை ஆராதனை சிறப்பாக நடந்து முடிந் துள்ளது. தீவிரமான ஜெபத்தினால் நமது சானியானா நிலப்பதிவுப்பணி வெற்றி கரமாக முடிந்துள்ளது. ஃபத்தேஹ்பாத்தில் கிறிஸ்தவ கல்லறை தோட்டத்திற்காக நல்லதொரு நிலம் கிடைத்துள்ளது. மனநிலை பாதிப்பிலிருந்த மம்தா ஜெபத் தின்மூலம் சுகம்பெற்றுள்ளார். நானக் மட்டா பணித்தளத்திலிருந்து 3 குடும்பங்கள் வெளிப்புற சந்திப்பு சத்சங் நிகழ்ச்சி மூலம் சுவிசேஷத்திற்கு செவிசாய்க்க ஆரம்பித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கலான்வாலி பகுதியில் போதைப்பழக்கத்திற்கு அடிமையாகி யுள்ள மக்கள் அப்பழக்கத்திலிருந்து வெளிவரவும், கிறிஸ்துவண்டை கிட்டிச் சேரவும்; கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டுள்ள 15 புதிய ஆத்துமாக்கள் விசுவாசத்தில் வளரவும், சுவிசேஷத்தைக் கேட்டிருக்கும் அநேக புதிய குடும்பங்கள் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்கவும்; ஏற்கனவே ஆராதனையை நடத்திக் கொண்டிருந்த வீட்டு இடம் மிகச் சிறியளவாக இருப்பதால், பர்வாலா பணித்தள விசுவாசிகளுக்கு நல்லதொரு ஆலயம் கட்டப்பட; இப்பிராந்திய எல்லா திருச்சபை சிறுவர்களும் ஞாயிறுப்பள்ளி ஆராதனையில் ஒழுங்காகப் பங்கேற் கவும், கர்த்தரை அறிகிற அறிவில் அவர்கள் முன்னேறவும்; சுகம் வேண்டி ஜெபத்தில் காத்திருப்போருக்கு அற்புத சுகம் உண்டாக; ஹரியான்வி மொழி பேசும் மக்களிடையே சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட; நமது வாலிப விசுவாசிகளுக்கு தகுந்த கிறிஸ்தவ வாழ்க்கைத்துணைகள் அமைய ஜெபிப்போம்.

## *எதிராக வரும் எதுவும் எதிர்கொள்ள முடியாது!*

*கர்நாடகா, ஹூப்ளி பணித்தள உப்புலா தின்னி கிராமத்தைச் சேர்ந்த நமது புதிய விசுவாசிகளான திரு. சுனில் சௌவான் & நீலாபாய் லாமானி ஆகியோரை ஆலயத்திற்கு வரவிடாதபடி அக்கிராம மக்கள் அவர்களைத் தடை செய்ததோடு, அவர்களுக்கு எதிராக மந்திரவாதங் களைச் செய்தும் துன்பப்படுத்தினர். அவர்களுக்காக ஜெபித்தோம். அனை வரின் ஜெபத்தைக் கேட்ட தேவன், இருவரையும் விசுவாசத்தில் உறுதிப் படுத்தியதோடு, தடைகளை நீக்கி ஆராதனையில் அவர்கள் பங்குப்பெற உதவி செய்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.*




திரு. ஆபிரகாம் G.
திரு. சன்னமல்லப்பா அங்காடி
திருமதி. ஜெயந்தி ஃபிரான்சிஸ்

# உத்தராகண்ட்

### தினேஷ்பூர்: ராமசாமி ஜெரோம் & அந்தோணி ராஜம்

**துதிக்க:** பராச்சி கிராமத்தில் முதல்முறையாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. கேதா கிராமத்தைச் சார்ந்த வினோத் மற்றும் நிஷா சுவிசேஷத்தின்மீது அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். தய்னம்பர் கிராம கீதா தீய ஆவியின் பிடியிலிருந்து விடுதலை பெற்று, தனது குடும்பத்தாருடன் சமாதானமாய் வாழ்ந்து வருகின்றார். தல்புரா கிராம சீமா ஜெபத்தின்மூலம் நல்லதொரு வாழ்க்கைத்துணையைக் கிடைக்கப்பெற்றுள்ளார். தவ்லாகந்த் கிராம சீமா அறுவைசிகிச்சை மூலம் ஆரோக்கிய மான குழந்தையைப் பெற்றெடுத்துள்ளார். நசிமாவிற்கு சிறப்பான முறையில் கண் அறுவைசிகிச்சை செய்யப்பட்டுள்ளது. கொலைவெறிபிடித்த திருடனின் கைக்கு திம்ரி கிராம ராகேஷ் குமார் விலக்கிக் காக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்திற்குச் செவிமடுக்கும் சுர்ஜித், பாபு மற்றும் இந்திராபாலின் குடும்பத்தினர்கள் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; லக்ஷ்மண், ராம்பாபு, ராஜ்குமார், ஜித்தேந்தர் ஆகியோரின் குடும்பங்கள் தங்களது கிறிஸ்தவ விசுவாசத்தில் நிலைத்து நிற்க; நமது மூத்த விசுவாசியான நாராயணனின் மனைவியை இழந்து துக்கத்திலிருக்கும் அவரது குடும்பத்தினரின் மனஆறுதலுக்காகவும், அவர்களது மகன் சூரஜிற்கு நல்லதொரு வாழ்க்கைத்துணை அமையவும்; தவறான குற்றச்சாட்டினிமித்தம் சிறையிலிருக்கும் நமது விசுவாசியின் மகன் அனில் விரைவில் விடுவிக்கப்பட; கடந்த 2 மாதங்களாகப் பல்வேறு சரீர பெலவீனங்களால் அவதிப்பட்டுவரும் சய்தி லிகன்ஜ் கிராம நமது விசுவாசி காந்தாதேவி பூரண குணமடைய ஜெபிப்போம்.

### நானக்மட்டா: சிவகுமார் & சுசிலா மராக்

**துதிக்க:** சுவிசேஷம் 2 கிராமங்களிலுள்ள 65 பேருக்குப் புதிதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. 20 புதிய ஏற்பாடுகளும், 3 வேதாகமங்களும் மக்களிடையே பகிரப்பட்டுள்ளன. 7 இடங்களில் சத்சங் நிகழ்ச்சிகளும், 6 வீட்டு ஜெபக்கூட்டங்களும் முறையே நடத்தப்பட்டுள்ளன. நௌசார் கிராமத்தில் வெளிப்புற சந்திப்பு ஊழியம் சிறப்பாக நடைபெற்றுள்ளதில், 6 குடும்பங்கள் சுவிசேஷத்தைக் கேட்டுள்ளனர். அதில் 3 குடும்பங்கள் சுவிசேஷத்திற்குச் செவிசாய்ப்ப தோடு, நமது ஊழியர்களை தங்களின் வீடுகளுக்கு வந்து ஜெபிக்குமாறும் அழைக் கின்றனர். குடிப்பழக்கத்திலிருந்து ஆக்னிஷ் விடுவிக்கப்பட்டுள்ளார். 3 1/2 வருட திருமண வாழ்விற்குப்பின் அன்கிதாவின் குடும்பம் மழலை பாக்கியத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வேலையில்லாததினால் மனச் சோர்படைந்திருக்கும் தன்ஜீத்திற்காக; அதிகப் பட்ச நீரிழிவு நோய், கொழுப்புச்சத்து, இரத்த அழுத்தக்கோளாறுகளிலிருந்து கீதா கௌர் சுகம் பெற; சந்தீப் சிங்கிற்கு நல்லதொரு வேலை கிடைக்கவும், நிர்மல் சிங் தனது வியாபாரத்தில் வெற்றியடையவும்; ரிங்கு குடிப்பழக்கத்திலிருந்து மீள ஜெபிப்போம்.




திருமதி. பெரில் சிரோமணி ஏகலைவன்
திரு. பீட்டர் பிரபாகரன்

## டெல்லி

### பட்பர்கன்ஜ்:

**P.G. கிறிஸ்டோபர் & மேபல்**

**துதிக்க:** சுவிசேஷ நற்செய்தி மூலம் 222 பேர் புதிதாக இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டுள்ளனர். 16 புதிய ஏற்பாடுகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. மக்கள் ஆதிக்கம் அதிகமுள்ள அண்ணாநகர் சேரிப்பகுதியில் சுவிசேஷத்திற்கு மக்கள் ஆர்வமுடன் செவிசாய்க்கின்றனர். சாலை விபத்திலிருந்து பிரமிளா காப்பாற்றப்பட்டுள்ளார். டெல்லியிலுள்ள ஜந்தர் மந்தரில் வைத்து சபைகள் துன்புறுத்தப்படுவதையும், போதகர்கள் கைது செய்யப்படுவதையும் எதிர்த்து நடைபெற்ற அமைதி பேரணியில் நமது விசுவாசிகள் 8 பேர் கலந்துகொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பட்பர்கன்ஜில் விசுவாசி களுக்கென நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கும் மேளா தடையின்றி நடத்தப்படவும், அது நற்பலன் தரவும்; தலையில் காயம் ஏற்பட்டுள்ள அருஷ் ஆபத்தேதுமின்றி சுகமடைய; ஜெகதீஷின் மாமனார் புற்றுநோயிலிருந்தும், சோனு ஆபிரகாம் நடக்க இயலாமல் இருக்கும் முதுகுத் தண்டுவடப் பிரச்சினையிலிருந்தும், மாளிகா சிறுநீரகம் மற்றும் வாதவலி பிரச்சினைகளிலிருந்தும், தீப்தி காச நோயிலிருந்தும் அற்புத சுகமடைய; சாராயம் மற்றும் போதைப் பொருட்கள் நமது தலைநகரத்தில் தடை செய்யப்பட; எதிர்ப்புகள் மற்றும் உபத்திரவங்களைக் குறித்து விசுவாசிகளுக்கு இருக்கும் பயங்கள் முற்றிலுமாக மறைய ஜெபிப்போம்.

## ராஜஸ்தான்

### உதய்பூர்:

**ஆஷிஷ் குமார் & சவிதா தேவி**

**துதிக்க:** கக்ராகேடா, அவரதா ஆகிய புதிய இடங்களில் இயேசுவின் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. 11 புதிய ஏற்பாடு களும், 2 வேதாகமங்களும் பகிரப் பட்டுள்ளன. சுரபாயும், சுஷிலும் காச நோயிலிருந்து பூரண சுகமடைந்துள்ளனர். ஜெபத்தின் மூலம் காளிபாய் கண்பார்வை கோளாறிலிருந்தும், சுசாதேவி பெண்ணியப் பிரச்சினையிலிருந்தும் சுகம் பெற்றுள்ளதோடு, பட்டு, ரமிலா, ராஜு ஆகியோர் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளனர். முந்தாவாடி மற்றும் கத்கியா பாலா கிராமங்களில் நமது ஊழியத்திற்குத் திறந்தவாசல் கிடைத்திருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆசிரியர்களுக்கான தகுதித் தேர்வு (REET) எழுதியிருக்கும் ராம்லால், நரேஷ், ரேகா, ராகுல், குலாப், கிஷான்லால், சுனிலால், ஹரீஸ் ஆகியோர் அத்தேர்வில் நற்தேர்ச்சி பெற; பர்ஜிபாடா மற்றும் தல் வியாவாத் திருச்சபைகளில் பின்மாற்ற மடைந்திருப்போர் மீண்டும் கிறிஸ்துவண்டை வர; திடீர் பக்கவாதத்தினால் பாதிக்கப் பட்டிருக்கும் ஈஸ்வர் அற்புத சுகம் பெற; பிரதீப், கொசட்டா, பயல் ஆகியோர் பிசாசு பிடியிலிருந்து விடுபட; மஞ்சு, ரேச்சல், பரி, ராதா மற்றும் அருணாவிற்கு சுகப்பிரசவங்கள் நேரிட ஜெபிப்போம்.



செல்வி. சுசித்ரா லிம்மா

## அனுப்கார்:
### பவுலஸ் பர்ஜோ & பினிட்டா டொப்போ

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டு, அதன்மூலம் 136 பேர் இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டுள்ளனர். 27 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 4 வேதாகம வகுப்புகளும், ஞாயிறுப்பள்ளி வகுப்புகளும் முறையே தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. நமது தேசிய மிஷனரிப்பயிற்சி மையத்தில் வைத்து நடைபெற்ற ஹாகாய் பயிற்சி நிகழ்ச்சியில் இங்குள்ள ஊழியர்கள் கலந்துகொள்ளும் சிலாக்கியம் பெற்றுள்ளனர். தேவ தயவால் நமது விசுவாசிகளான தர்சும் மற்றும் சுமன் ஒருவருக்கொருவர் திருமணவாழ்வில் இணைய நிச்சயிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விந்தர்சிங் மற்றும் டோனி யின் குடும்பத்தினர்கள் கிறிஸ்துவின் மீது தாங்கள் கொண்டிருக்கும் விசுவாசத்தைப் பகிரங்கமாக அறிக்கை செய்ய; புற்றுநோயிலிருந்து ஓம் பிரகாஷ் அற்புத சுகம் பெற; 43GB கிராமத்தில் சிறியதொரு ஆலயம் கட்டுவதற்கு தேவையான பொருட்கள் கிடைக்க; கோயன் கௌர் மூச்சுத்திணறல் பிரச்சினையிலிருந்து சுகமடைய; 36GB பகுதி திருச்சபையினருக்கு சமிதி வங்கிக்கணக்கு தொடங்கப்படுவதற்கு தேவ ஒத்தாசை கிடைக்க ஜெபிப்போம்.

## ஹனுமான்கட்:
### முதவத்து ராஜு நாயக் & புக்கியா ஜான்சிபாய்

**துதிக்க:** புதியவர்களான 180 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டிருப்பதின் மூலம் 3 பேர் விசுவாசிகளாகி, கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். சுரிஷா கிராமத்தில் தொடங்கப்பட்டுள்ள புதிய திருச்சபை மக்களிடையே கர்த்தரின் வல்லமையான கிரியைகளைக் கண்கூடாக காணமுடிகிறது. நமது சபை மூப்பரான ராஜாவிந்தர் கௌர் தனது வேலையில் உயர்வு பெற்றுள்ளார். நமது விசுவாசியான சுனிதாவிற்கு தபால்துறையில் சிறியதொரு வேலை கிடைத்துள்ளது. ஊழியர்கள் நீட்டுவிற்காக ஜெபித்தபோது, அந்த ஜெபத்தை தேவன் கேட்டு தீய ஆவியின் பிடியிலிருந்து அவருக்குத் தந்துள்ள விடுதலைக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இப்பணித்தளத்திலுள்ள நமது வாலிபர்களான பவன், சோனா, நிக்கா, சின்னி ஆகியோருக்கு நல்ல கிறிஸ்தவ வாழ்க்கைத்துணைகள் அமைய; 10-ம் & 12-ம் வகுப்பு அரசாங்கத்தேர்வு எழுதிக்கொண்டிருக்கும் நமது விசுவாசி களின் பிள்ளைகளுக்கு தேவன் அதற்குத் தகுந்த ஞானம், கிருபைகளை அருள; ராஜ்விந்தர் கௌர் தோல் ஒவ்வாமை பிரச்சினையிலிருந்தும், கர்னி கல்லீரல் பிரச்சினையிலிருந்தும் சுகமடைய ஜெபிப்போம்.




திருமதி. லிடியா சுதர்சன் தாமஸ்
திருமதி. அகோனி குட்டோய் அச்சுமி
திரு. கிறிஸ்டியன் பிரகாஷ் S.
திருமதி. ஜெபமலர் ராஜன், திரு. மத்தியாஸ் பஹாடியா

### சாங்ரியா:

**செல்வம் தவமணி & ஹெப்சி**

**துதிக்க:** ஒரு கிராமத்தைச் சார்ந்த 30 பேருக்கு புதிதாக சுவிசேஷம் எடுத்துரைக்கப் பட்டுள்ளது. தன் கொம்புகளினால் முட்ட வந்த மாட்டிடமிருந்து ஜஸ்விந்தர் கௌர் அற்புதமாகக் காப்பாற்றப்பட்டுள்ளார். ராமன் லக்கார்டின் எருமை மாடு கன்று ஈன்று சுகமாக உள்ளது. நக்ரானா கிராம சுனிலுக்கு பெட்ரோல் பங்கில் நல்லதொரு வேலை கிடைத்துள்ளது. பரம்ஜோத் மூச்சுத்திணறல் பிரச்சினையிலிருந்தும், பரம்பால் காய்ச்சலிலிருந்தும் பூரண சுகம டைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** போதைப்பொருள் பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளோர் அதிலிருந்து முழுமை யாக விடுதலை பெற; ராஜு, தர்மேந்தர், பிரகாஷ் மற்றும் ரிங்குவின் குடும்பங்களில் குழந்தை பாக்கியங்கள் கிடைக்க; பல்தேவ் மற்றும் சந்தீப்பின் வீடுகட்டுமானப்பணிகள் நல்லமுறையில் முடிவடைய; குல்வீந்தர் கௌர் முதுகுவலியிலிருந்தும், ஜோதி நீண்ட நாட்களாக இருக்கும் பெலவீனத்திலிருந்தும் சுகமடைய ஜெபிப்போம்.

## உத்தரப் பிரதேசம்

### கைம்கஞ்ச்:

**எபநேசர் G. சாம் & ஜெபராணி**

**துதிக்க:** கூடுதல் ஜெபத்தின்மூலம் நமது விசுவாசி ஊர்மிளா தனது பிரசவநாட்களில் ஏற்பட்ட சிக்கல்களிலிருந்தும், சத்துருவின் போராட்டங்களிலிருந்தும் விடுபட்டு, சுகப்பிரசவத்தின் மூலம் நல்ல அழகான ஆண்குழந்தையைப் பெற்றெடுத்துள்ளார். பில்கார், ஹசரேன் மற்றும் கைம்கஞ்ச் பணித்தளங்களிலிருந்து நமது மிஷனரி களும், சுதேச ஊழியர்களும், மேலும் பில்காரிலுள்ள சில விசுவாசிகளுமாகச் சேர்ந்து நமது தேசத்திற்காகக் கூட்டு உபவாச ஜெபம் ஏறெடுத்துள்ளனர். சுவிசேஷத்தைக் கேட்டுள்ள 2 பேர் விசுவாசிகளாகி, தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கை செய்துள்ளனர். லஜோரி கிராமத்தில் மருத்துவ முகாமொன்று சிறப்பாக நடத்தப்பட்டு, அங்குள்ள சிலருக்கு தேவவார்த்தையும் பகரப்பட்டுள்ளது. லக்கன்பூர் கிராம சிறுபிள்ளைகள் புதிய ஏற்பாட்டிலிருந்து பல வசனங்களை வைராக்கிய வாஞ்சையுடன் மனனம் செய்து வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கடந்த 3 மாதங்களாகப் பக்க வாதத்தினால் பாதிக்கப்பட்டு நடக்கமுடியாம லிருக்கும் நமது புதிய தொடர்பாளரான அசோக் விரைவில் பூரண சுகம் பெற்று, நமது ஆலய ஆராதனையில் வந்து பங்குப்பெற; விஷ்வதயாள் சிறுநீரகக்கல் பிரச்சினையிலிருந்தும், மகேஷ் பித்தப்பைகல் பிரச்சினையிலிருந்தும் முழுசுகமடைய; இத்தபசுக்கால நாட்களில் நமது விசுவாசிகள் தேவவார்த்தை, ஜெபம், உபவாசம் ஆகியவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, கிறிஸ்துவில் நன்கு வளர்ந்தோங்க; இங்குள்ள வாலிபர்கள் கிறிஸ்துவுக்குள் நற்சாட்சியுள்ள வாழ்வு வாழ; இங்கிருக்கும் புதிய தொடர் பாளர்கள் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை வெளிப்படையாக அறிக்கை செய்து, கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.




திருமதி. ஹெப்சிபா ஜேக்கப் பிரதீப் குமார்
திருமதி. ராஜம் பால் சம்பத்
திருமதி. கண்மணி பரிமளம் ராஜாசிங்

## கோண்டா சிறுவர் விடுதி:

### ஓம் பிரகாஷ் குப்தா & தும்பா

**துதிக்க:** நமது ஊழியங்கள் சம்புதாரா, தில்காய், குக்கூர்பக்னா மற்றும் பால்னா கிராமங்களில் நடைபெறும் வேதாகம வகுப்புக் குழுக்கள் மற்றும் ஊழியப்பின்தொடர் பணிகளால் நிலையாக வளர்ந்து வருகின்றன. நமது விடுதிச்சிறுவனான மோகித் காச நோயிலிருந்து ஜெபத்தின்மூலம் முழுசுக மடைந்துள்ளான். குடும்ப எதிர்ப்புகளின் மத்தி யிலும் நமது விசுவாசியான வித்யாராமும் அவரது குடும்பமும் கிறிஸ்தவ விசுவாசத்தில் தேவ கிருபையால் நிலைத்து நிற்கின்றனர். நமது விடுதிப்பிள்ளைகளைச் சகலவித வியாதிகளுக்கும், ஆபத்துகளுக்கும் தேவன் விலக்கிக்காத்து வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 10-ம் & 12-ம் வகுப்பு தேர்வுகளை எழுதிவரும் நமது விடுதிப்பிள்ளைகள் 15 பேருக்கு தேவன் அதற்குத் தகுந்த ஞானம், புத்தி, அறிவு கட்டளையிட; நீதிமன்ற வழக்கிலிருக்கும் நமது விடுதி நிலப்பிரச்சினையில் வாதாடும் நமது வக்கீலுக்கு தேவன் அவ்வழக்கை நன்மை யாய் கையாள நல்ல ஞானம் தர; இம்மாதங் களில் நடைபெற்றுவரும் பிள்ளைகளின் சேர்க்கைப்பணி நிலவரங்கள் நல்ல விதங்களில் நடைபெற; அர்ச்சனா மற்றும் ஷாமா சுகப்பிரசவங்களின் மூலம் ஆரோக்கியமான குழந்தைகளைப் பெற்றெடுக்க; நமது ஊழிய விரிவாக்கத்திற்கு மேலும் பல இடங்களில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட; நமது விடுதிப்பிள்ளைகள் யாவரும் தெய்வ பயத்துடன் வளர்ந்தேற ஜெபிப்போம்.

# மத்தியப் பிரதேசம்

## பாக்லி & உதய்நகர்:

### D. வில்சன் & ரஷ்மித்தா பரிடா

**துதிக்க:** சுவிசேஷம் 26 கிராமங்களில் உரைக்கப்பட்டுள்ளதின் மூலம் புதிதாக 770 பேர் கிறிஸ்துவைக் குறித்து அறிந்துள்ளனர். புதிதாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ள 10 கிராமங்களில் ஊழியப்பின்தொடர்பணி கிரமமாக நடந்து முடிந்துள்ளது. புதன்கிழமை உபவாச ஜெபங்களின் மூலம் நமது உள்ளூர் தன்னார்வ ஊழியர்கள் நன்கு ஊக்குவிக்கப்படுகின்றனர். கந்தாபோட் மற்றும் கனோட் கிராமங்களில் ஊழியம் தொடங்குவதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது. ஜீப்குழு ஊழியம் மூலம் 25 கிராமங்களில் வெளிசந்திப்பு ஊழியங்கள் சிறப்பாக நடந்து முடிந்துள்ளன. கமத் கிராமத்தில் வைத்து நடைபெற்ற வாலிபர் முகாமில் பங்கேற்ற 62 வாலிபர்களுக்கு அம்முகாம் மிகுந்த ஆசீர்வாதமாக அமைந்துள்ளது. ராமா விற்கு இடுப்புப்பகுதியில் வெற்றிகரமாக அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, தற்போது மீண்டும் நடக்கத் தொடங்கியுள்ளார். தினேஷ் தன்னார்வமாக ஊழியத்தில் உதவிசெய்ய நம்முடன் இணைந்திருக்கிறார். ஜாம்சிங் பிற மதவழிபாட்டுச் சடங்காச்சாரத்தை விட்டுவிட்டு, கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தகாடி கிராமத்தலைவரின் எதிர்ப் பினால் அங்குள்ள திருச்சபையில் நடந்து கொண்டிருந்த ஜெபங்கள் நிறுத்தப்பட்டுள்ள இந்நிலைமை மாறவும், அக்கிராமத்தலைவர் சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்கவும்; சச்சியா, தேவசியா, ஜிரில், குரடியா, கருணாவத்-பரி ஆகிய கிராமங்களில் ஆராதனைக்குழு வொன்று துவங்கப்பட; தெம்பரணியா திருச் சபையினரிடையே காணப்படும் ஆவிக்குரிய வாழ்வில் இருக்கும் ஏற்றத்தாழ்வுகள் சீராகி, அவர்கள் கர்த்தருக்குள் உண்மையாய் வளர; அர்ச்சனா, சுரா, மாசி, ரேகா, ஜெகதீஷ் ஆகியோர் தீய ஆவிகளின் கட்டுகளிலிருந்து விடுபட ஜெபிப்போம்.




திரு. பாசுதேவ் மால்தோ
திருமதி. ஜெபா தெபொராள் வேதமாணிக்கம்

### டப்ரா:

**சத்திகந்த் பரிச்சா & சகரிகா**

**துதிக்க:** ஜீப்குழு வெளிப்புற சந்திப்பு ஊழியத்தின்மூலம் ‘இயேசுவின் வாழ்க்கை சரிதை’ என்ற புத்தகத்தின் 5000 பிரதிகளும், சுவிசேஷ புத்தகங்களின் 50 பிரதிகளும் விற்பனை செய்யப்பட்டுள்ளதோடு, 300 சுவிசேஷ கைப்பிரதிகளும் மக்களிடையே விநியோகிக்கப்பட்டுள்ளன. குவாலியர் மேளாவில் வெளிப்புற சந்திப்பு ஊழியம் நடைபெற்றுள்ளது. தினந்தோறும் காலையில் ஜூம் மூலம் நடத்தப்படும் ஜெபவேளை நமது விசுவாசிகளுக்குக் கர்த்தருக்குள் வளர்ந்து வருவதற்குப் பேருதவியாக இருக்கின்றது. சபை மூப்பர்களை உருவாக்கும் பணி அமர்புரா கேரி திருச்சபையில் படிப்படியாக நடைபெற்று வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிட்டோன்டா, பிதர்வார், நயகாவ், சிம்ரியா, தய், சுல்தான்பூர் ஆகிய திருச்சபையினர் ஞாயிறு ஆராதனைக்குச் செல்ல முன்னுரிமை கொடுக்க; சுல்தான்பூர் மற்றும் நயகாவ் ஆலயக்கட்டிடங்கள் சீரமைக்கப்பட; பிரேம்நகரில் ஓர் ஆலயம் கட்டப்பட; அழிகின்ற ஆத்துமாக்களைக் குறித்த அதிக கரிசனை உள்ளூர் சுதேச ஊழியர்களுக்கு உருவாக; வரும்நாட்களில் நடக்கவிருக்கும் ஆவிக்குரிய நிகழ்ச்சிகளில் மக்கள் தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் வெளிப்படுத்த ஜெபிப்போம்.

## பீஹார்

### அரரியா:

**ஜென்னிஸ் & சுகந்தி புஷ்பம்**

**துதிக்க:** குழந்தை அன்சுகுமாரிக்கு 2 வருடகாலமாக இருந்துவந்த கண் கோளாறு குணமாகியுள்ளது. கீதா தேவி காசநோயிலிருந்தும், ராதா விஷத்தின் கொடூரத்தன்மையிலிருந்தும் ஜெபத்தின் மூலம் அற்புத சுகம் பெற்றுள்ளனர். ஷியாமின் பணத்தேவை சந்திக்கப்பட்டதோடு, அவருக்கு நல்லதொரு வேலையும் கிடைத்துள்ளது. நமது ஊழியர்களுக்கு அவர்களது ஊழியப்பாதையெங்கும் தேவகாவல் இருந்து வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** போச்டா மற்றும் பிம்பூர் கிராமங்களில் நடந்துக்கொண்டிருக்கும் ஊழியங்களின் வாயிலாக அதிக ஆத்துமாக்களைக் கர்த்தருக்கென்று ஆதாயம் பண்ண; நமது விசுவாசி லால்பாபுவின் குடும்பத்தார் இரட்சிக்கப்பட; விசுவாசத்தில் பின்மாற்றமடைந்திருக்கும் முன்னாதேவி மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வரவும், அவருக்கு தேவன் நல்ல சுகத்தைத் தரவும், குடிப்பழக்கத்திலிருந்து அவரை விடுவிக்கவும்; மனிஷ் & சிஜியா தம்பதியருக்கும், 20 வருடங்களாக குழந்தை செல்வத்திற்குக் காத்திருக்கும் சந்தோஷ் & சந்திரிகாவிற்கும் குழந்தை பாக்கியங்கள் கிடைக்க; சுப்பன் ரிஷ்தேவ் காசநோய்த் தொற்றிலிருந்து பூரண சுகம் பெற; ரங்தா கிராம விசுவாசிகளுக்கும், பிந்து, துக்னி, புத்தேஸ்ரீ ஆகியோருக்கும் வீடு கட்டுவதற்கென அனுமதிக்கப்பட்ட அரசாங்க நிதியுதவி அனைத்தும் கிடைக்க; அரரியா பணித்தள சிறுவர்களுக்கு நல்ல அரசாங்கப் பள்ளிகள் ஏதுமில்லாததால், அவர்களுக்கு சிறந்த கல்வி வாய்ப்பு கிடைக்க ஜெபிப்போம்.




திரு. கிங்ஸ்லி ஐசக் ஜாண்சன் M.
திருமதி. அமுதா குமார் பால்
திரு. ஸ்ரீனிவாசன் J., திரு. டென்சிங் R.
திரு. அஸ்தபான் ஆதித்ய குமார் லிம்மா

### ராணிகன்ஜ்:

**தர்மேந்தரா பரிச்சா & மதுஸ்மிதா பானி**

**துதிக்க:** காஜி மற்றும் சித்ரகுத் கிராமங்கள் சுவிசேஷத்தினால் புதிதாகச் சந்திக்கப்பட்டுள்ளன. மதன் ரிஷ்தேவ் கிறிஸ்துவில் தனது விசுவாசத்தை அறிக்கையிட்டு, விசுவாசிகளின் மந்தையில் இணைந்துள்ளார். நமது புதிய தொடர்பாளரான பூஜாதேவி ஞாயிறு சபை ஆராதனையில் கிரமமாகப் பங்கேற்கிறார். தன் கால்காயத்திலிருந்து சுபாஷ் சுகம்பெற்று வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்தவ விசுவாசத்தில் நமது புதிய விசுவாசிகள் தெளிந்த புத்தியுடன் பக்குவமாக வளர்ந்து வர; மனநிலை பாதிப்பிலிருந்து கந்தன்குமார் சுகமடைய; தன் தந்தையை இழந்த துக்கத்திலிருக்கும் நமது விசுவாசி முரியாதேவி தேவ ஆறுதல் பெற; கண் கோளாறிலிருந்து குங்குன் குமார் சுகம் பெற ஜெபிப்போம்.

## ஜார்க்கண்ட்

### பர்ஹர்வா:

**கிரிஷான் குமார் & சாந்திலால்**

**துதிக்க:** புதிதாக 5 பேர் நமது ஞாயிறு ஆராதனையில் வந்து கலந்துகொள்கின்றனர். நமது புதிய தொடர்பாளர்கள் 5 பேர் கிறிஸ்துவை தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். நமது விசுவாசி ஜெயபிரகாஷ் சஹாவின் முயற்சியின் மூலம் இரவுநேர இணையதள கூட்டு ஜெபம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2 கிராமங்களில் 3 இடங்களில் நடத்தப்பட்ட இயேசுத்திரைப்பட ஊழியநிகழ்ச்சிகள் மூலம் 210 பேர் எவ்வித தடையுமின்றி சுவிசேஷ நற்செய்தியைக் கேட்டும் கண்டுமுள்ளனர். நமது விசுவாசியான கருண் ஆலயத்திற்கென மரத்தினால் செய்யப்பட்ட பிரசங்கப்பீடமொன்றை நன்கொடையாகக் கொடுத்துள்ளார். ஜாம்பூர் கிராம நமது விசுவாசிகள் அவர்கள் மத்தியில் ஒரு புதிய ஜெபக்குழுவைத் தொடங்கியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ராகேல் புற்றுநோயிலிருந்தும், துலாரிதேவி நீரிழிவுநோயிலிருந்தும், 5 வயது குழந்தையான மித்தி இருதயத் துளை பிரச்சினையிலிருந்தும் அற்புத சுகம் பெற; பர்ஷா பிசாசு பிடியிலிருந்து மீள; கிறிஸ்துவை விசுவாசிக்கும் பொருட்டு பார்வதி மற்றும் நிஷாவிற்கு குடும்பங்களில் இருக்கும் எதிர்ப்புகள் நீங்க; முறைகேட்டினிமித்தம் பயந்து தனது 2 பெண் பிள்ளைகளையும் தன் தகப்பனாரிடம் விட்டுவிட்டு, வீட்டைவிட்டு ஓடியுள்ள நிஷாவிற்காக; தவறான குற்றச்சாட்டினால் ஒரு கொலை வழக்கில் சிக்கி சிறைவாசம் இருக்கும் நமது விசுவாசியுடைய சகோதரியின் மகனான சாந்தனுக்கு விரைவில் ஜாமீன் கிடைக்கவும், அவரது தாயாரும் இவ்வழக்கில் சிக்கிக்கொள்ளாதவாறு பாதுகாக்கப்படவும்; நமது விசுவாசிகள் தங்களது ஆவிக்குரிய விசுவாச வாழ்வில் நன்கு வளர்ந்து முன்னேற ஜெபிப்போம்.




திரு. பிரபாகர சாரதி, திரு. பாபு P.
திருமதி. மேரி ஜான்சி ராணி பென்ஹர் M.

## தம்னி:

### ஜாண்பால் ஹாரிஸ் & விமலா டெய்சி

**துதிக்க:** புதிதாக சுவிசேஷத்தை 106 பேர் கேட்டுள்ளனர். 66 வீடுகளில் வீட்டு ஜெபக்கூட்டங்கள் முறையாக நடத்தப் பட்டுள்ளன. 3 நாட்கள் தும்கா பணித்தளத்தில் வைத்து நடைபெற்ற சபை மூப்பர்களின் குடும்பக்கூடுகை, அதில் குடும்பத்துடன் உற்சாகமாகக் கலந்துகொண்ட அநேகருக்கு மிகுந்த ஆசீர்வாதமாக இருந்துள்ளது. பல்வேறு பெலவீனங்களிலிருந்து தகுபேடா சபை மக்களான மரியம் மால்தோ, விமுலா மால்தோ, ஆனந்த் மால்தோ, பிரிஸில்லா மால்தோ மற்றும் பத்ராஸ் மால்தோ ஆகியோர் நன்கு சுகமடைந்துள்ளனர். விசுவாசத்தில் பின்மாற்றமடைந்திருந்த ஜோனத்தான் மால்தோ மனந்திரும்பி, மீண்டும் கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம் பித்துள்ளார். மூப்பர்களுக்கான கூடுகையில் கலந்து கொண்டப்பின் ஜாலேஷ்வர் மால்தோ தனது ஊழியப்பணியில் காட்டிவரும் உற்சாகமான ஈடுபாட்டிற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** போதுமான அளவு பருவமழை பெய்யாத காரணத்தால் இப்பணித்தளத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் ஏற்பட்டிருக்கும் தண்ணீர் பற்றாக்குறை அகலுவதற்கு நல்ல மழையை தேவன் கட்டளையிட; கிருகுடியா கிராம புதிய விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; சுவிசேஷத்தின்மீது ஆர்வம் காட்டிவரும் பப்லு மால்தோ கிறிஸ்துவை விசுவாசிக்கத் துவங்க; தன்ஹட்டி கிராமத்தில் வைத்து நடைபெற்ற விசுவாசிகள் முகாமின் விளைவாக பதரியா, தம்னி, கெய்ராஜுடி மற்றும் தம்ரு கிராமங்களிலும் நல்ல ஆவிக்குரிய பலன்கள் பெருக ஜெபிப்போம்.

## சோட்டாகக்ரி:

### சுதாகரன் & ஃப்ளாரன்ஸ்

**துதிக்க:** தும்கா பிராந்தியத்தைச் சார்ந்த சுதேச ஊழியர்களுக்கும், சபை மூப்பர் களுக்கும் 2-ம் கட்ட பயிற்சி நிகழ்ச்சி நன்கு நடத்தப்பட்டுள்ளது. ரோஹ்தா கிராமத்தில் வீடு சந்திப்பு ஊழியம் சிறப்புடன் நடந்தேறியுள்ளது. படிடோலா மற்றும் பெல்திஹா பணித்தள சபைகளில் திடப்படுத்தல் ஆராதனை வகுப்புகள் கருத்துடன் நடத்தப்பட்டுள்ளன. சந்தாலி பாடல் புத்தகம் 4-வது பதிப்பு ஊழியப்பயன் பாட்டிற்காக திருநெல்வேலி பேராயர் மாமறைதிரு. A.R.G.S.T. பர்னபாஸ் அவர்களால் தேவ நாம மகிமைக்கென தில்பிட்டா கிராமத்தில் வைத்து நடைபெற்ற 3 நாள் மேளாவில் ஜெபத்துடன் வெளியிடப் பட்டது. கனாய் ஆலயம் தேவநாம மகிமைக் கென்று பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்களது தொழிலினிமித்தம் பிற மாநிலங்களுக்குப் புலம்பெயரும் நமது ஆண் விசுவாசிகள் விசுவாசத்தில் திடமாய் இருக்கவும், வீடுகளில் தனித்திருக்கும் அவர்களுடைய மனைவி, பிள்ளைகள் பத்திரமாகப் பாதுகாக்கப்படவும்; வருகிற நாட்களில் நடக்க இருக்கின்ற முதியோர் கல்வித்திட்ட நிகழ்ச்சிகளுக்காகவும், அத்திட்டத்தில் படிப்பறிவில்லாத விசுவாசி களுக்குக் கற்றுக்கொடுப்பதற்கான பயிற்சிப் பெற்ற நல்லாசிரியர்கள் கிடைக்கவும்; பினாய் மராண்டி மற்றும் சாந்தி ஹஸ்தக் கிற்கு குழந்தை செல்வங்கள் கிடைக்க ஜெபிப்போம்.




திரு. ரூபன் சாமுவேல் J., திருமதி. லிஸி வாவச்சன்
திருமதி. பிரிசில்லாள் ரமேஷ் வேல்ராஜ்
திருமதி. கீதாஞ்சலி நாயக்
திரு. ஜாண் டேவிட்சன் செல்வராஜ்

# மேற்கு வங்காளம்

## பாலுர்காட்: ஹரமோகன் & சூசம்மா

**துதிக்க:** சுவிசேஷம் 10 கிராமங்களைச் சென்றடைந்ததின் விளைவாக 450 பேர் சுவிசேஷத்தை முதல்முறையாகக் கேள்விப்பட்டுள்ளனர். ஒருவர் விசுவாசிகளின் மந்தையில் இணைந்துள்ளார். தன் பிள்ளைகளுடைய ஜெபத்தின் மூலம் பஸ்நய் கிராமத்தி லுள்ள ஓர் மூத்த வயது தாயார் கிறிஸ்துவின் மீது தான் கொண்டுள்ள விசுவாசத்தை வெளிப்படையாக அறிக்கை செய்துள்ளார். சபான், திலீப்பின் குடும்பம் மற்றும் சுகல் சோரேன் சுவிசேஷத்தின்மீது ஆர்வம் காட்டி வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தேசத்தின் எல்லைப்பகுதியில் நடைபெறும் ஊழியங்களுக்காகவும், ஊழியர்களின் பாதுகாப்புக்காகவும்; பஜன், ராபின், மனிலா, சுஜித், சுனிராம், பிஸுநாத், கூக் சோரேன், ஹஸ்தா, தியர்னா, ராபின் கிஸ்கு, ராபி மற்றும் வேறு பலருடைய குடும்ப அங்கத்தினர்களின் இரட்சிப்பிற்காக; லுமினி தொடர் தலைவலியிலிருந்தும், சீதா பெண்ணியப் பிரச்சினையிலிருந்தும், மயோ முடக்குவாதப் பிரச்சினையிலிருந்தும் சுகமடைய; ஹரிப்பூரில் நடைபெற்றுவரும் ஆலயக்கட்டுமானப்பணி சீக்கிரத்தில் முடிவடைந்து, பிரதிஷ்டை செய்யப்பட; விபத்தைச் சந்தித்துள்ள எலியாஸ் பூரண குணமடைய; முன்சிபூர் திருச்சபை விசுவாசிகள் கிறிஸ்தவ ஒழுங்கு நெறிகளைச் சரியாய் கடைபிடித்து வாழ; மங்கல் மராண்டியின் குடும்பம் ஆலய ஆராதனைக்குக் கிரமமாக வர ஜெபிப்போம்.

# அஸோம்

## மஜுலி:

## பாகிரதி பிசோயி & லால்மணி டிகல்

**துதிக்க:** தேவ கிருபையால் எதிர்ப்புகள் காணப்படும் 4 கிராமங்களில் பிரச்சினைகள் ஏதுமின்றி சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. மிசாமாரா கிராமத்தில் புதிதாக சிறுவர் நிகழ்ச்சியொன்று நடத்தப்பட்டுள்ளது. இப்பகுதியில் இரவுநேர ஜெபக்கூட்டங்கள், உபவாச ஜெபங்கள், புதிய வீடு சந்திப்புகள், ஆத்தும ஆதாய நிகழ்ச்சிகள் யாவும் கிரமமாக நடைபெற்று முடிந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வரும்நாட்களில் நடக்கவிருக்கும் பெண்கள் கூடுகை, விசுவாசிகள் கூடுகை, வெளிப்புற சந்திப்பு ஊழியம், இரவுநேர ஆவிக்குரிய கூடுகைகள் யாவும் நன்கு பலனளிப்பதாக அமைய; சுவிசேஷத்தைக் கேட்டிருக்கும் கிராம மக்கள் யாவரும் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்க; ஜம்கா டோல் பெண்ணியப்பிரச்சினையிலிருந்து பூரண குணமடைய ஜெபிப்போம்.

## ஜோனை:

## சுனில் பிரசாத் சிங் & ஜாய் பெல்லா

**துதிக்க:** லெந்துகால 40 நாட்கள் ஜெபம் 5 இடங்களில் சிறப்பாக நடந்து வருகின்றது. ஒருவர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளார். இரவுநேர ஆவிக்குரிய கூட்டங்களின் மூலம் 3 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. நமது ஊழியத்தில் ஒரு புதிய தொடர்பாளர் கிடைத்துள்ளதோடு, ஒரு புதிய ஜெபக்குழுவும் தொடங்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பட்லி, சில்லி, ரிக்பி, ஜெலாம் மற்றும் சிருங் பகுதிகளில் புதிய திருச்சபையொன்று தொடங்கப்பட; சிவநாத் குட்டும் மனநோயிலிருந்தும், லுதேஷ்வர் பட்டீர் பக்கவாதத்திலிருந்தும், பிஜய் சின்ட்டி காசநோயிலிருந்தும் முழுசுகமடைய; ஓய்புலி டோலி கிறிஸ்துவை இரட்சகராக ஏற்கவும், அவரது குடும்பப் பிரச்சினைகள் யாவும் தீரவும்; எதிர்ப்புகளினூடே நமது விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் கிறிஸ்துவுக்குள் ஸ்திரமாய் நிற்க ஜெபிப்போம்.




திரு. மெயின்ராஜ் I.
திருமதி. சுவர்ணலதா சஞ்சீப் ஆன்ட்ரப்

# குஜராத்

## பாவ்நகர்:

### அகிலேஷ் குமார் & கிரண்தேவி

**துதிக்க:** தேவ வார்த்தையான சுவிசேஷத்தை 80 புதியவர்கள் கேட்டுள்ளனர். 3 புதிய குடும்பங்கள் கிறிஸ்துவின் மந்தையில் வந்து இணைந்துள்ளனர். 21 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. மய்னாபேன் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். ஹதாநகரில் தொடங்கப்பட்டுள்ள இரவுநேர ஜெபக் கூட்டத்தில் 10 பேர் புதிதாகக் கலந்து கொள்ள ஆரம்பித்துள்ளனர். கோபதி கிராமத்தில் துவங்கப்பட்டுள்ள சிறுவர் கூடுகையில் 10 சிறுவர்கள் பங்குப் பெற்றுள்ளனர். இக்கிராமத்தில் 12 பேரைக் கொண்டு ஒரு ஞாயிறு ஆராதனை தொடங்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிகிச்சை எடுத்தும் பயனில்லாமல், திடீரென தனது பேசும்திறனை இழந்திருக்கும் 8 வயது சிறுமி சுகானி அற்புத சுகமடைய; ஞாயிறு ஆராதனை நடத்த எதிர்ப்பு தெரிவிக்கும் வீட்டு உரிமையாளர் மனந்திரும்பி, அதற்குச் சம்மதிக்க; கணேஷும், ரசிலாபேனும் திருச்சபை ஆராதனைக்குக் கிரமமாக வருகை தர; தலையில் ஏற்பட்டுள்ள ஒருவித கட்டிப் பிரச்சினையிலிருந்து அபிஷேக் குணமடைய; தனது வலது கண்ணில் ஏற்பட்ட காயத்தினிமித்தம் கண்பார்வையை இழந்திருக்கும் சிறுமி சிவானிக்கு மீண்டும் பார்வை கிடைக்க ஜெபிப்போம்.

## மோஸ்தா:

### பால்ராஜ் & கோயில்புஷ்பம்

**துதிக்க:** சுவிசேஷத்தை முதல்முறையாக 480 பேர் கேட்டுப் பயனடைந்துள்ளனர். 4 கிராமங்களில் புதிதாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. அனிதாபேனின் மகன் கீர்த்தனின் கையெலும்பு முறிவு தேவ கிருபையால் நன்கு சுகமாகியுள்ளது. நவகாம் ஆலய ஆராதனையில் பங்கேற்ற கஜேந்திரபாயின் குடும்பத்தினர் கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைத்துள்ளனர். ஏற்ற வேளையில் கல்லூரி மாணவனான சிவாஷிற்கு அவரது அந்தரங்கப்பகுதியில் ஏற்பட்ட பிரச்சினைக்கு நல்லமுறையில் அறுவைசிகிச்சை செய்யப்பட்டுள்ளது. ஜர்காம் கிராம மணிபேன் தனது சரீர வலியிலிருந்தும், வயிற்றுக்கோளாறிலிருந்தும் முழுசுகமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தோப்நபிபார் கிராமத்தில் ஆராதனைக்குழுவொன்று தொடங்கப்பட; சீஷ்குட்டா கிராம கோவிந்த்பாய் ஆலய ஆராதனையில் வந்து கலந்துகொள்ள; ஜிம்பாபானி கிராமத்தில் ஆசிரியராகப் பணிபுரியும் கிஷான்பாய் நமது ஊழியத்தைத் தடைசெய்யாமலிருக்கவும், மனந்திரும்பி கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவும்; குந்தி கிராம மனிஷ்பாய் மற்றும் தினேஷ்பாயின் குடும்பங்கள் கிறிஸ்துவை தங்களது இரட்சகராக ஏற்க; அரசாங்க பொதுத் தேர்வு எழுதிக்கொண்டிருக்கும் பிள்ளைகளுக்காக; இனிவரும் நாட்களில் நடக்கவிருக்கும் ஊழிய நிகழ்ச்சிகள் அதில் பங்குப்பெறுவோருக்கு மிகுந்த ஆசீர்வாதமுள்ளதாக அமைய ஜெபிப்போம்.




திருமதி. சாந்தா வினயராஜ்
திரு. ஜாஹர் சாய் பன்னா

### ஜாலோத்: குமார் பால் & அமுதா

**துதிக்க:** சுவிசேஷ வசனம் புதிதாக 168 பேருக்கு உரைக்கப்பட்டுள்ளது. 2 புதிய ஏற்பாடுகளும், 13 வேதாகமங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. பேச முடியாம லிருந்த ஆஷிஷ் ஜெபத்தின் மூலம் சிறிது பேசத் தொடங்கியுள்ளார். பல வருட ஜெபத் திற்குப் பதில் கிடைத்திருக்கும் வண்ணமாக சுசிலாபேன் மழலை பாக்கியம் பெற்றுள்ளார். தொண்டையில் ஏற்பட்டிருந்த அடைப்பினால் பேச முடியாமல் தவித்துவந்த ராகுல்பாய் தற்போது பேசுவதற்கான கிருபையைப் பெற்றிருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நிறுத்தி வைக்கப்பட்டுள்ள லக்கன்பூர் ஆலயக்கட்டுமானப்பணி மீண்டும் தொடங்கப்பட; மனநோயிலிருந்து சந்துபாய் அற்புத சுகமடைய; கால் வீக்கம் மற்றும் கால் எரிச்சலிலிருந்து நமது புதிய விசுவாசியான விக்ரமிற்கு பூரண சுகம் கிடைக்க; பயல்பேன், மனிஷாபேன், தக்ஷாபேன் ஆகியோருக்கு புத்திர பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.

### உமர்காம்:
### ஆசீர் மோசஸ் & அமிர்தா கோல்டா

**துதிக்க:** சுவிசேஷ வசனம் 280 பேருக்குப் புதிதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 18 புதிய ஏற்பாடுகளும், 5 வேதாகமங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. பொர்மால், போராவ், தலவாடா, சக்கல்வாடா மற்றும் பட்டேல்பாடா கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. வேதாகம வகுப்புகள் மற்றும் ஊழியப்பின்தொடர்பணிகள் கன்டோய், மந்தா மற்றும் சுகத்பாடா கிராமங்களில் சிறப்பாக நடத்தப்பட்டுள்ள தற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இரவுநேர ஜெபக்கூடுகைகளில் அநேகர் வந்து கலந்துகொள்ள; மரண மடைந்துள்ள கிஷான்பாயினிமித்தம் ஆறுதலற்று இருக்கும் அவருடைய மனைவி ஆஷாபேன் மற்றும் இருபிள்ளைகளுக்கு தேவ ஆறுதல் கிடைக்க; சரஸ்வதியின் கழுத்துப்பகுதி மற்றும் சஞ்ஜனாவின் வயிற்றுப்பகுதியில் இருக்கும் கட்டிகள் குணமாகி மறைய ஜெபிப்போம்.

## இயேசுவுக்கு சொந்தமான செல்வந்தர்!

*குஜராத், சூரத்தில் வாழும் சுனில்பாய் மிகப் பெரிய செல்வந்தர். அவர் குடும்பமாக நமது மிஷனரி தங்கியுள்ள வீட்டிற்கு அருகில் வசித்து வருகிறார். மிகவும் விக்கிரக வைராக்கியத்தில் வாழும் அவரது குடும்பத்தில் ஏதோ பிரச்சினை என்று அறிந்த நமது மிஷனரி அவரிடம் விசாரித்தபோது, அவர் எல்லாவற்றையும் பகிர்ந்து கொண்டு ஜெபிக்கும்படி தன் வீட்டிற்கு நமது மிஷனரியை அழைத்தார். சுனில்பாயின் குடும்பத்திற்கு 5 ஆண்டுகளாக யாரோ பில்லி சூனியம் செய்ததின் விளைவு, அவரது மனைவி 6 மாதங்களாக நடக்க முடியாமல் கஷ்டப்பட்டு வருகிறார். பிசாசின் கட்டுகளால் கட்டப்பட்டிருந்த அவர்களுக்காக நமது மிஷனரி ஜெபித்தபோது, பிசாசின் அனைத்து கட்டுகளிலிருந்தும் தேவன் அவர்களை விடுதலையாக்கினார். சுனில்பாயின் மனைவி பரிபூரண சுகம் பெற்று, குடும்பத்துடன் நடந்துச்சென்று ஆலய ஆராதனையில் பங்குப்பெற்று வருவதற்காக தேவனைத் துதிப்போம்.*




திரு. அருள்மணி R., திரு. தியாகராஜன் P.
திரு. அரவிந்த் குமார் M.

# தாத்ரா & நகர் ஹவேலி

## ராண்தா விடுதி:

**மர்குஸ் மால்தோ & சாரா;**
**சந்திரிகாபேன், மனிஷா லக்ரா**

**துதிக்க:** தின தியானம் மற்றும் ஞாயிறுப் பள்ளி வேதாகம வகுப்புகள் நமது விடுதிப்பிள்ளைகளுக்கு முறையே நடத்தப்பட்டு வருகின்றன. புதன்கிழமை தோறும் நடைபெறும் வாலிபர்களுக்கான உபவாச ஜெபம் அவர்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமாக இருக்கின்றது. அம்மை நோய்த்தொற்றிலிருந்து தேவ தயவால் 40 பிள்ளைகள் நன்கு சுகமாகியுள்ளனர். சொறிசிரங்கு பிரச்சினையினால் பாதிக்கப் பட்டிருந்த ஒருசில பிள்ளைகளும் தற்போது சுகமடைந்துள்ளனர். விடுதியில் நடைபெறும் ஊழியப்பணிகளினிமித்தம் விடுதிப்பிள்ளைகள் ஆவிக்குரிய வாழ்வில் மென்மேலும் வளர்ந்து வருகின்றனர். நமது மிஷனரி சகோதரி. மேரி, ராண்தா விடுதியிலுள்ள பெண்பிள்ளைகள் மத்தியில் செய்யும் வல்லமையான ஊழியப்பணிகளுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இக்கோடைக்கால மாதங்களில் விடுதிகளில் தண்ணீர் தட்டுப்பாடு வராமல் இருக்க; 10-ம் & 12-ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதிக்கொண்டிருக்கும் பிள்ளைகளுக்காக; கடினமான பாடப்பகுதிகளை இலகுவாகப் புரிந்துபடிக்க தேவையான கிருபைகளை தேவகரத்திலிருந்து அப்பிள்ளைகள் பெற்றிட; மனநோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் 10-ம் வகுப்புப் படிக்கும் ரோனக் அற்புத சுகம் பெற; விடுதியில் மின்சாரம் மற்றும் தீ காப்பு வேலைகளுக்கான அனுமதிச்சான்றிதழ்கள் கிடைக்கவும், அதன்மூலம் இன்னொரு கட்டிடம் கட்டுவதற்கான அரசாங்க அனுமதி யையும் பெற ஜெபிப்போம்.

## *அளவில்லாத தேவ கிருபை!*

*மகாராஷ்டிரா, காண்ட்பாரா பணித்தளம். மாவ்சிபாலி கிராம சம்ரியா 20 வருடங் களுக்கு முன்பு இயேசுவை ஏற்றுக் கொண்டார். பின்பு சில குடும்பப்பிரச்சினை களினிமித்தம் விசுவாசத்தை விட்டுப் பின்வாங்கி உலகப்பிரகாரமான வாழ்வு வாழ ஆரம்பித்தார். அவர் வயிற்றுக்கட்டிப் பிரச்சினையினால் பாதிக்கப்பட்டு, சுகத்திற் காக பற்பல மருத்துவமனைகள் மற்றும் மாந்திரீக செயல்களைத் தேடிச் சென்றார்; இறுதியாக, கிறிஸ்துவண்டை வரத் தீர்மா னித்து ரூ.50,000/-ஐ திரட்டிக்கொண்டு, பிரசித்திப்பெற்ற கிறிஸ்தவ ஊழியர்களை நாடிச்சென்றும் பயனேதுமில்லை. கடந்த வருடம் டிசம்பர் மாதத்தில் நமது ஊழியர்களும் சுதேச ஊழியரும் பின் மாற்றமடைந்திருந்த நமது விசுவாசிகளின் வீடுகளுக்குச் சென்று கிறிஸ்துமஸ் வாழ்த்துகள் கூறியபோது, அங்கு சம்ரியாவைச் சந்தித்தனர். பின்பு அவர் கேட்டுக்கொண்டபடி அவருக்காக அவர்கள் ஜெபித்தபோது, அவர் தனது பாவங்களை அறிக்கையிட்டார். அந்தநாள் இரவே அளவில்லாத தேவ கிருபையினால் அவருக்கு பூரண சுகம் கிடைத்தது. காலையில் வயிற்றுக்கட்டி காணாமல் போயிருந்ததை நன்குணர்ந்தார். அல்லேலூயா! தற்போது அவரது குடும்பம் ஆனந்தமாய் ஆலயத்திற்கு வருகின்றனர். எல்லா மகிமையும் சர்வ வல்லவருக்கே!*




திரு. டேவிட் நிக்கல்சன்
திருமதி. ஜெப ரோஸ் விஜயன்
திருமதி. பிது காந்தி லிமா ஸ்ரீதர் மொபிடெனி
திருமதி. ஹட்நெய்கிம் லெட்கோலுன் பய்ட்டே

## சில்வாசா: டேவிட்சன் ராஜாசிங் & கண்மணி பரிமளம்

**துதிக்க:** புதிதாக 358 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 2 புதியவர்கள் கிறிஸ்துவின் ஆளுகைக்குள் வந்துள்ளனர். போண்தா பகுதியிலிருந்து 150 வாலிபர்களும், அத்தால் பகுதியிலிருந்து 90 வாலிபர்களும் அவர்களுக்கென நடத்தப்பட்ட வாலிபர் கூடுகைகளில் கலந்து கொண்டு ஆவிக்குரிய பயனடைந்துள்ளனர். தங்களது ஜெபங்களுக்குப் பதில் கிடைத்ததை முன்னிட்டு, ஜாந்திபாயின் குடும்பம் நமது அத்தோலிபரி பகுதி ஆராதனையில் வந்து கலந்துகொள்ள ஆரம்பித்துள்ளனர். சிக்லி ஆலயம் தேவநாம மகிமைக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. ரூதானா பணித்தள சங்கீதாபேன் ஜெபத்தின் மூலம் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். திருமணமாகி 5 வருடங்களுக்குப்பின் பூனம்பேன் மற்றும் வர்ஷாபேன் குழந்தை பாக்கியங்கள் பெற்றுள்ளனர். மூன்று மாதங்களாக மனநிலை பாதிப்பினால் கஷ்டப்பட்டு வந்த சரிதாபேன் அப்பாதிப்பிலிருந்து முழு விடுதலை பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பார்வதிபேன் இருளின் ஆதிக்கத்திலிருந்து விடுபட; தனது மனைவியின் மரணத்திற்குப்பின் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகியுள்ள சகன்பாய் அப்பழக்கத்திலிருந்து விடுபட; 24 மணிநேர ஜெபமாக அங்குள்ள 44 சபைகளிலும் 1000 மணிநேர ஜெபம் தவறாமல் கடைபிடிக்கப்பட்டு வர; தலாவாலி கிராமத்தில் சுவிசேஷத்திற்கான வாசல் உருவாக; 8 வருடங்களாக நடக்கமுடியாமலிருக்கும் கஜ்காவ் கிராம வசந்த்பாய், வயிற்றுக்கட்டியினால் அவதிப்படும் சங்கர்பாய் ஆகிய இருவருக்கும் அற்புத சுகம் கிடைக்கவும், மணிபேன் பக்கவாதத்திலிருந்தும், கங்காபேன் கல்லீரல் வீக்கத்திலிருந்தும் பூரண குணமடையவும் ஜெபிப்போம்.

## கான்வேல்: அருள் ஆசீர் & சுகுணா

**துதிக்க:** கடந்த 4 வருடங்களாக தீராத வாந்தி பிரச்சினையினால் அவதிப்பட்டுவந்த 12 வயது சிறுவன் யாஷ் ஜெபத்தின்மூலம் நல்ல சுகத்தைப் பெற்றுள்ளான். கண் கோளாறிலிருந்து தஷ்னா குணமடைந்துள்ளார். ஜெப உதவியுடன் கிர்ரிபேன் மறதிநோயிலிருந்து சற்று தேறி வருகிறார். ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்ட மஞ்சுளா மற்றும் சைமன் குடும்பத்தினர் ஜெபத்துடன் கூடிய சமாதான ஆலோசனைக்குப்பின் அனைவரும் ஒப்புரவாகியுள்ளனர். ராசிபேன் சிறுநீரகக் கல் பிரச்சினையிலிருந்து சுகமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தன் கைகளில் பக்கவாதப் பாதிப்பைக் கொண்டிருக்கும் அனில் அற்புத சுகம் பெற; 8 வயது சிறுமியான பிரஜோஷா சிறுநீரகக்கல் மற்றும் வயிற்றுக் கட்டியிலிருந்து பூரண சுகமடைய; நடக்க முடியாதபடி நரம்புப்பிரச்சினையினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஆஷிஷ் நன்கு நடக்க ஆரம்பிக்க; 8 வருடங்களாக குழந்தை இல்லாமல் இருக்கும் சாஜின்ஜானா மழலை பாக்கியம் பெற; புற்றுநோயினால் சமீபத்தில் இறந்துப்போன விஜயின் மனைவி மற்றும் பிள்ளைகள் தேவ ஆறுதல் பெறவும், அவர்களது வாழ்வாதார தேவைகள் யாவும் சந்திக்கப்படவும் ஜெபிப்போம்.



திரு. ஜெபர்சன் B.

# மகாராஷ்டிரா

## மந்தனா:

### கொடிசெலா பிரவீன் & மௌனிகா

**துதிக்க:** புதிதாக 2 பேர் கிறிஸ்துவின் மந்தைக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர். 2 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. 130 பேர் சுவிசேஷ வசனத்தை முதல்முறையாகக் கேட்டுள்ளனர். 30 புதிய ஏற்பாடுகளும், 4 வேதாகமங்களும் விநியோகிக்கப் பட்டுள்ளன. 30 பேர் இயேசுத்திரைப் படத்தைப் பார்த்து பயனடைந்துள்ளனர். பஜன் நிகழ்ச்சி மூலம் 8 பேர் சுவிசேஷ நற்செய்தியைக் கேட்டுள்ளனர். வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகள் 2 கிராமங்களில் நடத்தப்பட்டுள்ளன. பட்டி மற்றும் பொக்ரதா பகுதிகளில் 2 பணித்தளங்கள் திறப்பதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நதிபாய் பக்கவாதத்தி லிருந்து சுகம் பெற; அல்கேஷ் கண் பிரச்சினையிலிருந்து குணமடைய; மூன்று வயது சிறுபிள்ளையான பியூ நன்கு நடக்க ஆரம்பிக்க ஜெபிப்போம்.

## மொல்கி:

### பரணிதரன் & செல்வராணி

**துதிக்க:** சுவிசேஷம் 900 பேருக்கு முதல் முறையாகச் சென்றடைந்துள்ளது. ஒருவர் கிறிஸ்துவின் மந்தையில் அடைக்கலம் புகுந்துள்ளார். ஜமனா, மட்டியாபரி மற்றும் அத்ராய் கிராமங்களில் இயேசுத்திரைப்பட ஊழியம் சிறப்பாக நடந்துமுடிந்துள்ளது. 9 இடங்களில் பெண்கள் கூடுகைகளும், 13 இடங்களில் பெண்கள் ஜெபக்குழுக்களும் தவறாமல் நடைபெற்று வருகின்றன. டிகல் ஆலயம் தேவநாம மகிமைக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. துர்காபாய் ஜீப் மூலம் செய்த பயணத்தின்போது ஏற்பட்ட விபத்திலிருந்து காப்பாற்றப் பட்டுள்ளார். தபசுக்கால 40 நாட்களில் 12 மணிநேர சங்கிலித்தொடர் ஜெபத் திற்கு பெண்கள் முன்வந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கையிட ஆயத்தமாய் இருப்போர் அதை தைரியமாக செய்து நிறைவேற்ற; தேவ்மொஹ்ராவை வணங்கும் சிகா தாதா மற்றும் சொரிலா மனந்திரும்பி, கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள; நதியா பாபா பக்கவாதத்தி லிருந்தும், நந்தாபாய் கண்பார்வையற்ற நிலையிலிருந்தும், இஷா தொழுநோய்ப் பிரச்சினையிலிருந்தும் சுகமடைய ஜெபிப்போம்.

## *மாயமானது!*

*தெலங்கானா, அசிஃபாபாத்திலுள்ள ரேகா பல்லே கடந்த 6 மாதங்களாக காசநோயினால் பாதிக்கப்பட்டுப் படுக்கை யிலிருந்தார். பல்வேறு மருத்துவமனை களுக்கு அவரை எடுத்துச்சென்றும் பிரயோஜனமில்லாமல் அவர்கள் அவரைத் திருப்பியனுப்பிவிட்டனர். எனவே, நமது மிஷனரிகளும் சபையாரும் கூடி அவருக்காக உபவாசித்து ஜெபித்தனர். ஜெபத்தைக் கேட்ட தேவன் சுகத்தை அருளியதால், அந்நோய் மாயமாகி, தற்போது அவர் தனது வேலையைத் தானாகவே செய்யுமளவிற்கு சுகமடைந் துள்ளார். அல்லேலூயா!*




திரு. ஜாண்சன் தமிழ்செல்வன்
திருமதி. சூசன் தாமஸ் மேத்யூ
திரு. செள புன்யா

### முக்காடா:
### M. சங்கர் & ஆனந்தி

**துதிக்க:** புதிதாக 75 பேருக்கு சுவிசேஷ வசனம் உரைக்கப்பட்டுள்ளது. 10 புதிய ஏற்பாடுகளும், 6 வேதாகமங்களும் பகிரப்பட்டுள்ளன. மொராண்டா, ஜோப், பொக்ரதி, கெல்கார், பல்சுந்தா ஆகிய கிராமங்களில் ஊழியப்பின்தொடர் பணிகள் செய்யப்பட்டுள்ளன. 5 புதிய குடும்பங்கள் நமது ஆலய ஆராதனையில் பங்கேற்கத் தொடங்கியுள்ளன. மஞ்சு மற்றும் செவந்தி பிசாசு பிடிகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். 6 மாதங்களாகப் படுத்தப்படுக்கையாக இருந்த மோனிகா 2 நாள் தொடர் ஜெபத்தின் மூலம் அற்புத சுகமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷம் அறிவிக்கப் பட்டிருக்கும் கொடலா, நீல்மதி, பெரஸ்தா, ஆஷா, திரிம்பாக் ஆகிய கிராமங்களில் ஆராதனை மையங்கள் துவங்கப்பட்டு, அநேகர் கிறிஸ்துவின் விசுவாசிகளாக மாற; சுவிசேஷத்தின்மீது வாஞ்சை காட்டும் டோலார், அடோசி, புட்டோசி ஆகிய கிராமத்தினர் பகிரங்கமாக கிறிஸ்துவின் நாமத்தில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட; கடுமையான எதிர்ப்புகளின் மத்தியிலும் விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் உறுதியாயிருக்க; சிறுவர் பராமரிப்பு மையக்குழந்தைகள் எல்லாவித தாலந்து திறமைகளில் தேர்ச்சியடையவும், மூத்த வயது பிள்ளைகள் தங்களது வாழ்வை எதிர்காலங்களில் கிறிஸ்துவுக் கென வாழ அர்ப்பணிக்கவும்; 10-ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் விக்கி, விஷ்வாஸ், தீபக் மற்றும் ரேஷ்மா அதற்கான தகுந்த ஞானம் பெற்று, நல்லமுறையில் தேர்ச்சி யடைய ஜெபிப்போம்.

### வத்ஃபாலி:
### பிதுயூத் குமார் சிங், ஏபேல் ஹெம்ரோம்

**துதிக்க:** கிறிஸ்துவின் மந்தையில் புதிதாக 4 பேர் தஞ்சமடைந்துள்ளனர். 160 பேர் முதல்முறையாக சுவிசேஷ வார்த்தையைக் கேட்டுள்ளனர். 3 கிராமங் களில் பெரிதளவிலான வெளிப்புற சந்திப்பு ஊழியம் நடைபெற்றுள்ளது. 11 வீடுகள் புதிதாகச் சந்திக்கப்பட்டுள்ளன. சரியான சாலை மற்றும் மின்சார வசதி களற்ற நர்மதா நதியோரம் அமைந் துள்ள மணிபினி கிராமத்திலுள்ள மக்கள் சுவிசேஷத்தின்மீது ஆர்வம் காட்டி வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசத்தில் பின்மாற்ற மடைந்துள்ள கிஷான் மீண்டும் கிறிஸ்து வண்டை வர; 3 வருடங்களுக்குள் தற்கொலையினிமித்தம் 23 பேரை இழக்கக்கொடுத்திருக்கும் ஜாந்தி கிராமம் அங்கிருக்கும் நமது புதிய தொடர்பாளரான மகேந்திராவின் மூலம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட; சுமித்ரா மனநிலை பாதிப்பி லிருந்தும், சம்பா தீய ஆவியின் பிடியி லிருந்தும் சுகவிடுதலையடைய; பிற மாநிலங்களுக்குப் புலம்பெயர்ந்து சென்றிருப்போர் அங்கே கிறிஸ்துவுக்குள் நன்கு வளரவும், வாழ்வின் மூலம் நற்சாட்சி பகரவும் ஜெபிப்போம்.




திரு. பெஞ்சமின் B., திரு. பிரதீப் முஷாஹரி
திருமதி. ஜெபஜோதி பால்ராஜ், திருமதி. ஏமி பாக்யா
திருமதி. மதுகலா ரமேஷ்வர் நிர்மல்

## அக்கல்குவா:

### ஜக்மோகன் சிங் & ஸ்வாதி

**துதிக்க:** புதிதாக 6 கிராமங்களில் இயேசுவின் நற்செய்தி 39 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பணித்தள ஆலயக்கமிட்டி கூடுகை, விசுவாசிகளுக்கான பயிற்சிக்கூடுகை மற்றும் 3 பெண்கள் கூடுகைகள் சிறப்பாக நடந்து முடிந்துள்ளன. இப்பணித்தளத்திலுள்ள நமது மிஷனரி சகோதரி திருமதி. ஸ்வாதி 4 விசுவாசிகளின் பிள்ளைகளோடு முறையாக நடத்தப்பட்ட விடுமுறை வேதாகமப்பள்ளி பயிற்சி நிகழ்ச்சியில் கலந்துகொண்டார். பட்டிபாடா திருச்சபை அதன் விசுவாசிகளுடன் மீண்டும் நமது இயக்கத்தின் கண்காணிப்புக்குக்கீழ் வந்துள்ளது. ரோஹித்தா மற்றும் சுனில் தன்னார்வமாக நமது ஊழியத்தில் உதவிசெய்து வருகின்றனர். ஹன்ஜா மற்றும் ஜெர்மியா ஆஸ்துமா வியாதியிலிருந்து பெற்றுள்ள சுகத்திற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நர்சி, அமர், ராமா மற்றும் ஜென்தி பக்கவாதத்திலிருந்தும், கரண் மற்றும் டிட்டு மூலப்பிரச்சினையிலிருந்தும், குலாப் சிங் ஒரு வருடகாலமாக இருக்கும் வயிற்றுவலியிலிருந்தும் சுகமடைய; தங்களது விசுவாசத்தை வெளிப்படையாக அறிக்கையிட ஆயத்தமாயிருக்கும் நமது விசுவாசிகளுக்கு எவ்வித பயமும் தடையும் வராமலிருக்க; தனது வீட்டார் மூலம் எதிர்ப்பைச் சந்திக்கும் ககூலி தனது விசுவாசத்தில் உறுதியாக நிற்க; ஞாயிறுப்பள்ளிகளில் சிறுபிள்ளைகளுக்கு வேதாகமத்தைக் குறித்து கற்றுக்கொடுக்க நல்ல ஆசிரியர்களை தேவன் கட்டளையிட; வரும் மாதங்களில் நடத்தத் திட்டமிட்டிருக்கும் பெரிதளவு வெளிப்புற சந்திப்பு கூடுகை மிகுந்த ஆவிக்குரிய பலனைத் தர ஜெபிப்போம்.

## போரடி: ஓம் பிரகாஷ் & சப்னா

**துதிக்க:** புதிதாக 7 கிராமங்களில் கிறிஸ்துவின் நற்செய்தி அறிவிக்கப்பட்டு, அதன்மூலம் 1161 பேர் நற்பயனடைந்துள்ளனர். ஹிகாவானி, துர்பிடியா, துஹானி, கவதா, சாஜாகர்பாடா, நிமிஜிர் மற்றும் ஜாலியாம்பர் கிராமங்களில் நடைபெற்ற வெளிப்புற சந்திப்பு ஊழியத்தில் 68 பேர் கலந்துகொண்டு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். 3 கிராமங்களில் நடைபெற்ற பஜன் நிகழ்ச்சிகளில் 258 பேர் பங்கேற்று, தேவ வார்த்தையைக் கேட்டுள்ளனர். தபசியா மற்றும் கொடிதா கிராமங்களில் நடந்து முடிந்துள்ள விசுவாசிகள் கூடுகையில் 95 பேர் கலந்துகொண்டு தேவாசீர்வாதம் பெற்றுள்ளனர். 4 கிராமங்களில் திரையிடப்பட்ட இயேசுத்திரைப்படத்தை 250 பேர் கண்டு, இயேசுவைக் குறித்து அறிந்துள்ளனர். 5 வருட ஜெபக்காத்திருப்பிற்குப்பின் ஆஷா தனது 2-வது குழந்தையை நலமாய் பெற்றெடுத்துள்ளார். புடக்கி விகிர், நவகாவ் மற்றும் போரடி கிராமங்களில் நடத்தப்பட்ட சிறுவர் முகாமின் மூலம் 98 சிறுவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 2 வருடங்களாக இருக்கும் மூலப்பிரச்சினையிலிருந்து ரவான், தொழுநோயிலிருந்து ராதாசிங், கர்ப்பப்பை கட்டியிலிருந்து பதி, 4 வருட பெண்ணியப் பிரச்சினையிலிருந்து ஆர்த்தி ஆகியோர் முழுசுகம் பெற; கடந்த நாட்களில் கருச்சிதைவினால் கஷ்டப்பட்டுள்ள சோனியாவிற்கு நல்லதொரு குழந்தை பாக்கியம் கிடைக்க; சப்னா மனநிலை பாதிப்பிலிருந்தும், ராணு பக்கவாதத்திலிருந்தும் சுகமடைய; ஜனது தீய ஆவியின் பிடியிலிருந்து விடுபட; தெம்பா கிராமத்தலைவர் புடக்கி விகிர் ஆலயக்கட்டிடத்திற்கு முறையான அனுமதியளிக்க; கொடிதா ஆலயச்சுற்றுச்சுவர் கட்டும்பணி விரைவில் முடிவடைய ஜெபிப்போம்.




திருமதி. கனகநேசம் செல்லத்துரை
திரு. பொன் அகஸ்டின் E.
திரு. சிவகுமார் C., திருமதி. காயத்ரி C.

### சுர்கானா:

### விஜய்பாபு & தேவ கிருபை

**துதிக்க:** சுவிசேஷத்தினால் 4 கிராமங்கள் சந்திக்கப்பட்டு, அதன்மூலம் 500 புதியவர்கள் இயேசுவைக் குறித்து கேள்விப் பட்டுள்ளனர். 40 கிராமங்களில் ஊழியப்பின்தொடர்பணி சிறப்பாக நடந்தேறியுள்ளது. விசுவாசியொருவரின் மூலம் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டு, அவருடைய ஜெபத்தினால் காளிபேன் தனது கால் காயம் ஆறி நன்கு சுகமடைந்துள்ளதோடு, அந்த விசுவாசியின் வீட்டில் நடைபெறும் இரவு ஜெபக்கூட்டத்திலும் பங்கேற்கிறார். வீட்டிற்குள் கட்டப்பட்டிருந்த தனது ஆட்டின்மீது புலி பாய்ந்தபோது, அப்பேராபத்திலிருந்து பாஸ்கர் மயிரிழையில் உயிர் தப்பிப்பிழைத்துள்ளார். இரத்தப்போக்குப் பிரச்சினையிலிருந்து வனிதா, மனநிலை பாதிப்பிலிருந்து வாத்தல் மற்றும் குல்ஷன், பக்கவாதப் பிரச்சினையிலிருந்து பல்லு, சிறுநீர் நோய்த்தொற்றிலிருந்து பாஜி ஆகியோர் ஜெபத்தின்மூலம் சுகமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குந்துனை கிராம விசுவாசிகள் யாவரும் தங்களது விசுவாசப் பின்மாற்றத்திலிருந்து மீண்டுவர; ஜமுனாபாடா, புலுக்பாடா மற்றும் ஹாத்கட் கிராமங்களில் நடைபெற்ற ஊழியத்தின் பலனாக ஒரேயொருவர் மாத்திரம் விசுவாசியாக மாறியுள்ள நிலையில், திரளான ஆத்துமாக்கள் அப்பகுதிகளிலிருந்து விசுவாசிகளாக மாற; பிற கிராமத்தினர்களின் அச்சுறுத்தல்களை மீறி, நமது ஆராதனையில் வந்து கலந்துகொள்ளும் அஜ்மர் கிராம புதிய குடும்பங்களுக்காக; கிறிஸ்துவை ஏற்கவும், அவரது வார்த்தையைக் கேட்கவும் மறுக்கின்ற கவின்பாடா கிராம மக்களுக்காக; 5 வருடமாகப் புத்திர பாக்கியமற்று இருக்கும் சுரேஷ் & மாதாபேனுக்காக; புற்றுநோய்க்கு சிகிச்சை எடுத்துக்கொண்டிருக்கும் உமேஷ்பாயிற்காக; பல்சோன் மற்றும் அபோனா பகுதிகளில் சுவிசேஷ வாசல்கள் உருவாக; 3 மாத வேலைகளுக்காக இடம்பெயர்ந்து பிற மாநிலங்களுக்குச் செல்லும் நமது விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் நிலைத்து நிற்க; கல்வான் மற்றும் திண்டோரி பகுதிகளில் ஊழியம் மேம்பட; பொரிகாவட்டா கிராம ஆலயக் கட்டுமானப்பணி சிறந்த முறையில் நடைபெற்று முடிய ஜெபிப்போம்.

## *விசுவாச ஜெப விளைவு!*

*குஜராத், ஜாலோத் பணித்தளத்தைச் சேர்ந்த ஜம்குபேன் மற்றும் அவரது கணவர் மதன்பாய் ஆகிய இருவரும் தனது கிராமத்திலுள்ள கிறிஸ்தவரல்லாத சந்துபாய் என்பவரை அழைத்துக்கொண்டு புலம்பெயர்ந்து வந்து, பாரு என்கிற கிராமத்தில் தங்கியிருந்து கட்டிடப்பணி செய்து வந்தனர். அவ்விடத்தில் சந்துபாயை பாம்பு தீண்டவே, சுவிசேஷத்தை அவருக்குக் கூறி இருவரும் ஊக்கமாய் ஜெபித்தனர். பணியாளர்கள் அனைவருக்கும் முன்பாகவே தேவன் சந்துபாய்க்கு பூரண சுகத்தைக் கட்டளையிட்டார். அல்லேலூயா!*




திரு. ஆசீர் மோசஸ் தியாகராஜ் S.
திருமதி. ஜோதிமணி மனோஜ்
திருமதி. இடிகினலா மௌனிகா கொடிசெலா

## தடுகோன்:

### ரமேஷ் பாபு & ஹீமாபிந்து

**துதிக்க:** சுவிசேஷத்தை 769 பேர் முதல்முறையாகக் கேட்டுள்ளனர். அதில் 15 பேர் விசுவாசிகளாகி, கிறிஸ்தவ மந்தையில் இணைந்துள்ளனர். 10 வேதாகமங்கள் பகிரப்பட்டுள்ளன. விட்லிபாயின் விசுவாசத்திற்கு எதிர்ப்புக் காட்டிவந்த அவருடைய கணவர் தன்னுடைய மனைவியின் ஜெபத்தினால் தனது பல் வலி சுகமானதினால், தானும் கிறிஸ்துவின்மீது விசுவாசம் வைக்கத் தொடங்கியுள்ளார். திருச்சபையினரின் ஜெபத்தினால் ரூமாபாயும், கரம்சிங்கும் தீய ஆவிகளின் கட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இப்பணித்தள மக்கள் இறந்தவர்களின் ஆவிகளைக் குறித்து பயப்படும் பயத்திலிருந்து மீண்டு வர; குடி, புகையிலை, விபச்சாரம் போன்ற பாவங்களுக்கு அடிமைப்பட்டிருப்போர் அப்பாவக்கட்டுகளிலிருந்து விடுதலை பெற; கிறிஸ்துவின்மீது நம்பிக்கை வைக்க ஆரம்பித்திருக்கும் தமனிபாய் ஒருவிதமான சரீர எரிச்சலிலிருந்தும், தனது கையை அசைக்க முடியாமலிருக்கும் பிரச்சினைகளிலிருந்தும் சுகம்பெற; தனது அந்தரங்கப்பகுதியில் கட்டியுடன் போராடிக்கொண்டிருக்கும் ஆர்த்தி சரீரத்தில் அற்புத சுகத்தைப் பெற்றிட; ஹசோர்குர்தி மற்றும் கத்கியா பணித்தளங்களில் நடைபெற்றுவரும் ஆலயக்கட்டுமானப்பணிகள் எவ்விதத் தடையுமின்றி நடந்து முடியவும், விரைவில் அவ்வாலயங்கள் பிரதிஷ்டை செய்யப்படவும்; சுவிசேஷத்தை எதிர்க்கும் தனா பட்டேல் கிறிஸ்துவின் அன்பால் தொடப்பட ஜெபிப்போம்.

## கர்நாடகா

### கானாப்பூர்: வினயராஜ் & சாந்தா

**துதிக்க:** கிரமமாக நடத்தப்பட்டுவரும் இரவுநேர ஜெபக்கூட்டங்கள் மற்றும் வீட்டு ஜெபக்கூட்டங்கள் மூலம் நமது விசுவாசிகள் அதிகளவு ஆவிக்குரிய ஊக்கம் பெறுகின்றனர். உள்ளூர் சபை சமிதி கூட்டமொன்றும் சிறப்பாக நடத்த தேவன் பாராட்டியுள்ள தயவிற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கானாப்பூர் திருச்சபை தன்னிச்சையாக நன்கு வளர; பக்கவாத கோளாறினால் அவதிப்படும் நமது விசுவாசியின் மகள்களான கீர்த்தி, கிருத்திகா பூரண சுகம்பெற; ஒருவித நோய்த்தொற்றினிமித்தம் சரீரம் முழுவதும் புண்களால் வாதிக்கப்பட்டுள்ள பசவராஜின் தகப்பனார் விரைவில் முழுசுகமடைய; நந்தகோடா திருச்சபையின் மூப்பர்கள் தங்களது திருச்சபையினரை ஒழுங்கும் கிரமமுமாக தேவ வார்த்தையின்படி வழிநடத்த; குடிப்பழக்கத்திலிருந்து சாந்தன் விடுபட்டு, தனது குடும்பத்தாருடன் சமாதானமாய் வாழ ஜெபிப்போம்.




### கஜேந்திரகடா:

**மஞ்ஜ்யா நாயக் & ரத்னா**

**துதிக்க:** சுவிசேஷத்தை 270 பேர் முதல்முறையாகக் கேட்டுள்ளனர். 3 பேர் இயேசுவின் மந்தையில் புதிதாக வந்து இணைந்துள்ளனர். 25 புதிய ஏற்பாடுகளும், 5 வேதாகமங்களும் பகிரப்பட்டுள்ளன. குஸ்தகி பகுதியில் புதிய தொரு திருச்சபை உருவாகியுள்ளது. 35 இடங்களில் ஊழியப்பின்தொடர்பணி நடைபெற்றுள்ளது. 6 இடங்களில் ஜெபக்குழுக்கள் முறையாக நடத்தப் பட்டுள்ளன. மகனேஷிற்கு அரசாங்க உத்யோகமும், பசம்மாவிற்கு ஆசிரியப் பணியும் கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குஸ்தகி ஆலயக்கட்டுமானப் பணி விரைவில் நிறைவுபெற; குடிக்கு அடிமையாகியுள்ள ரமேஷ் அதி லிருந்து விடுவிக்கப்பட; மல்லப்பா வின் நிலப்பிரச்சினைக்கு சுமூகமான தீர்வு கிடைக்க; வரும்நாட்களில் நடக்கவிருக்கும் ஊழியநிகழ்ச்சிகள் யாவும் அபரிமிதமான ஆசீர்வாதங் களைக் கொண்டுவர ஜெபிப்போம்.

### முன்ட்கோட் & ஷிக்காவ்:

**சுனில் குமார் & சங்கீதா**

**துதிக்க:** சுவிசேஷத்தின் மூலம் புதிதாக 100 பேர் சந்திக்கப்பட்டுள்ளனர். ஒருவர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளார். 12 புதிய ஏற்பாடு களும், 7 வேதாகமங்களும் விநியோகிக் கப்பட்டுள்ளன. 1000 மணிநேர ஜெபவேளைகள் தினந்தோறும் காலை 5 மணி முதல் 6 மணி வரை என்றும், வெள்ளிக்கிழமைதோறும் மாலை 6 மணி முதல் 8 மணி வரை என்றும் கிரமமாக நடைபெற்று வருகின்றன. நமது ஞாயிறு ஆராதனையில் 2 புதிய குடும்பங்கள் பங்கேற்கின்றனர். கமலக் காவின் கணவர் ஜெபத்தின் மூலம் அவர் பணிபுரியும் காவல் நிலையத்தி லேயே சப்-இன்ஸ்பெக்டராக உயர்பதவி அடைந்துள்ளார். அஸ்வினி மற்றும் சாவித்திரி தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கையிட வாஞ்சை யுடன் காத்திருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** எதிர்ப்பு சமயங்களில் பலவீடா கிராம விசுவாசிகள் தங்களுடைய விசுவாசத்தில் ஸ்திரமாய் நிற்க; நமது உள்ளூர் சுதேச ஊழியர் சந்தோஷ் மீதிருக்கும் நீதிமன்ற வழக்கு திரும்பப் பெறப்படவும், அவருக்கு ஜாமீன் வாங்க ஒத்தாசையாக இருக்கும் நாராயணா விற்கு குழந்தை பாக்கியம் கிடைக் கவும்; எதிர்ப்பினிமித்தம் நிறுத்திவைக்கப் பட்டிருக்கும் ஞாயிறு ஆராதனை மீண்டும் தொடங்கப்பட; சுகப்பிரசவத்திற்குப்பின் ஏற்பட்டுள்ள கிருமித்தொற்றிலிருந்து சாந்தாவிற்கு பூரண சுகம் கிடைக்க; நமது ஞாயிறு ஆராதனைக்கு வரும் புதியவர்கள் இரட்சிப்பின் அனுபவம் பெற்று, தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் தைரியமாக அறிக்கையிட ஜெபிப்போம்.




திருமதி. ஷீபா G. சந்திரா ஸ்ரீனிவாசன்
திருமதி. செல்வ மெரினா மனாசே டேனியல்
திருமதி. லாம்நெய்டிங் தௌதாங்

# ஆந்திரப் பிரதேசம்

## தாமலச்செருவு:

### ஜாண் டேவிட்ராஜ் & ஞானசேகரி

**துதிக்க:** புதிதாக சுவிசேஷம் 3 கிராமங்களைச் சென்றடைந்துள்ளது. சபை மூப்பர்களுக்காக நடத்தப்பட்ட பயிற்சி முகாம் மிக ஆசீர்வாதமாக அமைந்துள்ளது. 2 பெண்கள் தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் வெளிப்படையாக அறிக்கையிட்டுள்ளனர். மேலும் இப்போது அவரது குடும்பம் கிறிஸ்துவின்மீது விசுவாசம் வைக்க ஆரம்பிக்கின்றனர். மஞ்சுளா பிசாசு பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். கடும் தீக்காயங்களினால் அவதிப்பட்டு வந்த நமது விசுவாசி சாமுவேல் சி.எம்.சி. மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்று வந்தப்பின் நன்கு சுகமாகி வருகிறார். ஜோகிவாரிபள்ளி ஆராதனையை நிறுத்த விசுவாசிகளை மிரட்டிக்கொண்டிருந்த சுப்ர மணிக்காக ஜெபித்த ஜெபத்தை தேவன் கேட்டு, தற்போது எவ்வித தடையுமின்றி ஆராதனை நடைபெற தேவ கிருபை கிடைத்துள்ளது. வெல்லப்பாகு வடிக்கும் வேலையின் நிமித்தம் உண்டான தீ விபத்திலிருந்து தனமணி காப்பாற்றப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பெருமாள்பள்ளி கிராம விசுவாசி களைத் துன்பப்படுத்தும் நரசிங்கப்பா மனந்தி ரும்பவும், சரீரத்தில் கட்டியினால் அவதிப்படும் அவரது மனைவி சுகமடையவும்; விசுவாசத்தி லிருந்து பின்மாற்றமடைந்து தீய சக்திகளோடு போராடிக்கொண்டிருக்கும் புல்வான்டலபள்ளி கிராம நமது விசுவாசியொருவர் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வர; கிறிஸ்துவின்மீது விசுவாசம் கொண்டிருப்பதால், தனது சொந்த கிராமத்தினரால் துன்புறுத்தப்படும் பியூலா தனது விசுவாசத்தில் உறுதியாக நிற்க; சுக மற்றோர் அநேகர் தங்களது நம்பிக்கையை கிறிஸ்துவின்மீது வைத்து நற்சுகம் பெற; தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கையிடக் காத்திருக்கும் 12 பேருக்காக; நமது வாலிப விசுவாசிகளுக்கு ஏற்ற கிறிஸ்தவ வாழ்க்கைத்துணைகள் அமைய; முக்கிய 2 கட்டுகளாகிய குடி மற்றும் பிசாசு கட்டுகளில் சிக்குண்டு விடுதலைக்காக ஏங்கித்தவிக்கும் மக்களுக்காக ஜெபிப்போம்.

## மதனபள்ளி:

### வெங்கடேசன் & சசிகலா

**துதிக்க:** தெக்குலபாளையம் என்ற இடத்தில் புதிதாகச் சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. 5 இடங்களில் விசுவாசிகளுக்கான இரவு ஜெபக்கூட்டங்களும், 3 இடங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளும், 3 இடங்களில் ஊழியப்பின்தொடர்பணிகளும் சிறப்பாகச் செய்யப்பட்டுள்ளன. தீய ஆவியின் பிடியி லிருந்தும், வலிப்பு நோயிலிருந்தும் மதுர வேணி விடுதலையும் சுகமும் பெற்றுள்ளார். சிவானியை அவரது பெலவீனத்திலிருந்து தேவன் காத்ததோடு, அவரை விவாகரத்து செய்யும் நிலையிலிருந்த அவரது கணவரின் மனநிலையையும் மாற்றியுள்ளார். தன்னிடம் கொடுக்கப்பட்ட சுவிசேஷ கைப்பிரதிகளைக் கிழித்தெறிந்த மல்லிகார்ஜுன் மனம்மாறி, தானாகவே நமது மிஷனரிகளை அவரது வீட்டில் வந்து ஜெபிக்க அழைப்பு விடுத்துள்ள தற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ள கைவரம் பஜன் கூட்டத்தாரின் தலைவர் எல்லம்மா தாஸ் மனம்மாறி, இயேசுவை தனது இரட்சகராக ஏற்க; தோல் ஒவ்வாமை மற்றும் சரீரம் முழுவதுமான புண்களிலிருந்து சரிகாவிற்கு அற்புத சுகம் கிடைக்க; இனிவரும் நாட்களில் நடக்கவிருக்கும் தேடுவோர் முகாம்கள், கிராம சுவிசேஷ ஊழிய நிகழ்ச்சிகள், விசுவாசிகள் பயிற்சி நிகழ்ச்சிகள் போன்ற மேலும் சில ஊழியச்செயல்பாடுகள் யாவும் மிகுந்த கனியுள்ளதாக அமைய ஜெபிப்போம்.




திருமதி. நகோமி மேத்யூ ஜெபராஜ்
திரு. ஏசு பாபு A., திரு. நிரஞ்சன் பால் L.

### பெனுகொண்டா: தேசாய் திலீப் பாய் & ராந்தே லக்ஷ்மிபேன்

**துதிக்க:** தேவ வார்த்தையை 530 பேர் புதிதாகக் கேட்டுள்ளனர். ஒருவர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளார். 5 புதிய ஏற்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. கொடிகொண்டா திருச்சபையில் வாலிபர் பயிற்சி நிகழ்ச்சி சிறந்த முறையில் நடத்தப்பட்டுள்ளது. கிரமமாக நடந்துக்கொண்டிருக்கும் அலைபேசி கூட்டிணைப்பு ஜெபம் விடியற்காலம் 5 மணிக்கு தினந்தோறும் மிகுந்த பயனுள்ளதாக இருந்து வருகிறது. கோனிபென்டா மற்றும் மக்காஜிபள்ளி கிராமங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகள் சிறப்பாக நடந்தேறியுள்ளன. முதற்குழந்தையின் இழப்பிற்குப்பின் அருணா தற்போது 2-வது குழந்தையின் பிறப்பின் சந்தோஷத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தை எதிர்த்துவரும் சோமசேகர் மற்றும் அஞ்சினம்மாவின் மகன் இருவரும் கிறிஸ்துவின் அன்பை ருசித்திட; மூச்சுத்திணறல் பிரச்சினையிலிருந்து ஓபுலேஷ் சுகம் பெற; நந்தினி, ராகேலம்மா மற்றும் மரியம்மாவிற்கு மழலை பாக்கியம் அருளப்பட; லலிதம்மாவின் கணவர் குடிப்பழக்கத்திலிருந்து விடுபடவும், அவர் தனது மனைவியை ஆராதனைக்குச் செல்ல எதிர்ப்பின்றி அனுமதிக்கவும் ஜெபிப்போம்.

## தமிழ்நாடு

### திருவள்ளூர்:

### பால் ஆனந்தன் & சாரா ஜோதி

**துதிக்க:** தக்ஷணாமூர்த்தி & கமலா தங்களது விளைநிலங்களில் நல்ல அமோக அறுவடையைப் பெற்றுள்ளனர். கோபால்புரம் மற்றும் காக்கா கண்டிகை பகுதிகளில் நடைபெறும் ஆராதனைகளில் புதிதாக வந்து கலந்து கொள்பவர்களுக்காகவும், கிருஷ்ணாபுரம் பகுதியைச் சார்ந்த காந்தம்மாள், உஷா, சங்கீதா மற்றும் முத்துக்கொண்டபுரத்தைச் சார்ந்த எஸ்தர் ஆகியோர் கிறிஸ்துவில் வளர்ந்து வருகிறதற்காகவும் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்களது பெற்றோரை இழந்து தவிக்கும் விசாலாட்சி, காயத்ரி மற்றும் வந்தனாவின் எதிர்கால வாழ்விற்காக; தனது கணவரை இழந்து துயரத்திலிருக்கும் வேணுகோபாலபுர காஞ்சனாவும், குடும்பத்தினரும் ஆறுதலடைய; கிருஷ்ணாபுரத்தைச் சார்ந்த ராஜேந்திரன் விபத்தினால் தன் காலில் உண்டான காயத்திலிருந்து விரைவில் குணமடைய; முத்துகொண்டபுரம் கிராம மக்கள் தங்களது வறுமை, அறியாமை, மூடப்பழக்கவழக்கங்கள், குடி மற்றும் போதைப் பழக்கங்களிலிருந்து முற்றிலுமாக விடுபட ஜெபிப்போம்.

### மிச்சேரி:

### தர்மராஜ் R.R. & மரியசெல்வி

**துதிக்க:** இயேசுவின் நற்செய்தியைக் குறித்து 30 பேர் முதல்முறையாகக் கேள்விப்பட்டுள்ளனர். சுவிசேஷ எதிர்ப்பாளர்களின் தீய கரங்களுக்கு நமது ஊழியர்கள் விலக்கிக் காக்கப்பட்டுள்ளனர். மூச்சுத்திணறல் பிரச்சினையிலிருந்து கண்ணப்பன் சுகமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வளர்ச்சியற்ற மனநிலை பாதிப்பிலிருக்கும் வாலிபனான கௌதமன் அற்புத சுகமடையவும், அவருடைய முழு குடும்பமும் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்கவும்; சங்கரலிங்கமின் வீட்டில் வைத்து நடைபெறும் ஜெபக்கூட்டத்திற்கு குக்கல்பட்டி கிராமத்திலிருந்து அநேகர் வந்து கலந்து கொள்ள; இருதயக் கோளாறிலிருந்தும், பக்கவாதக் கோளாறிலிருந்தும் கண்ணய்யன் முழுசுகம் பெற; சின்னராஜ் மற்றும் கிருஷ்ணனின் குடும்பங்கள் கிறிஸ்துவின் அன்பால் தொடப்பட ஜெபிப்போம்.

384
மிஷனரி ஆல்பம்



# திரு. புஷ்பராஜ் & திருமதி. ஜோதி நிர்மலாபாய் குடும்பம்

சகோ. புஷ்பராஜ், இந்தியாவின் தென்கோடியான குமரி மாவட்ட குலசேகரம் பகுதியிலுள்ள இட்டகவேலி கிராமத்தில் திரு. ராமைய்யன் & திருமதி. லைசம்மாள் தம்பதியரின் 2-வது மகனாக 05.05.1977-ல் பிறந்தார். சிறுவயதில் குடும்பத்தில் அனுபவித்த வறுமையினிமித்தம் தன் அன்பு பாட்டி மற்றும் சித்தி யின் அரவணைப்பில் மலவிளை என்ற ஊரில் அங்குள்ள பெந்தெகொஸ்தே திருச்சபையின் போதனையால் கிறிஸ்தவப்பாதையில் வளர்க்கப்பட்டார். தனது பள்ளிப்படிப்பை முடித்ததும், குடும்பச் சூழ்நிலையினிமித்தம் மும்பை பட்டணத்திலுள்ள தாராவி சென்று, அங்குள்ள FMPB நண்பர்களோடு ஈடுபாடு கொண்டார். அப்போது செம்பூரில் நடந்த கிதியோனியர் முகாமில் திரு. கிங்ஸ்லி அருணோதய குமார் அண்ணனின் தேவசெய்தியின் மூலம் இரட்சிப்பின் அனுபவம் பெற்றார். பின் மாலத்தீவு, குவைத் என வெளிநாடுகளில் சென்று பணிபுரிந்தார். குவைத் செல்லும்வழியில் நடுவானத்தில் விமானம் பழுதடையவே, மரணவிளிம்பில் தேவனை நோக்கிக் கூப்பிட்டு தன் வாழ்வை அர்ப்பணித்தார். பின் இந்தியா திரும்பியதும் 2008-ம் ஆண்டு நடைபெற்ற மாநில முகாமில் கலந்துகொண்டு, தன் வாழ்வை மிஷனரிப் பணிக்கென அர்ப்பணித்தார். ஜுன் 2008 முதல் உ.பி.யிலுள்ள ஜான்சியில் ஒருவருடம் மிஷனரிப்பயிற்சி மேற்கொண்டார். பின் ஏப்.29, 2009-ம் ஆண்டு குஜராத்திலுள்ள ஜாவ்டா பள்ளியில் ஊழியம் செய்துவந்த சகோதரி. ஜோதி நிர்மலாபாயை மணம் முடித்தார்.

சகோதரி. ஜோதி நிர்மலாபாய், குமரி மாவட்ட சுவாமியார்மடம் பிலாவிளையைச் சேர்ந்த FMPB ஜெபக்குழு அங்கத்தினரான திரு. ராஜைய்யன் & திருமதி. தாமரி அவர்களின் 5-வது மகளாக 01.07.1981-ல் பிறந்தார். சிறுவயதிலிருந்தே கிறிஸ்தவ ஒழுக்கத்தின்படி ஆலய ஈடுபாட்டுடன் மிகவும் கட்டுப்பாடு நிறைந்த சூழ்நிலையில் வளர்க்கப்பட்டார். இவரது தந்தை மூலம் ஆலயங்கள்தோறும் நடத்தப்படும் FMPB-ன் விரிவாக்கப்பணியின் படக்காட்சி ஊழியத்தின் மூலம் ஊழிய தாக்கம் பெற்றார். அதில் மால்தோ மக்களின் மருத்துவ அவலநிலை கண்டு, தான் மருத்துவராகி ஊழியம் செய்ய வேண்டும் என தனது 4-ம் வகுப்பில் அர்ப்பணித்துக்கொண்டார். ஆனால் தன் வாலிபப்பருவத்தில் தனது அழைப்பை மறந்து, தேவனை விட்டு வெகுதூரம் சென்றார். தான் நினைத்ததுபோல மருத்துவத்துறையில் இடம் கிடைக்காததால், நாகர்கோவில் WCC-ல் B.A.,(Eng) பட்டப்படிப்பைத் தொடர்ந்தார். மிகவும் விரக்தி அடைந்த நிலையில் ஆக.1998-ம் ஆண்டு நடந்த FMPB வாலிபர் கூடுகையில் கலந்துகொண்டு, தன் வாழ்வைத் திரும்பவும் ஊழியத்திற்கென்று அர்ப்பணித்தார். 2001-ல் B.Ed., பட்டப்படிப்பை மேற் கொண்டார். பின் ஜுன் 2002 FMPB-ல் இணைந்து, ஜான்சி உ.பி-ல் ஒருவருட மிஷனரிப்பயிற்சியை முடித்து, 2003 ஏப்.17-ல் ஜாவ்டா பள்ளியில் தனது ஊழியத்தைத் தொடர்ந்தார். பின்பு ஆக.2005-ம் ஆண்டு அப்பள்ளி அரசு அங்கீகாரம் பெறும் கட்டாயத்தால் இவர் பள்ளியின் தலைமை ஆசிரியையாகப் பொறுப்பேற்றார். 2009-ம் ஆண்டு திருமணத்திற்குப்பின் குடும்பமாக மீண்டும் ஜான்சியிலும், பின்னர் 2010 முதல் 2012 வரை பிப்பள்வாடாவின் LTI பொறுப்பையும் ஏற்று, பள்ளியிலும் ஊழியத்தைத் தொடர்ந்தனர். 2012-ல் முதுகலை பட்டப்படிப்பைப் பயின்றார். பின் 2012 முதல் 2015 வரை நேத்ரங் விடுதியில் பணியமர்த்தப்பட்டனர். மீண்டும் ஜுன் 2015-ல் ஜாவ்டா பள்ளியில் தலைமையாசிரியையாகவும், ஆண்கள் விடுதிப்பொறுப்பாளராகவும் பணிமேற்கொண்டனர். பின் 2017 முதல் 2022 மே வரை குடும்ப மாகப் பள்ளியில் ஊழியம் செய்தனர். தற்போது 2022 ஜுன் முதல் சொரம்பா பணித்தளத்தில் சௌதிரி மற்றும் கமித் இனமக்கள் மத்தியில் ஊழியத்தை மேற்கொள்கின்றனர்.

இவர்களுடைய மகன்களான கிஃப்ட்சன் ஜெ. ராஜ் (D.O.B. 02.04.2010) 8-ம் வகுப்பிலும், கிறிஸ்டன் ஜெ. ராஜ் (D.O.B. 06.08.2013) 4-ம் வகுப்பிலும் டோனாவூரில் உள்ள சந்தோஷ வித்யாலயாவில் பயின்று வருகின்றார்கள். இக்குடும்பத்தை நமது ஜெபத்தால் தாங்குவோம்.





***Published by:*** S. John Berlin on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. John Berlin***